₹10
fmpb

# அறைகூவல்

October 2025
Issue 10
Volume 55

*“போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்” 1 தீமோ. 6:6*

## எளிய வாழ்க்கை

எளிய வாழ்வில்
இன்னும்
அதிகமாய்...



இவைகளிலும் அதிகமாய்
யோவான்.21:15



# ஆரம்ப வரிகள்...

## எளிய வாழ்க்கை: கிறிஸ்துவுக்குள் உண்மையான செல்வம்

Just as I am என்ற தனது சுய சரிதையில் கரிபியன் தீவில் நடந்த மறக்கமுடியாத ஒரு நிகழ்வை பில்லி கிரஹாம் பதிவிடுகிறார். அத்தீவில் வசித்த பெரும் பணக்காரனான ஒருவர் ஒருமுறை பில்லி கிரஹாமையும், அவரது துணைவியாரையும் விருந்துக்கு அழைத்திருந்தார். செல்வ சீமானாய் வாழ்ந்த அவரிடம் ஆடம்பர படகு, தனி விமானம் மற்றும் பல வசதிகள் இருந்தாலும் அவர் **'உலகிலேயே நான் ஒரு பரிதாபகரமான மனிதன்'** என்று கண்ணீரோடு கூறினார். அன்று மாலையில் தனது மனைவியை இழந்து, உடல்நலம் குன்றிய தன் இரண்டு சகோதரிகளைப் பராமரித்து வந்த ஒரு ஏழைப் போதகரை பில்லி குடும்பத்தினர் சந்தித்தனர். அவரிடம் பணமோ, வசதியோ இல்லாவிட்டாலும் அவர் **'இத்தீவிலே நான்தான் சந்தோஷமான மனிதன்'** என்று கூறியதைக் கேட்ட பில்லி கிரஹாம் யார் உண்மையான செல்வ சீமான் என்பதை உணர்ந்துகொண்டார். செல்வம் என்பது நம்மிடமுள்ள சொத்துக்களை கொண்டதல்ல, மாறாக நமது குணம் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான நமது மகிழ்ச்சியைச் சார்ந்தது. இவ்வுண்மை நம் இயக்கத்தின் ஏழாவது நெறிமுறையான **எளிய வாழ்வு** என்பதோடு ஒத்துபோகும் (1தீமோ.6:6).

இன்றைய காலக்கட்டத்தில் எளிய வாழ்வு முறை என்பது சாத்தியமற்றதாகத் தோன்றலாம். ஆனால் நாம் அதை பின்பற்றும்போது, நமது வாழ்வின் இன்றியமையாத தேவ ராஜ்யத்தின் பணிக்கு நேராய் நம்மை திசைத்திருப்புகிறதை எபி. 12:1 ஞாபகப்படுத்துகிறது. எளிய வாழ்க்கை முறையானது நமது வாழ்வின் நேரம், பெலன், ஆரோக்கியம் மற்றும் நாம் செலவிடும் பழக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எளிய வாழ்வு முறை என்பது போதுமென்கிற மனது அல்லது திருப்தியான வாழ்வு முறையாகும். இந்த திருப்தியான வாழ்வு நன்றி நிறைந்த உள்ளத்திலிருந்து ஆரம்பிக்கிறது. தேவன் நம் வாழ்வில் கொடுத்த ஆசீர்வாதங்களை கருத்தில் கொண்டு, நமக்கு இருப்பதில் மனநிறைவோடு வாழ்வதில்தான் இருக்கிறது. இவ்வுலகம் **பிரமாண்டங்களை** துரத்திக்கொண்டிருக்கும் சமயத்தில் நன்றியுணர்வுள்ள இருதயம் நம்மிடம் இல்லாததிலிருந்து ஏராளமாக இருப்பவற்றின் மீது நமது கவனத்தை திருப்புகிறது. இந்த மனநிலை நன்றியுணர்வு டைரி (gratitude diary) எழுதும் முறையின் மூலம் வளர்த்துக்கொள்ளலாம். இதற்கு மாறாக பிறர் வாழ்வோடு நம்மை ஒப்பிடும்போது நமது மகிழ்ச்சி களவுபோய் அமைதலற்ற நிலை நம்மில் காணப்படும்.

எளிய வாழ்வுக்கு, பவுல் ஒரு முன்மாதிரியாக உள்ளார் (பிலி. 4:11-14). இயேசு கிறிஸ்துவும் ஒரு உயர்தர வாழ்வை தெரிந்தெடுத்திருக்கலாம். ஆனாலும் அவர் எளிய வாழ்வினையே தெரிந்தெடுத்து வாழ்ந்து காட்டினார். எனவே உண்மை செல்வமானது நம்மிடமுள்ள ஆஸ்தியோ, புகழோ அல்லாமல் கிறிஸ்துவின் மீதுள்ள நங்கூரத்திலே மாத்திரம் கிடைத்து, நன்றியுணர்வு மற்றும் மன நிறைவுள்ள வாழ்வில் பிரதிபலிக்கிறது. நாமும் எளிமையான வாழ்வு வாழ்ந்து, முழு இதயத்தோடு தேவ பணி நிறைவேற்றி, நமது அனைத்து தேவைகளும் கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாகும் என்று விசுவாசித்து, நம்மையும் நமதனைத்தையும் அவரின் இராஜ்யத்திற்கு செலவு செய்வோம்.

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**"... நான் எந்த நிலைமை யிலிருந்தாலும் மனரம்மிய மாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்."**
*பிலி.4:11-12*

**கிறிஸ்துவின் வாழ்க்கை பணிவும், எளிமையுமான வாழ்க்கையாக இருந்தது. ஆனால் அவரது பணி மிகவும் உயர்ந்தது. எல்லாவற்றிலும் கிறிஸ்து நமக்கு ஒரு முன்மாதிரி.**
*– எலன் ஜி. வைட்*

**"சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்."** *ஏசா.29:19*

**நான் கர்த்தரை விசுவாசித்து, அவரிடத்தில் என் மனநிறைவைக் காணும்போதுதான் உண்மையான எளிமை தொடங்குகிறது.**
*– மார்க் ராபர்ட்ஸ்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை தேவ இராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்க அனுப்பியபோது அவர்களை நோக்கி: "**வழிக்கு தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக்கொண்டு போகவேண்டாம்**" (லூக். 9:3) என்று கூறினார். அதாவது அதிக சுமையில்லாத எளிய வாழ்வின் மூலமாக சுவிசேஷ ஊழியத்தை செய்ய வேண்டும் என்று இயேசு கிறிஸ்து அறிவுறுத்துகிறார். எளிய வாழ்வு என்பது நமது விருப்பு வெறுப்பைப் பொருத்ததல்ல. மாறாக அது நமது வாழ்க்கையின் இன்றியமையாததும், நம் சாட்சியின் ஒரு பகுதியுமாகும்.

எளிய வாழ்க்கை தேவனுடைய பணியின் மையமாக இருக்கிறது. தேவன் ஆபிரகாமை அழைத்தபோது எல்லா வற்றையும் **ஊர்** தேசத்தில் விட்டுவிட்டு தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனார் (ஆதி.12:1). ஆதித் திருச்சபை விசுவாசிகள் ஒருமித்திருந்து... ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக சகலத்தையும் பகிர்ந்து கொடுத்தார்கள் (அப்.2:44,45). நான் எந்த நிலைமையி லிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் என்று பவுல் பிலி.4:11இல் கூறுகிறார். நற்செய்திப் பணி செய்த ஒவ்வொரு தலைமுறையின் ஆண்களும், பெண்களும் சுமையின்றி எளிமையாக வாழ்ந்து தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்.

இன்றைய உலகம் பொருள் சேர்க்கவும், மேம்படவும், போட்டியிடவும் ஊக்கப்படுத்துகிறது. ஆனால் தேவனு டைய இராஜ்யம் நாம் எளிமையாக வாழவும், பிறரை விடுவிக்கவும், மற்ற வர்களுக்கு சேவை செய்யவும் நம்மை அழைக்கிறது. எளிமையான வாழ்வு என்பது ஏதோ பற்றாக்குறையோடு வாழ்வதல்ல, அது தேவ பக்தியோடு வாழ்வதைக் குறிப்பிடுகிறது. நமது இருதயத்தை பொருளாசையிலிருந்து விடுவிக்கும்போது நமது கைகள் தாராளமாய் மற்றவர்களுக்கு கொடுப்ப தற்கும், நமது கால்கள் தேவன் அனுப்பும் இடத்திற்கு செல்வதற்கும் நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

## தேவ இராஜ்யத்தின் எளிய வாழ்வுக்கான அழைப்பும், ஆசீர்வாதமும்

இயேசு தனது மலைப் பிரசங்கத்தில் தேவ இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பற்றி போதித்தார். மத். 5:1-12இல் அவர் நல்நடத்தைக்கான ஆலோசனைப் பட்டியலை வழங்காமல் அதிலும் மேலான மாறுபட்ட புரட்சிகரமான வாழ்க்கைமுறையைப் போதித்தார். அவரது வார்த்தைகள் இவ்வுலக அதிகாரம், செல்வம் மற்றும் இலட்சியம் போன்றவைகளை மாற்றியமைத்து மனத்தாழ்மை, தயவு, பரிசுத்தம் மற்றும் ஒப்புக்கொடுத்தலுக்கு நேராக அவருடைய சீஷர்களை வழிநடத்தியது. மலைப் பிரசங்கம் பெருமை, உலக ஈர்ப்பு, ஒழுங்கற்ற வாழ்க்கையிலிருந்து நம்மை நம்மை விடுத்து தேவ பணிக்கு

முழுமையாய் அர்ப்பணிக்கும் எளிய வாழ்க்கைக்கு நேராய் நடத்துகிறது.

## ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது

ஆவியில் எளிமையாக இருப்பதென்பது நாம் முற்றிலும் தேவனைச் சார்ந்து இருக்கிறோம் என்பதை அறிக்கை செய்வதாகும். செல்வம் மற்றும் உடைமைகள் மூலம் பாதுகாப்பைக் கட்டியெழுப்ப உலகம் நமக்கு கற்பிக்கிறது. ஆனால் இயேசு தன்னை முழுமனதுடன் விசுவாசிக்கும்படி நம்மை அழைக்கிறார். எளிய வாழ்க்கையின் துவக்கமானது தற்சார்பை விடுத்து தேவனை சார்ந்துகொள்ள செய்கிறது. நாம் உலக செல்வத்தை, பெருமையை கைவிடும்போது உண்மையான செல்வத்தை கிறிஸ்துவில் காணமுடியும். ஊழியத்தில் இந்த நிலையானது தேவன் அனுப்பும் இடமெங்கும் செல்லவும், நமது உடைமைகளை இழந்துவிடுவோமோ என்ற பயமின்றி, பாரமின்றி வாழவும் உதவுகிறது.

## துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்

உலகப்பிரகாரமான மனிதர்கள் தங்களுக்கு ஏற்படும் அநீதி, வறுமை போன்றவற்றினால் உடைந்து போகிறார்கள். கிறிஸ்து இல்லாத அவர்களது வாழ்க்கை துயரத்தினால் நிறைந்து ஆறுதலற்று காணப்படுகிறது. ஆனால் தேவனே அவர்களை ஆறுதல் படுத்த நெருங்கி வருகிறார். தேவனுடைய இருதயத்தைப் பாதிக்கும் சம்பவங்கள் நம் இருதயத்தைப் பாதிக்கும்போதுதான் உண்மையான ஊழியம் ஆரம்பமாகிறது. இவ்வாறு நாம் பிறருக்காக துயரப்படும்போது இரக்கத்தோடும், தியாகத்தோடும் மற்றவர்களுக்காக சேவை செய்ய முடியும்.

## சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்

சாந்த குணம் என்பது பலவீனமல்ல, மாறாக அது தேவன் அருளும் வலிமை. சாந்த குணமுள்ளவர்கள் அதிகாரம் மற்றும் வசதிகளுக்காக வாழாமல் தியாகத்துடன் வாழ்பவர்கள். எளிமை என்பது சுயநலம் மற்றும் அந்தஸ்தை விட்டு சேவை செய்வதை தெரிந்தெடுப்பது. எனவே தேவன் சாந்த குணமுள்ளவர்களிடம் தனது பணியை ஒப்படைக்கிறார். தேவனிடம் சரணடைவதின் மூலம் தேவ இராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும்.

## நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்

எளிமை என்பது தேவனுடைய நீதியை இப்பூமியில் காண ஆழ்ந்த வாஞ்சையை ஏற்படுத்துகிறது. நம்மை கவர்ந்திழுக்கும் பொருளாசையை ஒதுக்கினால்தான் தேவனுடைய நீதி, உண்மை, தேவ ராஜ்யம் ஆகியவற்றில் கவனம் செலுத்த முடியும். பசித்தவர்களுக்கு உணவளித்து, ஒடுக்கப்படுகிறவர்களுக்கு நியாயம் செய்து, சுவிசேஷத்தை அறிவிக்க முடியும்.

## இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்

நமது வாழ்க்கை பேராசையால் கட்டப்படாத நிலையில் இரக்கம் மேலோங்கும். எளிமை நம் பிடியைத் தளர்த்தி

மற்றவர்களின் தேவையை கவனிக்கவும், பூர்த்தி செய்யவும் நமக்கு உதவுகிறது. இரக்கமுள்ள சீஷர்கள் ஆறுதலைத் தேடாமல் உடைந்த உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்க தமது வளங்களை பயன்படுத்துகின்றனர். இரக்கம் என்பது சிறுமைப்பட்டவர்களுக்கும், இழந்துபோனவர்களுக்கும் சிலுவை யின் சாட்சியை பகிர்ந்தளிப்பதாகும்.

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்

இருதயத்தில் சுத்தமானவர்கள் தேவனுக்கு தங்கள் வாழ்வை முழுமனதுடன் அர்ப்பணித்தவர்கள். எளிமை நமது விசுவாச குழப்பங்களை நீக்கி நமது அந்தஸ்து மற்றும் செல்வங் களை வெறுத்து தேவனைக் குறித்த நமது தரிசனத்தை கூர்மையடையச் செய்கிறது. நமக்கானவைகளைத் தேடாமல், தேவ மகிமைக்கானவைகளை மட்டும் தேடும் தூய இதயமுள்ள ஊழியர்கள் மூலம் ஊழியம் செழிக்கிறது.

## சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனு டைய புத்திரர் என்னப்படுவார்கள்

சமாதானம் பண்ணுகிறவர்கள் போட்டியிடுபவர்களாகவோ, பேராசை உள்ளவர்களாகவோ இயங்க முடியாது. எளிய வாழ்வானது சமாதானம் பண்ணு வதற்கேதுவாக ஒருவரை நடத்தி, உடைமைகளுக்கு மேலாக உறவையும், போட்டிக்கு மேலாக ஒப்புரவாகுதலையும் முக்கியப்படுத்துகிறது. தேவப்பணியில் சமாதானம் பண்ணுகிறவர்கள் கிறிஸ்துவினுடைய ஒப்புரவாக்கும் அன்பை உலகிற்கு காட்டும் தேவ பிள்ளைகளாகத் திகழ்வார்கள்.

## நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது

மலைப் பிரசங்கத்தில் நாம் முக்கியமாக காண்பது நமது வாழக்கை உலக மதிப்பீடுகளுக்கு எதிர்மாறாக உள்ளது. பொருள்களை குவிக்கும் இந்த கலாச் சாரத்தில் எளிய வாழ்க்கை என்பது முட்டாள்தனமாக தோன்றலாம். ஆகிலும் கிறிஸ்துவுக்காக துன்பங்களை அனுபவிப் போர் தேவனுடைய இராஜ்யத்தின் உண்மைத்தன்மையை ருசிப்பார்கள். தேவ ஊழியர்கள் பல நூற்றாண்டுகளாக இழப்புகளையும், கடினப்பாதைகளையும் கடந்து இவ்வுலக வசதிகளைவிட நித்திய வெகுமதியே மேலானதென்று அறிந்தி ருந்தார்கள். ஊழிய வரலாற்றில் அநேக ஆண்களும், பெண்களும் சுவிசேஷத் திற்காக எளிய வாழக்கை முறையை பின்பற்றினார்கள்.

வில்லியம் கேரி சிக்கனமாக வாழ்ந்து தனக்குள்ள வளங்களை வேதாகம மொழிப்பெயர்ப்புப் பணிக்காக தாரை வார்த்துவிட்டார். அன்னை தெரேசாவும் எளிய வாழ்க்கையைப் பின்பற்றி வறியவர்களுடன் வாழ்ந்தார். பண்டித ராமாபாய் அவர்களும் தனது சுகவாழ்வை ஒதுக்கி இந்தியாவின் விதவைகள் மற்றும் அனாதைகளின் மேம்பாட்டுக்காக வாழ்ந்தார். இவர்களது வாழ்வு நமக்கு எளிமையான வாழ்வே வலிமை யானதென்றும், அந்த வலிமை சேவை செய்யவும், மனமுவந்து கொடுக்கவும், தன்னை வெறுத்து பிறரை நேசிக்கவும் நமக்கு ஞாபகமூட்டுகிறது.

நமது காலத்தில் வாழ்ந்த அன்பு அண்ணன் பேட்ரிக் ஜோஷ்வா அவர்கள் நமது இயக்கத்தின் மதிப்பீடுகளுக்கு ஆசானாக வாழ்ந்து மலைப் பிரசங்கத்தை எதிரொலிக்கின்ற மாதிரி

யாகத் திகழ்ந்தார். அவர் சாதாரண வசிப்பிடத்தைத் தெரிந்துகொண்டு தனக்கிருப்பதே போதும் என்ற மனநிறைவோடு வாழ்ந்தார். தாழ்மை, சாந்தம், வெளிப்படைத்தன்மை கொண்ட வாழ்வு மற்றும் பணிவிடைத் தலைவராய் பரிசுத்த உள்ளத்தோடு வாழ்ந்தார். அவர் அடிக்கடி நமக்கு ஞாபகப்படுத்துகிறது என்னவென்றால் **தேவப்பணி பொருளையும் அந்தஸ்தையும் வைத்து முன்னேறுவதல்ல, அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையின் மூலம் மட்டுமே முன்னேற்றம் பெறும்.** அவர் கறைபடாத கரங்களோடும், களங்கமில்லா இருதயத்தோடும், ஆதிகால சீஷர்களைப்போல சுவிசேஷத்தை சுமந்தலைந்தார்.

கிறிஸ்துவர்களின் சந்தோஷம் உடைமைகளின் மேல் அல்ல, கிறிஸ்துவின்மேல் உள்ளதென்று உலகம் காணவேண்டும். எளிய வாழ்வு என்பது ஒரு தேவ ஊழியனுக்கு **இயேசுவே போதும்** என்ற உறுதித்தன்மையைக் காட்டுவதாகும். மலைப் பிரசங்கத்தின் சிறந்த கருத்துக்களை குறிப்பிட்ட சிலர் மாத்திரமல்ல, அனைத்து சீஷர்களும் பின்பற்றவேண்டியது அவசியம். எளிய வாழ்வு என்பது பெருமைக்கு மேலாக தாழ்மையையும், பேராசைக்கு மேலாக இரக்கத்தையும், சமரசத்திற்கு மேலாக புனிதத்தையும் விளக்குகிறது. நமது இல்லங்கள், சபைகள், மேலும் நமது இயக்கங்கள் அனைத்தும் இவ்வழைப்பைப் பெறுவதாக! இவ்வாறாக நாம் எளிய வாழ்வு வாழும்போது சுவிசேஷத்தின் ஒளி மிகவும் பிரகாசமாகவும், தேவ ஊழியம் எளிதாகவும், வேகமாகவும் பரவமுடியும்.

## ஊழியர் விழிப்புணர்வு கூட்டம் – மும்பை

இங்கு நடந்த கூட்டங்கள் இப்பட்டணத்திலுள்ள விசுவாசிகளின் மத்தியில் பேரார்வத்தையும், புத்துணர்வையும் அளித்து அனல் மூட்டியது. அநேகர் தங்கள் தனிப்பட்ட கரிசனைகளை விட்டு, தங்களுடைய கண்களால் பரந்துவிரிந்த, மாற்றத்தை எதிர் நோக்கி இருக்கும் பணித்தளங்களை நோக்கிப் பார்க்கும்படியாக சவால் விடுக்கப்பட்டது. ஜெபிக்கும்படி ஒப்புக் கொடுத்தவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

## IMA தேசிய தலைவர்களின் கலந்தாலோசனை – ஹைதராபாத்

இந்த கூடுகையானது தேசத்தின் எல்லா சுவிசேஷ இயக்கத் தலைவர்களையும் ஒருங்கிணையச் செய்தது. இக் கலந்தாலோசனையின் மூலம் ஒருவருடைய கருத்துக்களை மற்றவர் கேட்கவும், தேவனுடையத் திட்டத்தை அறிந்துகொள்ளவும், இதைப்போன்று சவால் நிறைந்த இக்காலத்தில் ஐக்கியத்தை வலுப்படுத்தவும் வாய்ப்பாக அமைந்தது. சீர்திருத்தம், புத்துயிர் பெறுதல், மறுமலர்ச்சி போன்ற தரங்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டன.

## அன்பின் சங்கமம் (ஸ்கேன் குடும்பக் கூடுகை) – சென்னை

கிறிஸ்தவ வியாபாரிகளின் குடும்பங்களான நமது ஆதரவாளர்களும், பங்காளர்களும் ஒன்றாக மகிழ்ச்சியுடன் கூடி வந்திருந்தது ஐக்கியத்தின் வெளிப்பாடாக அமைந்தது. இது உற்சாகமூட்டும் தருணமாகவும், மேலும் ஒருவரை ஒருவர் பெலப்படுத்தும் மற்றும் ஒருங்கிணைக்கும் ஒரே குடும்பமாகவும் காணப்பட்டது. உண்மையிலேயே அன்பு, ஜெபம், ஐக்கியம் இவையாவும் நம் இயக்கத்தின் முதுகெலும்பாகும்.

## நிர்வாகக் குழு கூட்டம்

இது வெறும் நிர்வாகக் கூட்டம் அல்ல, ஜெபத்திற்கும், பகுத்தறிதலுக்கும் வாய்ப்பளிக்கும் ஒரு புனித நிகழ்வு. நமது இயக்கத்தின் வளர்ச்சிக்குரிய முக்கியத் தீர்மானங்கள் தாழ்மையுடனும், தேவ ஞானத்தை சார்ந்தும் எடுக்கப்பட்டன. நாம் ஜெபத்திலே வேரூன்றும்போது நமது நிர்வாகமானது தேவனால் வழிநடத்தப்படுவதைக் காணமுடிகிறது.

## மண்டலம் மற்றும் பிராந்திய செயலர்கள் கூடுகை – பெங்களூரு

நமது இயக்கத்தின் தலைவர்கள் பல பிராந்தியங்களிலிருந்து வந்து ஊழியங்களை மதிப்பாய்வு செய்யவும், மறுசீரமைப்பு செய்யவும், புதிய யுக்திகளை புத்துணர்வுடன் கையாளவும் ஒன்றாக இணைந்தனர். இந்த தலைவர்களின் ஐக்கியமானது வெளிப்படைத்தன்மை கொண்டதாயும், ஆவியின் ஒருமைப்பாட்டை பிரதிபலிப்பதாகவும், கிறிஸ்துவை அறியாதோர்மேல் ஆழ்ந்த பாரம் கொண்டதாயும் அமைந்தது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நமது இயக்கத்தின் முதுகெலும்பை பெலப்படுத்துவதாக அமைகிறது.


## போதகர்களுக்கான தரிசனக் கூடுகை – தெலுங்கானா

போதகர்கள் தரிசனம் பெற்றவர்களாக சபையிலும், ஊழியத்திலும் சிறந்து விளங்கிட பயிற்சி அளிக்கப்பட்டது. அநேகர் தேவனுடைய இதயத் துடிப்பை பெற்று தேசத்திற்காக தங்களை அர்ப்பணித்து தங்கள் சபைகளை மிஷனெரிகளைத் தாங்கும் மற்றும் அனுப்பும் சபையாக உருவாக்க தீர்மானித்தனர்.

இந்த கூடுகைகளிலெல்லாம் தேவனுடைய உண்மையான வழிநடத்துதலைக் கண்டு தேவனைத் துதிக்கிறேன். ஆயினும் இவ்வாறு நாம் களிகூறும்போது இயேசு கிறிஸ்து மத்.5:10இல் கூறியபடி நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் அவர்களுடையது என்ற வார்த்தைகளை நினைவுகூற அழைக்கப்படுகிறோம். நமது பணித்தளங்கள் தொடர்ந்து வாய்ப்புகளை இழந்து, தடைகளை சந்தித்து வருகிறது. இதற்காக நாம் அனுதினமும் ஜெபிப்போம்.

பிரியமானவர்களே! இந்த சவாலான நாட்களில் உங்கள் ஜெபத்தை எதிர் நோக்கியிருக்கிறோம். நம் நாட்டில் பல பாகங்களில் கிறிஸ்துவின் பணிக்கு தீவிரமான எதிர்ப்புகள் பெருகிவருகின்றன. நமது ஊழியர்கள் எதிர்ப்புகளினாலும், கட்டுப்பாடுகளினாலும் பரீட்சிக்கப்படுகிறார்கள். நமது ஊழியர்களில் ஒருவர் சுவிசேஷத்தினிமித்தம் பிணை கைதியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இவரது பாதுகாப்புக்காகவும், விடுதலைக்காகவும், தேவ சமாதானம் இவரது குடும்பத்தை ஆட்கொள்ளவும் தயவாய் ஜெபிப்போம். வடஇந்தியாவில் அநேக பணித்தளங்களில் தீவிர எதிர்ப்புகள் பரவி வருவதால் நமது குழுவிற்கு தேவையான தைரியமும், சாட்சியில் உறுதியாய் நிற்கும் கிருபையையும் தேவன் அருள ஜெபிப்போம். பயங்கர அழுத்தத்தின் மத்தியில் பணி செய்யும் நமது ஊழியர்களை தேவன் ஞானத்தால் நிரப்பி, அவர்களின் விசுவாசத்தை பெலப்படுத்தி இருளிலிருக்கும் விளக்கு போல பிரகாசிக்க உதவி செய்யும்படி ஜெபித்துகொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் தூய பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**

## பாடுகளினூடே பரமனின் திட்டம் நிறைவேற்றுவதில்

# ‘எளிய வாழ்க்கை’

### – ஒரு வேதாகம பார்வை



## முன்னுரை

**‘எளிய வாழ்க்கை’** யின் அடையாளமாக மனுக்குலத்திற்கு மனுஷகுமாரனாக வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பான வாழ்த்துக்கள்! நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியாளர், பங்காளர், பயனாளிகளுக்கு குறிப்பாக **அறைகூவல்** பத்திரிக்கை வாசகர்களுக்கு, நமது நெறிமுறைகளில் ஒன்றான **எளிய வாழ்க்கை** என்ற பொருளில் அக்டோபர் மாத செய்தி அருள திட்டமிடப்பட்டுள்ளது. **எளிய வாழ்க்கை**யின் பொருள் என்ன? “ஆடம்பரமில்லாத, தேவைகளுக்கு ஏற்ப வாழும் வாழ்க்கை முறை, தேவையற்ற பொருட்களைக் குறைத்து இயற்கையோடு இணைந்து வாழ்தல் மற்றும் மன நிறைவுடன் இருத்தல்” என்பது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுவான புரிதல்: “தனிப்பட்ட மற்றும் ஊழிய வாழ்வில் இன்றியமையாத தேவையுடன் மட்டுமே வாழ அர்ப்பணித்தல்” என்பதாகும். இதன் பின்னணியில் 1 தீமோ.6:6 “போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்” என்ற வசனம் இம்மாத கருப்பொருள் வசனமாக வெளிப்பட்டுள்ளது. இந்த வேத வசனத்துக்கு வலிமையூட்டும் வண்ணமாக எளிய வாழ்க்கை வாழ்ந்து, தேவ திட்டம் நிறைவேற்றிய மூன்று மாதிரிகளையும் அதற்கு ஒத்த தற்கால மிஷனெரிகளின் அனுபவங்களையும் பார்க்கலாம்.

## 1

### பிரித்தெடுக்கப்பட்டோர் மறுமலர்ச்சிப் பணியில் எளிய வாழ்க்கை – எலியா (Simple life in the Transformation of Pre-ordained People of God)

பிரித்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனத்தை ஆட்சி செய்த ஆகாப் அரசனின் பின்

மாற்றம்: சீதோன் ராஜாவின் குமாரத்தி யேசபேலை விவாகம் செய்தது மட்டு மல்ல ராஜகுமாரத்தியின் தெய்வமாகிய பாகாலை சேவித்து அதைப்பணிந்து கொண்டு தன் நாடாகிய சமாரியாவிலே பாகாலுக்கு கோவிலும், பலிபீடமும் எடுப்பித்தான் (1 இராஜா.16:30-32); விக்கிரக தோப்பையும் உண்டாக்கி கர்த்தருக்குக் கோபமூட்டினான் (16:33); அதுமட்டுமல்ல தேசமெங்கும் பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேரையும், யேசபேலினால் போஷிக்கப்பட்ட 400 தோப்பு விக்கிரக தீர்க்கதரிசிகளையும் பஞ்சகாலத்தில் ஆதரித்து வந்தான் (18:19); அதுமட்டுமல்ல, யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரித்தும் வந்தாள் (18:4,13). இந்தப் பின்னணியில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனம் கர்த்தரைப் பின்பற்றுவதா அல்லது பாகாலைப் பின்பற்றுவதா என்ற இரு நினைவில் குந்திக் குந்தி நடந்தார்கள் (18:21). இச்சூழலில் வாழ்ந்த தேவஜனத்தின் மறுமலர்ச்சிப் பணித்திட்டத்தில் அற்புத மாகப் பயன்படுத்தப்பட்டவர் அற்புத ஊழியர் எலியா. அவரை அற்புத ஊழியர்/தீர்க்கர் என்னும் தற்கால அடைமொழியில் அழைக்க காரணங்கள்: 1) கடைசி உணவை உண்டு உயிர்போக்கும் நிலையிலிருந்த விதவை குடும்பத் திற்குப் பஞ்சகாலத்தில் உணவளித்து, அவளுடைய பராமரிப்பில் கர்த்தரின் கட்டளைப்படி வாழ்ந்தது (17:8-16); 2) வியாதியினால் மரித்த விதவையின் மகன் நிமித்தம் பழிசாட்டப்பட்ட தீர்க்கர் மேலறையில் பிரேதத்தின் முன் ஜெபித்து, உயிரோடு எழுப்பி அதே விதவையின் வாயினால் நற்சாட்சி பெற்றது அற்புத மானது (17:17-24).

- பஞ்சகாலத்தில் கர்த்தரின் கட்டளைப் படி உணவிற்காக காகத்தை சார்ந்து கேரீத் ஆற்றங்கரையில் வாழந்தது (17:3-6);
- கடைசி உணவிற்குப்பின் வழிகாணாத வறுமையிலிருந்த விதவை வீட்டை உறைவிடமாகக்கொண்டு வாழ்ந்தது (17:8-16);
- அரமனையில் வாழும் அரசன் (18:19,20) மற்றும் அரமனை அதிகாரி (18:7,8) ஆகியோரை ஆன்மீக அதி காரத்தால் கட்டளையிடும் வலிமை;
- இருநினைவுகளால் ஆன்மீக வாழ்வில் வீழ்ச்சியடைந்த இஸ்ரவேல் ஜனத்தின் மறுமலர்ச்சியும், கள்ளத் தீர்க்கரின் முடிவும் தற்கால ஊழியரின் எளிமையான வாழ்வு மற்றும் திருச்சபையினூடே நிறைவேற்றும் பணிவாழ்வுக்கு மாதிரியாக அமை வதாக! (18:37-40).

இப்படிப்பட்ட எளியவாழ்க்கை வாழ்ந்த தீர்க்கரைப் பராமரித்த காகங்கள், சாரிபாத் விதவை வரிசையில் பாதுகாப்பற்ற நூறு தீர்க்கரை இரண்டு குகைகளில் பாதுகாத்து, பராமரித்த அரமனை அதிகாரி ஒபதியாவும் பாராட்டுக்குரியவன். பஞ்சகாலத்தில் தன் வருமானத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்து, நூறு தீர்க்கர் பராமரிப்பில் பிரதான கவனம் செலுத்தியது (18:4) தற்கால பங்காளரின் எளியவாழ்வுக்கு சிறந்த மாதிரியாக அமையட்டும். நம் முன்னோடி பங்காளர்களில் திரு. பி.டி. பாண்டியன் அவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக பன்னிரண்டு ஊழியர்களை ஆதரித்தார்கள். ஒருநபர் வருமானத்தில் மனைவி மற்றும் நான்கு குழந்தைகளுடன் வாழ்ந்து, தன் பிள்ளைகளின் ஆடைகளை

மூர்மார்க்கெட் பிளாட்பாரம் கடைகளில் வாங்கி, தன் எளிய வாழ்க்கை மூலம் மிஷனெரிகளை ஆதரித்த இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பங்காளரின் எளிய வாழ்வுக்கு ஓர் உன்னதமான முன்மாதிரி!

2

## பாரம்பரியவாதிகள் மறு மலர்ச்சியில் எளிய வாழ்க்கை – பேதுரு/யோவான் (Simple life in the Transformation of Precept – Oriented Pharisees and Jewish Traditionalists)

கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த் தெழுதல், சீஷருக்குத் தரிசனமாகி சர்வலோக மீட்புத்திட்டத்தை உறுதிப் படுத்தி பின் பரமேறுதல், புதிய ஏற்பாட்டு புதிய மீட்கப்பட்டோர் ஐக்கியத்திற்கு வித்திட்டது. பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற அப்போஸ்தலர் அப்.1:8இல் கூறப்பட்ட பிரதான கட்டளையை நிறைவேற்ற உறுதியாயிருந்தார்கள். இயேசுவின் பணி மாதிரிப்படி (மத்.4:23,24) பிரதான அப்போஸ்தலர் (பேதுரு, யோவான்) பிரசங்க பணி (அப்.2:13-42, 3:12-26, 4:8-13, 5:19-21, 10:27-48) மற்றும் பிரச்சனையைக் களையும் பணி; பாவத்தி லிருந்து விடுதலை (அப்.2:37,38); பிசாசு மற்றும் தீராத பிணியிலிருந்து விடுதலை (அப். 3:6-8, 5:14-16, 9:32,34), மரணத்திலிருந்து விடுதலை (அப்.9:40,41)ஐ அருளி ஊழியத்தை நிறைவேற்றினார்கள். இதன் விளைவாக பயனாளிகள் அல்லது விசுவாசிகள் (தற்கால சூழலில் விடுதலை பெருவிழா அல்லது ஆவிக்குரிய கூட்டத்தில் விடுதலைப் பெற்றோர்) தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக தங்கள் நிலங்களையும், ஆஸ்திகளையும் விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள் (அப்.4:34-37, 2:45). இப்படி கொட்டப்படும் திரளான ஆஸ்தி யின் மத்தியில் அப்போஸ்தலரின் எளிமையான வாழ்வு மிகவும் சிறந்த மாதிரிகள். இந்த எளிமையான வாழ்வை எவ்வாறு காணமுடிகிறது அல்லது அளவிடலாம்? அல்லது அப்போஸ்தலரின் எளிமையான வாழ்வின் வரையறைகள் (Benchmarks) என்ன?

- அப்போஸ்தலர் சேமிப்பு இன்றி பொது நலனுக்காக வாழ்ந்தது. அப்.3:6 – “வெள்ளியும் பொன்னும் என்னிடத்தி லில்லை.”
- இயேசுவை மட்டும் சொத்தாகக் கருதும் மனநிலை: அப். 3:6 “என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட” என்றனர். இது எண்.18:20இல் கூறப்பட்ட “... நானே உன்பங்கும் உன் சுதந்தரமுமாயிருக்கிறேன்” என்ற வாக்கை அனுதின வாழ்வில் செயல்படுத்தும் வெளிப்பாடு.
- தனது உறைவிடத்துக்காக விலையேறப்பெற்ற பயனாளிகள் படைக்கும் அரிய செல்வத்தைச் செலவிடாது எளியமுறையில் பங்காளர்/பயனாளிகளோடு அவர்களது இல்லத்தில் தங்கி தன்னை ஒரு பரதேசியாக (அப்.1:13, 4:23, 9:32-43, 10:25,48, 12:12, 1பேதுரு 1:2,17) அடையாளப்படுத்துவது;

- அப்போஸ்தலர் பாதத்தில் படைக்கப் பட்ட அரிய பொருட்செல்வத்தை தனக்கும் தன் எதிர்கால வாழ்வு/ பணிக்காக சேமிக்காது, படைத்த பங்காளர் நலனுக்காகப் பகிர்ந்தளிப்பது;
- புதிய சமூக படைப்புக்காக தன் பாதத்தில் படைக்கப்பட்ட அரிய செல்வத்தைப் பகிர்வது ஆகியவை யாகும். புதிய சமூகத்தின் உள்ளான மற்றும் வெளிப்படையான அடை யாளங்கள் என்ன? மூன்று குறியீடுகள்:

**– கறையில்லா சமூகம் –**
அப். 2:37-42, 9:35,42, 10:43-48;

**– குறைவில்லா சமூகம் –**
அப். 2:44-45, 4:34-35;

**– கரிசனையுள்ள சமூகம் –**
தேவையுள்ளோர் நலனில் கரிசனையுடன் பொருள் பகிர்தல், பிணியாளிகள் மீது கரிசனையுடன் இயேசுவின் நாமத்தில் விடுதலைபெற அப்போஸ்தலரிடம் கொண்டுவந்து உதவுதல் – (அப்.5:14-16, 9:38-41) என்பனவாகும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிப் பணியின் மூலம் தேவ ஒத்தாசையால் மறுமலர்ச்சிப் பெற்ற சமூகம் (கறையில்லா, குறையில்லா, கரிசனையுள்ள சமூகம்) மலர/உருவாக தங்கள் உடமைகள்/பொருட் செல்வதைப் பகிர்ந்து எளியவாழ்வு வாழ்ந்த/வாழும் பங்காளர், பணியாளர், பயனாளிகள் (விசுவாசிகள்) இந்திய திருச்சபை வரலாற்றின் நல்மாதிரிகள். உதாரணமாக: முதல் பணித்தளம் **பெரியமலை** நிறுவப்பட்டு தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட/விலைக்கிரயம் செலுத்திய முன்னோடி பணியாளர்/மிஷனெரிகள் திரு. ஹோரீஸ் ஹில்டன் குடும்பம், திரு. ஏசா குடும்பம், அவர்களின் எளிய வாழ்க்கை நினைவுகூறப்பட வேண்டியவை. கோண்டா பணித்தளம் (உ.பி. மாநிலம்) ஆரம்பத்தில் வேதாகம தபால் வழி பயிற்சி மையமாகவும், பின்பு மிஷனெரிப் பயிற்சி மைய மாகவும், தற்போது விசுவாசிகளின் பிள்ளைகள் தங்கி பயிலும் சிறுவர் இல்லமாகவும் செயல்படும் வளாகம், டாக்டர். கிரீவ்ஸ் அவர்களின் எளிய வாழ்வின் அடையாளமாகும். குஜராத் மாநிலத்தில் குக்னா, வார்லி போன்ற சமூகம், ஜார்கண்டில் மால்டோ, சந்தால் போன்ற சமூகம் மற்றும் தேசமெங்கும் கிட்டத்தட்ட முந்நூறு மறுமலர்ச்சிப்பெற்ற சமூகங்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் எளிய வாழ்க்கையின் சரித்திர சாட்சிகள்.

3

## புறஜாதிகள் மற்றும் பன்னாட்டு மறுமலர்ச்சியில் எளியவாழ்க்கை – பவுல்/பர்னபா (Simple life in the Transformation of Gentiles and People at Large)

பவுலும், பர்னபாவும் அந்தியோகியா திருச்சபை பிரதிநிதிகளாயிருக்கையில் பரிசுத்த ஆவியானவரால் கலாச்சாரம் கடந்த மிஷனெரிகளாக பணிசெய்ய அழைப்புப் பெற்றார்கள். அதன் தொடர்ச்சியாக அந்தியோகியா சபையால் ஜெபித்து அனுப்பப்பட்டார்கள்

(அப்.13:1-4). இயேசுவின் மாதிரியை தங்கள் வாழ்விலும், பணியிலும் பின்பற்றினார்கள்; பிரசங்கப்பணி (அப்.13:5,14-43, 14:1,21,22); பிரச்சனையைக் களையும் பணி [சப்பாணிக்கு விடுதலை (அப்.14:8-10), பிசாசிலிருந்து விடுதலை (அப்.16:16-18), பிணியிலிருந்து விடுதலை (அப்.19:11-12), மரணத்திலிருந்து விடுதலை (அப்.20:9-12)]. அற்புத ஊழியர்கள்/அப்போஸ்தலர் பவுல், பர்னபாவின் எளிய வாழ்க்கை தற்கால கிறிஸ்தவர்களுக்கு சில வாழ்க்கை முறையை வெளிப்படுத்துகிறது.

- தேவன் கொடுத்த கலைத்திறனை பயன்படுத்தி பிறருக்குப் பாரமாயிராமல் சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபிப்பது (1கொரி.9:18); கூடாரம் பண்ணும் தொழில் செய்து ஓய்வு நாளில் தேவபணி (அப்.18:1-5) செய்தது - உபத்திரவம் நிறைந்த தற்காலச் சூழலில் எல்லா கிறிஸ்தவ தொழில் வல்லுநர்களும் (Professionals) எளிய வாழ்க்கையின் மூலம் சேமித்து, தேவ பணியைச் செலவில்லாமல் செய்ய ஊக்கம் அளிக்கிறது. தற்போது மிஷனெரிப் பணியைத் தாங்குவோர் இதே பணிமாதிரியைப் பின்பற்றினாலும், சிலர் அரசுபணி/தனியார் பணி நிமித்தம் மாற்று கலாச்சார மக்களின் மறுமலர்ச்சிக்காக எளிய வாழ்க்கையை மேற்கொண்டு தேவ திட்டம் நிறைவேற்றலாம்.
- பவுலின் உபத்திரவம் மற்றும் குறைச்சலினூடே முறுமுறுப்பில்லாமல் மனரம்மியமாய் வாழ்வது எளிய வாழ்க்கையின் புனிதமான வெளிப்பாடு (பிலி.4:11-14).
- பங்காளரைச் சார்ந்து குறைவான ஆதரவில் நிறைவான, திருப்தியான வாழ்வு வாழ்வது எளிய வாழ்க்கையின் மற்றொரு பிரதிபலிப்பு (பிலி.4:15-18).
- சமூக அந்தஸ்தை களைந்து (பிலி.3:4-7 இன-இறையியல் அந்தஸ்து) கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து, எல்லாவற்றையும் குப்பையாக எண்ணி, எளிய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பவுலின் வாழ்வு ஒரு நல் மாதிரி. புறஜாதியார், தரித்திரர் மத்தியில் பணி செய்யும் உயரிய அர்ப்பணம் எளிய வாழ்கையின் உன்னதம் (கலா.2:7-10).

மேற்கூறிய எளிய வாழ்க்கையின் மூன்று மாதிரிகளின் தற்கால அடையாளங்களாக, நாம் பாடுகளினூடே புறஜாதிகள், பாரம்பரியவாதிகள், பிரித்தெடுக்கப்பட்ட ஜனத்தின் மறுமலர்ச்சிக்காக தொடர்ந்து விலைக்கிரயம் செலுத்தி, எளிய வாழ்க்கையைப் பிரதிபலிக்க தேவன் நமக்கு உதவி செய்வாராக! கறை நிறைந்த தேசத்தில் கறையற்ற சமூகம் மலர, வறுமையில் வாடும் திரள்கோடி ஜனம் குறைவில்லா சமூகமாக ஒளிர, பலவித பிணி, வேதனையுடன் வாழும் மக்களும் கிறிஸ்துவின் நாமத்தில் விடுதலை வாழ்வு வாழ உதவும் கரிசனையுள்ள சமூகம் உருவாக்கிட நம்மையும், நம் தாலந்துகளையும், பொருட் செல்வத்தையும் படைத்து எளிய வாழ்க்கை வாழ்ந்து காட்டுவோம்! தேவ கிருபை உங்களோடிருப்பதாக!!

**அருட்திரு. N. ஆசீர்வாதம்**
(FMPB, ஓய்வு மிஷனெரி)

## சிறுபான்மை மொழிகள் பேசுகின்ற சிறிய சமுதாயங்களுக்கு

# வேதாகம மொழி பெயர்ப்பு

## அவசியமா?




அருள்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

### மொழிகளின் ஆரம்பம்

ஆதியாகமம் 11:1-9 வசனங்களின்படி விதவிதமான மொழிகளின் அறிவு ஆண்டவரால் கொடுக்கப்பட்ட ஒன்றாகும். மொழியியல் வல்லுனர்கள் கருதுவது என்னவென்றால், ஆதி மனிதர்கள் இயற்கையின் தொனிகளைக் கேட்டு அவைகளைப்போலவே ஒலி எழுப்பி, எளிய மொழி கட்டமைப்பினை உருவாக்கி, மெல்ல மெல்ல சிக்கலான மற்றும் விரிவான கட்டமைப்புகளை உருவாக்கி, மொழி பேசும் திறனை வளர்த்துக் கொண்டார்கள் என்பதே. இதைத் தவிர மொழிகள் உருவானதற்கு சம்பந்தப்பட்ட மற்ற கோட்பாடுகளும் உள்ளன.

எனினும் மொழியியலின் கூறுகளான ஒலியியல், சொற்களின் கட்டமைப்பு, இலக்கண கட்டமைப்பு, வாக்கிய கட்டமைப்பு ஆகியவைகளை மொழி களிடையே ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஒதுங்கி வாழும் பினதங்கிய மக்கள் சமூகங்களால் பேசப்படும் மொழிகளிலே இக்கூறுகள் நவீன மற்றும் முன்னேறிய சமுகங்களிலே பேசப்படும் மொழிகளைவிட மிகவும் சிக்கலாக காணப்படுகின்றன. இதைவைத்து நாம் என்ன புரிந்துகொள்ளலாம் என்றால் படிப்பறிவு இல்லாத பின்தங்கிய சமூகத்தினர் இப்படிப்பட்ட சிக்கலான மொழியியல் கூறுகளை உருவாக்கியிருக்க இயலாது. எனவே மொழிகள் மனிதனால் பரிசோதனை அடிப்படையில், உபயோகத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதல்ல. மாறாக ஆதி.11:1-9இல் விளக்கியுள்ளபடி ஆண்டவரால் கொடுக்கப்பட்டதே அல்லாமல் மனிதர்களால் உருவாக்கப்பட்டது அல்ல என்பது நிரூபிக்கப்படுகிறது.

நோம் சாம்ஸ்கி (Naom Chomsky) என்ற பிரசித்திப்பெற்ற மொழியியல் வல்லுனர் கூறுவது என்னவென்றால், மனிதன் பிறக்கும்போதே எல்லா மொழிகளுக்கும் பொதுவான இலக்கண கூறுகளின் அடிப்படை அறிவோடு பிறக்கிறான். எனவேதான் எல்லா படைப்புகளைப் பார்க்கிலும் அவன் மட்டும் மொழியை கிரகித்துக்கொண்டு அதை அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் தனித்தன்மையுடன் காணப்படுகிறான். இதுவும் எதைக் குறிக்கிறதென்றால் மொழி ஞானம் மனிதனுக்கு கொடுக்கப்பட்டது. அது அவன் உருவாக்கினதல்ல.

## மொழிகளின் பன்முகத்தன்மையின் வளமை

இவ்வுலகில் நமது முகத்தோற்றம், கைரேகை மற்றும் மிருகங்கள், பூச்சி புழுக்கள், மரம், செடிக் கொடிகள் ஆகியவற்றிலுள்ள வளமான பன்முகத்தன்மையை அல்லது வித்தியாசங்களை கொண்டாடி இறைவனின் படைப்பின் அற்புதத்தைக் கண்டு வியக்கிறோம். ஆண்டவரின் படைப்பாகிய உயிரினங்களுக்கு இடையே இருப்பதுபோல அவர் படைப்பாகிய மொழிகளின் இடையிலும் நாம் அற்புதமான பன்முகத்தன்மையைக் காணலாம்.

உலகத்திலேயே அதிக மொழிகள் பேசப்படும் நாடு பாப்புவா நியூ கினியா (Papua New Guinea) ஆகும். அந்நாட்டில் 840 மொழிகள் பேசப்படுகின்றன. அதற்கு அடுத்துவருவது 711 மொழிகள் பேசப்படும் இந்தோனேசியா நாடாகும். அதைத் தொடர்ந்து நைஜீரியா நாட்டில் 517 மொழிகள் பேசப்படுகின்றன. ஏறக்குறைய 453 மொழிகள் பேசப்படுகின்ற இந்தியா நான்காவது இடத்தை வகிக்கிறது. 2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 356 மொழிகள் பேசப்படுகின்றன. இவைகளில் 22 மொழிகள் 8வது பட்டியலில் இடம்பெறுகின்றன. இந்த 356 மொழிகளில் பத்தாயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட சமூகங்கள் பேசும் மொழிகள் சேர்க்கப்படவில்லை. ஆனால் 1961ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் நம் நாட்டில் சுமார் 1652 மொழிகள் பதிவாகி உள்ளன. இந்த அளவு அதிக எண்ணிக்கைக்கு கீழ்கண்ட காரணங்களாக இருக்கக் கூடும்.

- ✓ 10,000திற்கும் குறைந்த மக்கள் தொகைக்கொண்ட சமுதாயங்கள் பேசும் மொழிகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.
- ✓ சில மொழிகளில் கிளைமொழிகளின் (dialects) பெயர்களும் தனி மொழிகளாக சேர்க்கப்பட்டிருக்கலாம்.
- ✓ சில மொழிகள் அவைகளின் பல பெயர்களில் தனித் தனி மொழிகளாக பதிவாகி இருக்கலாம்.

ஆண்டவரின் படைப்பின் அழகும், அதன் ஈர்ப்புத் தன்மையும், அதன் பன்முகத்தன்மையில் (வித விதமான ரூபங்களில்) வெளிப்படும். மிருகங்கள் மற்றும் மரம் செடி கொடிகளின் பன்முகத்தன்மை எந்த அளவிற்கு உள்ளது என்றால், ஆராய்ச்சியாளர்கள் இன்னும் புதிய புதிய பூச்சி மற்றும் சிறிய உயிரினங்களையும், புல் பூண்டு வகைகளையும் கண்டுபிடித்து அவைகளை ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். இவைகளில் எவையேனும் அழிந்துபோகும் நிலையில் இருக்குமென்றால் அவைகளை அழிந்துபோகாமல் பாதுகாக்கும் முயற்சியை மேற்கொள்கின்றார்கள். இதுபோல மொழிகளில் உள்ள பன்முகத்தன்மையைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். ஏனென்றால் ஒரு சமுதாயத் திற்கு அதன் கலாச்சார, வரலாறு மற்றும் சமுதாய அடையாளம் கொடுப்பது அச்சமுதாயத்தின் மொழியே ஆகும்.

## சிறுபான்மை மொழிகள் மறைந்துவிடும் என்ற தர்க்கம்

சிறுபான்மை சமுதாயங்கள் பேசும் மொழிகள் மறைந்து, அந்த இடத்தை பெரும்பான்மை சமுதாயங்கள் பேசும் மொழிகள் ஆதிக்கம் செலுத்திவிடும் என்பது பொதுவான வாக்குவாதமாகும். ஆனால் தங்களுடைய மாநிலத்தைவிட்டு குடிபெயர்ந்து பல தலைமுறைகளாக வேறு ஒரு மொழிபேசும் பெரும்பான்மையினர் மத்தியில் வாழ்ந்து அவர்களுடைய மொழியை எழுத படிக்க கற்றுக்கொண்டிருப்பினும் தங்களுடைய தாய் மொழியை அழியவிடாமல் காத்து வரும் சிறிய சமுதாயங்களை நம் நாட்டில் காணலாம். இது அவர்களிடையே உள்ள வலிமையான குடும்ப மற்றும் சமுதாய உறவுகளினிமித்தம் அவர்களின் மொழி அழிவதில்லை. கடந்த நூறு ஆண்டுகளில் பேசப்பட்டு வந்த இந்திய மொழிகளில் ஏதாவது அழிந்து போனாதா என்றால் இல்லை என்றே கூறலாம்.

## மொழித்திறன் – தாய் மொழியா? இரண்டாம் மொழியா?

சிறுவயதிலிருந்தே தாய் மொழியில் பேசி வளர்ந்த பின்னர் இரண்டாவது மொழியை கற்றுத் தேர்ந்தாலும் தாய் மொழியில்தான் அவரின் புரிந்துகொள்ளுதல் மற்றும் பேச்சுத்திறன் அதிகமாக விளங்கும். ஹரியான்வி மொழி ஹரியானா மாநிலத்தின் மக்களால் அதிகமாக பேசப்படும் மொழியாகும். அம்மொழி ஹிந்தி மொழியை போன்றதாகும். மற்ற மாநிலங்களைவிட ஹரியானாவில் எழுத படிக்க தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். படித்தவர்கள் ஹிந்தி மற்றும் ஹரியான்வி மொழிகளில் பேசும் திறன் பெற்றவர்கள். நான் 30 ஆண்டுகளுக்குமேல் இம்மாநிலத்தில் வாழும் அனுபவத்தில் கண்டது என்னவென்றால் படித்தவர்கள் கூட ஹிந்தி மொழியைவிட ஹரியான்வி மொழியில் பேசும் பொழுது மிக சகஜ மாகவும், தெளிவாகவும் பேச முடிகிறது. 11 மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் மாணவியர்கள் கூட தங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் ஹிந்தி நாடகத்தில் நடிக்கும் பொழுது தங்கள் உரையாடலை மனப்பாடம் செய்து உரையாடுவது தெளிவாக வெளிப்படும். அதே மாணவ மாணவியர்கள் ஹரியான்வி மொழியில் நாடகம் நடிக்கும் பொழுது தங்களுடைய உரையாடலை மிகவும் எளிதில், கொடுக்கப்பட்ட வரிகளோடு தாங்களாகவே கூடுதலாக நகைச் சுவையுடன் சேர்த்து உரையாடுவதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். இது எதை வெளிப்படுத்துகிறது என்றால், ஒருவர் தாய் மொழியை தவிர இரண்டாவது மொழியை கற்றிருந்தாலும் தாய்மொழியில் பேசும் வேகத்திலும், அதின் பல நுண்ணிய கருத்துக்களை புரிந்துகொள்வதிலும், விளக்குவதிலும் அவர் கற்றிருந்த இரண்டாவது மொழி நிகராகாது.

## தாக்கம் – தாய் மொழி மற்றும் இரண்டாவது மொழி

ஒரு சிறுபான்மை மொழி, சமூகம் அதைச் சுற்றிலும் பேசப்படும் இரண்டாவது மொழியிலும் சமமான திறன் பெற்றிருந்தாலும் ஒரு செய்தியின் உணர்ச்சி, தாக்கம் மற்றொரு மொழியில் அதே செய்தியின் மூலமாக ஏற்படும் உணர்ச்சி, தாக்கத்தைவிட வெகு அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப். 21ஆம் அதிகாரத்தில் பவுல் கைது செய்யப்படுகிறான். அவன் தேவாலயத்தை அசுத்தப்படுத்திவிட்டான்

என்று குற்றஞ்சாட்டப்படுகிறான். பவுல் அம்மக்கள் கூட்டத்தை (அப்.22:2) நோக்கி அவர்களின் தாய் மொழியான எபிரேய மொழியில் பேசும் பொழுது அவர்கள் கூச்சலிடுவதை நிறுத்தி அமைதலாக அவன் சொல்வதைக் கேட்டார்கள் என்று பார்க்கிறோம்.

## மொழி அடையாளம்

ஒரு நபருக்கு அடையாளம், தேசிய அடையாளம், செய்யும் தொழில் அடையாளம் என்று பல அடையாளங்கள் உள்ளன. ஆனால் தன்னுடைய சமூகத்தைச் சேர்ந்த மற்றொருவரோடு நெருக்கத்தை உணரச் செய்வது, குறிப்பாக தங்களுடைய சமுதாய எல்லையை கடந்து செல்லும் போது உணரச் செய்வது மொழி அடையாளமே. நான் ஒரு வாலிபனிடம் நீ ஹரியானாவை சேர்ந்தவன் என்று உன்னை அடையாளப்படுத்துவது உன்னுடைய முகத் தோற்றமா, ஆடையா அல்லது நீ வாழும் பகுதியா என்று கேட்டேன். அவன் எந்த தயக்கமுமின்றி கூறிய பதில், 'நான் பேசும் தாய்மொழி' என்பதே.

## வேதாகம மொழி பெயர்ப்பு – செயல்முறைகள்

ஆரம்ப நாட்களில் வேதாகம மொழி பெயர்ப்பு, தேவைப்படும் ஒரு மொழியை தெரிந்தெடுத்துக் கொண்டு கலாச்சாரம் கடந்து ஊழியம் செய்பவர், பயிற்சி பெற்றபின் அந்த மொழி பேசப்படும் பகுதியில் குடியேறி, அம்மொழியை கற்றுக்கொண்டு, அதன் இலக்கணம், ஒலி கட்டமைப்பு ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து அந்த மொழியை தாய் மொழியாக பேசுபவரை மொழி பெயர்ப்பு உதவியாளர் என்று நியமனம் செய்து அவரின் உதவியோடு மொழிபெயர்ப்பு செய்வதுண்டு. இன்றைய காலக்கட்டத்தில் மொழி பெயர்ப்பு செய்ய வேண்டிய மொழியை தாய் மொழியாக பேசுபவரையே மொழி பெயர்ப்பாளராக பயிற்றுவித்து அவரைக் கொண்டே வேதாகம மொழி பெயர்ப்பு செய்வது வழக்கமாகிவிட்டது. இதன் மூலம் மொழி பெயர்ப்பு பணி வேகமாகவும், தரமாகவும் செய்யப்படும் என்று நம்பப்படுகிறது. வேதாகம மொழி பெயர்ப்புப் பணியின் செயல்முறைகளை கோர்வையாக பார்க்கலாம்.

### அ) சமுதாய மொழியியல் ஆராய்ச்சி

ஒரு மொழியில் வேதாகமம் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் உண்டோ இல்லையோ என்று தீர்மானிப்பதற்கு முன் மொழியியல் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். அம்மொழியை பேசுபவர்களின் மக்கள் தொகை, பேசப்படும் பகுதி களின் பரப்பளவு, கிளை மொழிகள் எத்தனை (dialects) எந்த கிளை மொழியில் மொழி பெயர்த்தால் எல்லோரும் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வார்கள், இம் மொழி காலம் செல்ல செல்ல அழிந்து போய்விடுமா அல்லது நிலை நிற்குமா, எந்த சூழலில் பேசப்படுகிறது போன்ற கேள்விகளை ஆராய்ந்து விடைகளை கேட்டறிய வேண்டும். கலாச்சாரம் கடந்து சென்று அந்த மொழியை கற்று, மொழி பெயர்ப்பு செய்பவர்களுக்கு முதல் மூன்று மாதங்கள் பயிற்சி கொடுக்கப்படுகிறது. தாய் மொழி மொழிபெயர்ப்பாளருக்கு ஒரு மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### ஆ) முதல் மொழியாக்கம்

மேற்கூறிய கட்டங்களாகிய மொழியியல் ஆராய்ச்சி, மொழி கற்று அதன் இலக்கணம் மற்றும் ஒலி கட்டமைப்பை ஆராய்ந்தறிதல், அம்மொழி பேசும் மக்களிடையே தங்கி மொழி கற்றல் ஆகியவற்றை நிறைவு செய்தப்பின் வேதாகமத்திலுள்ள சில சம்பவங்களை மற்றும் உவமைகளை மொழி பெயர்த்து சிறு புத்தகங்களாக வெளியிடுவார்கள். இதைத் தொடர்ந்து புதிய ஏற்பாட்டின் ஒரு புத்தகம் மொழி பெயர்க்கப்படும். இவ்வாறு வேதாகம பகுதிகளை மொழி பெயர்க்கும் முன் அப்பகுதியின் சரியான அர்த்தத்தையும், அது எந்த சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது என்பதையும் ஆராய்ந்து அறிய வேண்டும். இது ஆங்கிலத்தில் Exegesis என்று அழைக்கப்படுகிறது. வேதாகமம் நமக்காக எழுதப்பட்டாலும் முதன்மையாக அது எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களுக்காக எழுதப்பட்டது. அவர்கள் அக்காலத்தின் அரசியல், கலாசார, வரலாறு, மதம் சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களை நன்கு அறிந்திருப்பார்கள். ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்குப்பின் வாழும் நாம் இந்த சந்தர்ப்பத்தைக் குறித்து 'விளக்கவுரைகள்' போன்ற புத்தகங்களின் வாயிலாகத்தான் பெற இயலும். ஆரம்ப நாட்களில் இத்தகைய புத்தகங்கள் கிடைப்பது அபூர்வம். இப்பொழுது இவை மொழி பெயர்ப்பாளர்களுக்கு டிஜிட்டல் வடிவில் எளிதில் கிடைப்பதால் அதன் உதவியுடன் வேதப்பகுதிகளின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு தெளிவாக மொழி பெயர்க்க முடிகிறது.

### இ) தாய் மொழி பேசும் நபருடன் சரிபார்த்தல்

முதன்முறையாக மொழி பெயர்க்கப்பட்ட பகுதியை அம்மொழி பேசுபவரிடம் வாசித்துக் காட்டி, அது அவருக்கு தெளிவாக புரிகிறதா, அவர்களுடைய மொழியின் மரபுகளுக்கேற்ப இயல்பாக தோன்றுகிறதா, அவர்களின் கலாச்சாரத்திற்கு ஒவ்வாத ஏதேனும் இருக்கிறதா என்று சரிபார்த்து அவருடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்ய வேண்டும்.

### ஈ) பின் மொழி பெயர்ப்பு

இவ்வாறு சரிசெய்யப்பட்ட முதல் மொழி பெயர்ப்பை வார்த்தைக்கு வார்த்தை ஆங்கிலத்திலோ அல்லது இந்த மொழி பெயர்ப்பை சரிபார்க்கும் வேதாகம நிபுணருக்கு தெரிந்த மொழியிலோ, பின் மொழி பெயர்ப்பு செய்யவேண்டும். ஏனென்றால் நாம் எந்த மொழியில் மொழி பெயர்த்திருக்கின்றோமோ அந்த மொழி சரிபார்க்கும் நிபுணருக்கு தெரியாது. நாம் செய்யும் பின் மொழி பெயர்ப்பின் அடிப்படையில் தான் அவர் அதை சரிபார்க்க முடியும்.

### உ) வேதாகம நிபுணரின் சரிபார்த்தல்

நாம் அனுப்பி வைத்தப்பின், மொழிபெயர்ப்பை சரிபார்த்தப்பின், நிபுணர் நேர்முக உறையாடல் அல்லது வலைதளம் சார்ந்த கலந்துரையாடல் அல்லது மின் அஞ்சல் மூலம் மொழிபெயர்ப்பில் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றி எடுத்துரைப்பதற்காக அழைப்பு விடுவார். அவர் கூறும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது சில மாற்றங்கள் அவசியம் இல்லை என்பதற்கு காரணம் கூறி அவரை சம்மதிக்க வைக்கலாம்.

### ஊ) அச்சிட்டு வெளியிடுதல்

எல்லா திருத்தங்களும் செய்த பின் எழுத்துப் பிழைகளை சரிபார்த்து வேதாகமத்திற்கு தொடர்புடைய மீண்டும் மீண்டும் இடம் பெறும் சொற்கள், உதாரணத்திற்கு 'கிருபை', 'பரலோக இராஜ்யம்', 'தீர்க்கதரிசிகள்', 'அப்போஸ்தலர்' போன்ற சொற்கள் சரியாகவும், வெவ்வேறு பகுதிகளில் ஒரே விதத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்க்க வேண்டும். அதன்பின் அச்சடிப்பதற்கு ஏற்ற படிவத்தில் பக்க எண்களுடன் ஆயத்தம் செய்யப்படுகிறது. காகிதத்தில் வேதாகமம் அச்சிடப்படும்வரை பலமுறை ப்ரூப் ரீடிங் செய்யப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. பக்கங்களின் எண்களும் போடப்பட்டு இந்திய வேதாகம சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் மூலம் வெளியிடப்படுகிறது.

### எ) விநியோகம் மற்றும் உபயோகம்

வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டதுடன் எல்லாம் நிறைவடைவதில்லை. அச்சிடப்பட்ட வேதாகமங்களை அந்தந்த மொழி பேசும் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அதை அவர்கள் வாசிப்பதற்கும், சபைகளிலே உபயோகிப்பதற்கும் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். வாசிக்கத் தெரியாத மக்களுக்கு முதியோர் கல்வி மூலம் வாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். இந்த பணிகளை மொழி பெயர்ப்பாளர்கள் மட்டும் செய்ய இயலாது. மற்ற நற்செய்தி பணி செய்யும் ஊழியர்களும் கைகொடுத்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

## ஒலி ஒளி ஊடகங்கள்

தொழில் நுட்பம் வளர்ந்திருக்கும் இக்காலக் கட்டத்தில் மொழி பெயர்க்கப்பட்ட வேதாகமத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான மற்றொரு சிறந்த வழி என்னவென்றால் அதை ஒலி ஒளி படிவங்களில் பதிவு செய்வது. இவ்வாறு செய்வதற்கு உதவும் சங்கங்கள் பல உள்ளன. இப்படி பதிவு செய்யப்பட்ட வேதாகமமும் அதன் பகுதிகளையும் இந்நாட்களில் ஏறக்குறைய எல்லோரும் உபயோகிக்கும் ஸ்மார்ட் ஃபோன் மூலம் கேட்கவோ, பார்க்கவோ முடியும். இது எழுதப்படிக்க தெரியாத மக்களுக்கும் பேருதவியாக அமையும்.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வேதாகம மொழி பெயர்ப்புப் பணி

நமது இயக்கத்தின் மூலம் 14 மொழிகளில் வேதாகமங்கள் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. இதுவரை 10 மொழிகளில் புதிய ஏற்பாடும், ஒரு மொழியில் முழு வேதாகமமும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. 5 மொழிகளில் ஆடியோ வேதாகமம் வெளியிடப்பட்டுள்ளது. குருக்ஸ் மொழியில் மத்தேயு சுவிசேஷம் படமாக வெளியிடப்பட்டுள்ளது. இன்னும் 20 இந்திய மொழிகளில் வேதாகம மொழிபெயர்ப்பு செய்யவேண்டும் என்ற தரிசனத்துடன் ஆய்வுகள் நடைபெற்று வருகிறது.

# நமது வேதாகம மொழிபெயர்ப்பாளரகள்

| | மொழிகள் | ஊழியர்கள் |
|---|---|---|
| 1. | வார்லி நிஹ்ரி | அருள்திரு. ஜி. ஆபிரகாம் & திருமதி. ஹேமலதா |
| 2. | வார்லி டோக்ரி | அருள்திரு. ஜி. ஆபிரகாம் & திருமதி. ஹேமலதா |
| 3. | வார்லி டாவரி | அருள்திரு. ஜி. ஆபிரகாம் & திருமதி. ஹேமலதா |
| 4. | சௌத்ரி | திரு. கிறிஸ்டோபர் தாமஸ் & திருமதி. வசந்தா வேம்பு |
| 5. | ஹரியான்வி | அருள்திரு. சுதர்சன் தாமஸ் & திருமதி. லிடியா |
| 6. | குரூக்ஸ் | அருள்திரு. ஆர். தாமஸ் & திருமதி. ரெஜினி |
| 7. | காந்தேஷி பீலி | |
| 8. | டுங்ரா பீலி | அருள்திரு. சுனில் மேத்யூ & திருமதி. மாயா |
| 9. | பாவ்ரி | திருமதி. ஜேன் இம்மானுவேல் |
| 10. | வசாவி ஆம்பூரி | திருமதி. தெபோராள் விஜயராணி |
| 11. | வசாவி டேவாலி | அருள்திரு. ராஜேந்திரன் |
| 12. | வசாவி காந்தேஷி | அருள்திரு. ராஜேந்திரன் |
| 13. | மால்டோ சௌரியா | அருள்திரு. ஜார்ஜ் எட்வர்ட் & திருமதி. பிரமிளா |
| 14. | குமார் பஹாடியா | அருள்திரு. ஜார்ஜ் எட்வர்ட் & திருமதி. பிரமிளா |

## ஜெபக் குறிப்புகள்

✓ தற்போது நான்கு மொழிகளில் புதிய ஏற்பாடும், எட்டு மொழிகளில் பழைய ஏற்பாடும் மொழி பெயர்க்கப்படும் பணியில் ஈடுபட்டுள்ள நமது ஊழியர்களுக்கு தேவன் சிறந்த மொழி ஞானத்தையும், சரீர சுகபெலன் ஆராக்கியத்தையும் தந்தருள.

✓ மொழி பெயர்ப்பு பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கும், உதவியாளர்களுக்கும் சரியான வார்த்தைகளை தெரிந்தெடுப்பத்தில் தேவன் விசேஷித்த ஞானத்தை தந்தருள.

✓ மொழி பெயர்ப்புப் பணி எவ்வித தடையின்றி துரிதமாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிக்கப்பட.

✓ மொழி பெயர்க்கப்பட்டுள்ள புத்தகங்களை சரிபார்க்கும் (புருப் ரீடிங்) குழுவினருக்கு தேவன் தெய்வீக ஞானம் மற்றும் கிருபை தந்தருள.

✓ மொழி பெயர்க்கப்பட்டுள்ள வேதாகமங்களை / புத்தகங்களை விசுவாசிகள் ஆர்வத்துடன் வாசித்து விசுவாசத்தில் வளர.

✓ 6 மொழிகளில் வேதாகம மொழிபெயர்ப்பு மிக அவசர தேவையாக உள்ளது.

✓ மா தாக்கூர் மொழியில் மொழி பெயர்ப்பு செய்ய அர்ப்பணமுள்ள ஊழியரை தேவன் தந்தருள.

✓ இந்தியர் அனைவருக்கும் தம்தம் தாய்மொழியில் வேதாகமம் கிடைத்திட ஜெபிப்போம்.

**அருள்திரு. ஆர். தாமஸ்,** செயலர் – வேதாகம மொழிப்பெயர்ப்பு பணி




| | | |
|---|---|---|
| 1 | **அருள்திரு. ஜாண்சன் சங்கர்** | SAIACS, பெங்களூர் |
| 2 | **திருமதி. ஜெபராணி சங்கர்** | SAIACS, பெங்களூர் |
| 3 | **அருள்திரு. சி. வெங்கடேசன்** | SAIACS, பெங்களூர் |
| 4 | **திருமதி. சசிகலா வெங்கடேசன்** | SAIACS, பெங்களூர் |
| 5 | **திரு. சுனில் பிரசாத் சிங்** | செராம்பூர் கல்லூரி |
| 6 | **திருமதி. ஜாய் பெல்லா பிரசாத்** | செராம்பூர் கல்லூரி |
| 7 | **அருள்திரு. சுகந்தோ சிங்** | HBI, சென்னை |
| 8 | **திருமதி. ராணி சுகந்தோ** | HBI, சென்னை |

## ஜெபிப்போம்

- இறையியல் கற்கும் நமது மிஷனெரிகளுக்கு தேவன் விசேஷித்த ஞானம், புரிந்துகொள்ளும் திறன் மற்றும் ஞாபக சக்தி தந்தருள.
- கிரேக்கு மற்றும் எபிரெயு மூல பாஷைகளை எளிதில் கற்றுக்கொள்ள தேவன் மொழி ஞானத்தை அருள.
- சரீர சுக, பெலன் ஆரோக்கியத்திற்காக.
- அவர்கள் விட்டு வந்த ஊழியப் பணி தொடர்ந்து தடையின்றி நடைபெற.
- அவர்கள் ஆதாயம் செய்த ஆத்துமாக்கள் தொடர்ந்து கிறிஸ்துவில் நிலைத்திருக்க.
- படிக்கும் இடங்களில் தங்கள் சாட்சியின் மூலம் அநேகரை ஊழியத்திற்கு ஊக்குவிக்கும் தூண்டுகோலாய் வாழ.
- இவர்களது இறையியல் படிப்பு வருங்கால ஊழியத்தில் மற்றும் திருச்சபைகளில் பெரும் மறுமலர்ச்சியை கொண்டுவர ஜெபிப்போம்.

# பலோடா பஜார்

## பணித்தளம்






*அருள்திரு. ரமேஷ்வர் தயாள் &*
*திருமதி. மதுகலா*

மத்திய இந்தியாவில் நிலத்தால் சூழப்பட்ட ஒரு மாநிலம் சத்தீஸ்கர். ராய்ப்பூரை தலைநகர மாகக் கொண்ட இம்மாநிலத்தில் 35 மாவட்டங்கள் உள்ளன. பரப்பளவில் 9வது இடத்தைப் பெற்றுள்ள இம்மாநிலம் 30 மில்லியன் மக்கள் தொகை கொண்டது. முன்னர் மத்தியப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்த சத்தீஸ்கர், நவம்பர் 1, 2000ஆம் ஆண்டு ராய்ப்பூரை தலைநகரமாகக் கொண்டு மாநில அந்தஸ்தைப் பெற்றது.

மின்சாரம், எஃகு, நிலக்கரி போன்ற வளங்கள் நிறைந்த மாநிலமான இது, இந்தியாவின் மூன்றாவது பெரிய நிலக்கரி இருப்புகளைக் கொண்டுள்ளது. நாட்டின் மூன்றாவது பெரிய வனப்பகுதியைக் கொண்டுள்ள இம் மாநிலத்தின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் மலைப்பாங்கானவைகள். மத்தியப் பகுதி ஒரு வளமான சமவெளி. மேலும் இம்மாநிலம் நீர்வீழ்ச்சிகள், வன விலங்குகள், குகைகள் மற்றும் பழங்கால நினைவு சின்னங்களுக்குப் பிரபலமானது. இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான பழங்குடியினரைக் கொண்டுள்ள சத்தீஸ்கர், பண்டைய கால கலை, இசை மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட வளமான கலாச்சார பாரம்பரியத்திற்குப் பெயர்பெற்றது.

## பலோடா பஜார் மாவட்டம்

பலோடா பஜார் சத்தீஸ்கரின் ஒரு மாவட்டம் மற்றும் நகராட்சி ஆகும். இது சிமெண்ட் உற்பத்தியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் இங்கிருந்து அரிசி, மின்சாரம், பித்தளை மற்றும் பல்வேறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதிகாரப்பூர்வமாக பேசப்படும் மொழிகள் இந்தி மற்றும் சத்தீஸ்கரி. இந்த மாவட்டத்தின் முக்கிய மக்கள் இனங்கள் சத்னாமி, சாஹு, கேவத், மெஹர் மற்றும் வர்மா. இவர்களின் முதன்மைத் தொழில் நெல் சாகுபடியாகும். இது இவர்களின் பிரதான உணவாகும். கோதுமை, ஜோவர் மற்றும் மக்காச்சோளம் போன்ற பிற தானியங்களும் நுகரப்படுகின்றன.

பெரும்பான்மையானோர் இந்து மதத்தைப் பின்பற்றுகின்றனர். சத்னாமி சமூகத்தைச் சேர்ந்தோர் பாபாகுரு காசிதாஸின் சீடர்கள். இஸ்லாம், சீக்கியம் மற்றும் கிறிஸ்தவத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராவார்கள். சமூக மற்றும் ஆன்மீக சீர்திருத்தவாதியான குரு காசிதாஸ் தனது சமூகத்திற்கு மத மற்றும் சமூக அந்தஸ்தை வழங்குவதற்காக 1820ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் '**சத்னம் பந்த்**'-ஐ நிறுவினார். இவர் சமூக சமத்துவம், ஆன்மீக ஒழுக்கம், அமைதி, **சத்னம்** (உண்மை) போன்ற நற்பண்புகளைப் போதித்தார். காசிதாஸின் பிறப்பிடமான கிராத்புரி தாம் சத்னாமிகளின் புண்ணிய ஸ்தலமாகும். மேலும் அவர்களின் தனித்துவமான மத அடையாளத்தைக் குறிக்கும் ஜெய்த்காம் (வெற்றித் தூண்) என்ற 77 மீட்டர் உயர கோபுரம் இங்குள்ளது. தபோபூமி என்று அழைக்கப்படும் இவ்விடத்தில் வருடாந்திர கிரூத்புரி மேளா நடைபெறும். சரண் குண்ட் என்ற புனித குளம் இங்குள்ளது.





## நமது ஊழியம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியரான அருள்திரு. ரமேஷ்வர் தயாள் அவர்கள் பலோடா பஜாரில் 15.02.2022 அன்று ஊழியத்தைத் தொடங்கினார்கள். சத்னாமி மக்களை சுவிசேஷத்தால் சந்திப்பதே நமது முதன்மை ஊழியமாகும்.

## நற்செய்திக்கான சவால்கள்

சத்னாமி மக்களிடையே நற்செய்தி அறிவிப்பதில் பல சவால்கள் உள்ளன. அவற்றில் மதுப்பழக்கம், இளவயது திருமணங்கள், அதிக விவாகரத்து விகிதங்கள், குரு இயக்கங்கள் மற்றும் மதவாதிகளின் எதிர்ப்புகள் அடங்கும். தேவன் தமது வல்லமையை பலவிதங்களில் நிரூபித்து வருகிறார். நரேஷ் குமார் மற்றும் அவரது மனைவி

சுக்ரிதா ஆகியோர் ஜெபத்தின் மூலம் கோவிட் 19 தொற்றிலிருந்து அற்புத சுகம் பெற்றதினால் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள். இவர்களே இப்பணித்தளத்தின் முதல் விசுவாசிகள். சமீபத்தில் பத்தேல்பூர், பிஸ்ராம்பூர் மற்றும் கடேஷ்பூர் கிராமங்களில் உள்ள விசுவாசிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடப்பட்டது. ஜெபத்தின் மூலம் தேவ கிருபையால், காவல்துறையின் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

## ஜெபக் குறிப்புகள்

- சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசல்களைத் தந்து, அநேகர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள.
- விசுவாசிகள் எவ்வித சூழ்நிலையிலும் விசுவாசத்திலும், தேவ வார்த்தையிலும் உறுதியாய் நிலைத்திருக்க.
- ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ்ந்து, வாஞ்சையோடு நற்செய்திப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள.
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இயேசுவின் அன்பால் தொடப்பட்டு, கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசித்து ஏற்றுக்கொள்ள.
- சத்னாமி மக்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட.
- இங்கு பணி செய்யும் நமது மிஷனெரி தம்பதியினரான அருள்திரு. ரமேஷ்வர் தயாள் & திருமதி. மதுகலா மற்றும் அவர்களது பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

## ஆலயப் பிரதிஷ்டை



கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சோழிங்கநல்லூர் பணி மாவட்டத்தின் சார்பாக ஆலயக் கட்டுமானப் பணிக்கு உதவிய ஆதரவாளரின் குடும்பத்துடன் சுமார் 13 பேர் குஜராத் மாநிலம், அஹ்வா பணித்தளத்திற்குச் சென்றோம். அங்கு அஞ்சன்குண்டு என்ற கிராமத்தில் திரு. வால்டர் அவர்கள் குடும்பத்தின் சார்பாக கட்டப்பட்ட ஆலயம் கர்த்தரின் நாம மகிமைக்காக 13.09.2025 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதன்பின் ஜாவ்டா விடுதிக்கு சென்று அங்கு தங்கியிருந்த மாணவர்களை சந்திக்கவும், அவர்களின் நிகழ்ச்சியை கண்டுகளிக்கவும் தேவன் கிருபை செய்தார். பின் பிப்பல்வாடா பணித்தளம் சென்று அங்கு விசுவாசிகளுடன் ஞாயிறு ஆலய ஆராதனையில் பங்குபெற்று மகிழ்ச்சியுடன் தேவனை ஆராதித்தோம். அதன்பின் அவர்களிடமிருந்து விடைப்பெற்று புதிய உற்சாகத்துடன் வீடு திரும்ப தேவன் உதவி செய்தார். பணித்தளங்களில் எங்களை உற்சாகத்துடன் வரவேற்று, உபசரித்து உதவிய அனைத்து மிஷனெரிகளுக்காக தேவனைத் துதித்து நன்றி செலுத்துகிறோம்.

**திரு. எலியா ஏனோக்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – சோழிங்கநல்லூர்

# தொழில் நுட்ப வல்லுநர் குழு





பெங்களூரிலுள்ள தொழில்நுட்ப வல்லுநர் குழு மூலமாக திருநெல்வேலியிலுள்ள டோனாவூரில் நமது மிஷனெரிகளின் பிள்ளைகள் தங்கி படித்து வரும் பள்ளியான சந்தோஷ வித்யாலயாவிற்குச் சென்று அவர்களது எதிர்கால படிப்பு மற்றும் பணியைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிக்காட்டுதலை கற்றுக்கொடுக்க தீர்மானித்திருந்தனர். அதன்படி ஜூன் 20-21 தேதிகளில் பெங்களூர், சென்னை, வள்ளியூர் மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த வல்லுநர்கள் அங்கு குழுவாகச் சென்றிருந்தனர்.

முதல் நாள் காலை தியானத்திற்குப் பின் பள்ளியின் முதல்வர் இந்நிகழ்ச்சியை துவங்கிவைத்தார். இரண்டு நாட்களும் 9-12ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுடன் தனித்தனியாகவும், குழுவாகவும் பலமுறைகளில் விளக்கக் காட்சிகள் (Presentation) மற்றும் கேள்வி பதில் முறைகளின் மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் கொடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் அவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய பல துறைகளான மருத்துவம், பொறியியல், கணினி அறிவியல், ரோபோடிக்ஸ், பொதுப்பணித் துறை, BOT, கலைத்துறை, மேலாண்மை படிப்பு, உணவக மேலாண்மை, பத்திரிக்கையியல், இசை மற்றும் வங்கி பணிகளுக்கான படிப்புகள், தேர்வுகள், வேலை வாய்ப்புகளை குறித்த விழிப்புணர்வுகளை வழங்கினர். மாணவர்கள் உற்சாகமாக பங்குபெற்று தங்கள் சந்தேகங்களுக்கு விடை கிடைக்கப் பெற்றனர்.

ஆசிரியர்களும் இதில் பங்குபெற்று நமது குழுவினரின் முயற்சியைப் பாராட்டினர். பள்ளி நிர்வாகத்தின் அன்பான விருந்தோம்பல் மற்றும் ஐக்கியம் மறக்கயியலாதது. 21ஆம் தேதி மாலை நிகழ்ச்சியை நிறைவு செய்த நமது குழு மிஷனெரிகளுடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு உதவ தங்களுக்கு கிடைத்த பாக்கியத்தை எண்ணி தேவனைத் துதித்து மனநிறைவோடு தங்கள் பகுதிக்கு திரும்பினார்கள்

**அருள்திரு. பிரபாகர சாரதி,** ஆலோசகர் - தொழில்நுட்ப வல்லுநர் குழு

# IMA-யின் சுவிசேஷ இயக்கத் தலைவர்களின் தேசிய கூடுகை



Larger impact through missions:
Planning time with General Secretary, FMPB & General Secretary, Vishwavani



Larger impact through missions:
Planning time with General Secretary, FMPB, General Secretary, UESI, General Secretary, IEM on the sidelines of IMA meeting, Hyderabad

ஹைதராபாத்தில் ஆகஸ்டு 25ஆம் தேதி இந்திய சுவிசேஷ இயக்கங்களின் ஐக்கியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய தலைவர்களின் ஆலோசனைக் கூடுகையில் பங்குபெறவும், எனது கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளவும் தேவன் எனக்கு வாய்ப்பளித்தார். இக்கூடுகையில் தேசத்தின் பல பகுதிகளிலிருந்து சுமார் 250 பேர் கலந்துகொண்டனர். இக்கூடுகையின் கருப்பொருள் **சீர்திருத்தம், புத்துயிர் பெறுதல் மற்றும் புதுப்பித்தல்** ஆகும். இக்கூடுகையின் நோக்கமானது இயக்கங்களின் அமைப்பை தேவ ராஜ்யத்தின் மதிப்பீடுகளை மையப்படுத்தி சிறந்த நிலையை அடையசெய்வது.

இக்கூடுகையில் மிஷனெரி இயக்கங்கள் பராமரிப்பு நிலையில் இயங்கிக்கொண்டிருப்பதை விட்டு தீவிரமாக செயல்படும் நிலைக்கு முன்னேறிச் செல்ல சவால் விடுத்தேன். இக்கூடுகையின் நாட்களில் நானும், நமது பொது காரியதரிசியும் நமது தேசத்தில் சுவிசேஷத்தின் மூலம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த **IEM, UESI, GEMS, Scripture Union, விஷ்வவாணி** போன்ற இயக்கங்களோடு இணைந்து செயல்பட அவற்றின் பொது காரியதரிசிகளுடன் ஆலோசனை நடத்தினோம். வரும் நாட்களில் நமது இயக்கம் நம்மை போன்ற பிற மிஷனெரி இயக்கங்களுடன் இணைந்து செயல்பட வேண்டுமென வாஞ்சிக்கிறோம். இந்நாட்களில் தேவன் மிஷனெரி இயக்கங்களின் தலைவர்கள் மத்தியில் நல்ல ஐக்கியத்தையும், இணைந்து செயல்பட வேண்டுமென்ற வாஞ்சையையும் தந்திருக்கிறார். தொடர்ந்து நம் தேசத்தை தேவ வார்த்தையின் அடிப்படையில் சுவிசேஷத்தால் கட்டி எழுப்ப சரியான அணுகுமுறைகளை தேவன் நமக்குத் தந்தருள ஜெபிப்போம். கர்த்தருக்குச் சித்தமானால் தேசிய அளவிலான கிறிஸ்தவ தலைவர்களுக்கான கூடுகை **NMC** மூலமாக ஒருங்கிணைந்து செயல்படுத்த எத்தனிக்கிறோம். இதற்காகவும் ஜெபித்துகொள்ளுங்கள். நமது தேசமும், சமுதாயமும் மறுமலர்ச்சிப் பெற வேண்டுமென்றால் சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப்படவேண்டும். ஏனென்றால்...

*சுவிசேஷம் அன்பையும், அரவணைப்பையும் கொடுக்கிறது!*
*சுவிசேஷம் சமாதானத்தையும், வளர்ச்சியையும் கொடுக்கிறது!!*
*சுவிசேஷம் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் கொடுக்கிறது!!!*

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர்

## பணித்தள விஜயம் – தமிழ் நாடு தென் மண்டலம்

| வ. எண் | பயண தேதி | ஜெபக்குழுக்கள் | மாநிலம் |
|---|---|---|---|
| 1. | 07.10.2025 - 13.10.2025 | நெல்லை | குஜராத் |
| 2. | 10.10.2025 - 17.10.2025 | நெல்லை | உத்தரகாண்ட் |
| 3. | 25.10.2025 - 29.10.2025 | நெல்லை ஸ்கேன் | மேற்கு வங்காளம் |

## ஆலய பிரதிஷ்டை



குஜராத் மாநிலம், சூரத் பகுதியில் நடைபெறும் நமது ஊழியத்தின் மூலம் சுமார் 300க்கும் அதிகமான விசுவாசிகளை தேவன் தந்துள்ளார். அனைவரும் கூடி ஆராதிக்க சரியான இடம் இல்லாமையால் நமது விசுவாசிகள் இணைந்து ஆலயம் ஒன்றினை கட்டிட தீர்மானித்தனர். அவர்களது முயற்சியின்படி 11 இலட்சம் ரூபாயை விசுவாசிகளிடமிருந்து நன்கொடை மூலமாகவும், 6 இலட்சம் ரூபாயை சஹாயத்ரி சமிதி மூலமாகவும் பெற்று ரூ.17 இலட்சத்தில் ஆலயம் ஒன்றினை கட்டி 2025 ஆகஸ்டு 17ஆம் தேதி பிரதிஷ்டை செய்துள்ளனர். இயக்கத்திடமிருந்து எந்த ஒரு பண உதவியும் பெறாமல் முற்றிலும் விசுவாசிகள் தங்கள் ஜெபம் மற்றும் முயற்சியின் மூலம் குஜராத்தில் கட்டப்பட்ட முதல் ஆலயம் இதுவே. தன்னிறைவுப் பெற்ற இத்திருச்சபைக்காக தேவனைத் துதிப்போம். அல்லேலூயா!

**அருள்திரு. பி. வினு,** சஹாயத்ரி பிராந்தியம் – குஜராத்

## மிஷனெரி பிரதிஷ்டை



30.08.2025 அன்று அருப்புக்கோட்டை சி.எஸ்.ஐ. இம்மானுவேல் ஆலய வளாகத்தில் நடைபெற்ற அருப்புக்கோட்டை முன்னேற்றப்பணி மையத்தின் வருடாந்திர மிஷனெரி தரிசன குடும்பக் கூடுகையில் வைத்து நான்கு பணித்தள மிஷனெரிகளின் ஏற்பு ஆராதனை நடைபெற்றது. வாழ்த்துரை வழங்கி, ஏற்பு ஆராதனையை நடத்திக் கொடுத்த சேகர குருவானவர் அருள்திரு. ரஞ்சன் கனகமணி அவர்களுக்கும், ஒத்துழைப்புத் தந்த ஆலய நிர்வாகக் குழுவினருக்கும், தேவ செய்தியளித்த அருள்திரு. வி.டி. ஜாண்சன் மற்றும் தாங்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் இயக்கமாய் நன்றி கூறுகிறோம். இக்கூடுகையில் பங்கெடுத்த சுமார் 200க்கும் அதிகமானோருக்காக தேவனைத் துதிக்கிறோம். தேவனுக்கே மகிமை!

**திரு. இம்மானுவேல்,** முன்னேற்றப் பணி செயலர், அருப்புக்கோட்டை

## தமிழ்நாடு மண்டலம் நடத்தும் வாலிபர் முகாம்

நாள்: அக்டோபர் 2025, 1, 2, 3
நேரம்: புதன் காலை 9.30 மணி முதல் வெள்ளி மதியம் 1 மணி வரை
இடம்: யெகோவாயீரே வளாகம், பெரியமலை.
செய்தியாளர்கள்: **சகோ. காலேப் மார்டீன்** (பெங்களூர்
**சகோதரி. ஜெபா மார்டீன்** (பெங்களூர்)
**சகோ. ஆக்னல்** (பட்டுக்கோட்டை) மற்றும் **FMPB வாலிபர் பிரிவு**
வயது வரம்பு: 15 - 30 வயது வரை
தொடர்புக்கு: 8081853625 / 7092120936 / 9442074732

## திருவள்ளூர் பிராந்தியம் நடத்தும் மிஷனெரி தரிசன குடும்பக் கூடுகை

நாள்: 02.10.2025 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை
இடம்: I.V.R. திருமண மண்டபம், ஆயில் மில், திருவள்ளூர்
செய்தியாளர்: **Rev. G. கிங்ஸ்லி,** FMPB, சென்னை
பணித்தள பகிர்வு: **Rev. ஜாண் பெனின்,** FMPB, சென்னை
தொடர்பு: 9894405442 / 8248976864 / 9710751782 / 9445373833

## தூத்துக்குடி வடக்கு பிராந்தியம் நடத்தும் விசுவாச மகளிர் கூடுகை

நாள்: 02.10.2025 வியாழக்கிழமை காலை 9.30-4.00 மணி வரை
இடம்: கிறிஸ்து ஆலயம், கே.வி.கே நகர் (4th Gate அருகில்) தூத்துக்குடி
தலைமை: **Rev. P. ஜெபவாசகன்,** B.Sc., B.D., M.Th.,
**Rev. Mrs. A. ஒலிம்பா,** B.Sc., B.D., M.Th., (சேகர குருவானவர்கள், கே.வி.கே. நகர்)
செய்தியாளர்: **திருமதி. புனிதா காலேப்**
(பெத்தேல் மிஷன் சபை காட்டத்துறை, குமரி மாவட்டம்)
பணித்தள பகிர்வு: **திருமதி. ரஸ்மிதா வில்சன்,** FMPB, மத்தியப் பிரதேசம்)
தொடர்பு: **திருமதி. புனிதா மெயின்ராஜ்,** 9486452091

## திருவொற்றியூர் பணி மாவட்டம் நடத்தும் பெண்கள் தரிசன கூடுகை

நாள்: 11.10.2025 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
இடம்: ஸ்ரீ மீனாட்சியம்மாள் திருமண மண்டபம்,
ராஜாகடை, திருவொற்றியூர், சென்னை
செய்தி: **திருமதி. ஆல்பி ஹாரிஸ்,** FMPB, சென்னை
பணித்தள பகிர்வு: **திருமதி. ஜெபராணி எபினேசர்** FMPB, சென்னை
தொடர்பு: 9003743407/ 9884868060

மதுரை பணி மாவட்டத்தின்

## பெண்கள் கூடுகை 2025

நாள்: 11.10.2025 சனிக்கிழமை காலை 9.30 முதல் மாலை 4 மணி வரை
இடம்: அல்லேலூயா டவர், K. புதூர், மதுரை
செய்தியாளர்: **திருமதி. வெரோனிகா கிளெமெண்ட்** (கோயம்புத்தூர்)
பணித்தள பகிர்வு: **திருமதி. விமலா டெய்சி** (FMPB, ஜார்கண்ட்)
தொடர்பு: 9786075860 / 9444899301

கே.கே. நகர் பிராந்தியம் நடத்தும்

## ஸ்கேன் குடும்ப கூடுகை மற்றும் மிஷனெரிகளின் பிரதிஷ்டை - 2025

நாள்: 12.10.2025 ஞாயிறு மாலை 4 மணிக்கு
இடம்: கோயில் பிள்ளை ஸ்கூல் வளாகம், ராயலா நகர், 2வது மெயின் ரோடு, ராமாபுரம், சென்னை-89.
செய்தியாளர்: **சகோ. G.P.S. ராபின்சன்** (இயேசு சந்திக்கிறார் ஊழியங்கள்) மற்றும் FMPB **மிஷனெரிகள்**
தொடர்பு: 9445028711 / 9444329829 / 9840598767

விழுப்புரம் & புதுச்சேரி பிராந்தியம் நடத்தும்

## அன்பின் சங்கமம்

இடம்: சி.எஸ்.ஐ. தூய யாக்கோபு ஆலயம், பாண்டி ரோடு, விழுப்புரம்.
நாள்: 12.10.2025 மாலை 5 மணி முதல் 8 மணி வரை
செய்தி: **அருள்திரு. வி.டி. ஜான்சன்,** மதுரை
பணித்தள பகிர்வு: **திரு. ஆபிரகாம்,** உத்கல் பிராந்தியம்
தொடர்பு: 9894082998 / 9994256795 / 8148577287

திருவள்ளூர் மண்டலம் நடத்தும்

## வாலிப தலைவர்களுக்கான சிறப்பு பயிற்சி கூடுகை

நாள்: 2025 அக்டோபர் 18 சனி மாலை 5 மணி முதல் 20 திங்கள் மாலை 4 மணி வரை
இடம்: இறைவனின் தோட்டம், சென்றாயன் பாளையம், பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்
செய்தியாளர்கள்: **அருள்திரு. இ. ராஜன்,** FMPB, சென்னை
**திருமதி. கிறிஸ்டி ராஜன்,** FMPB, சென்னை
**திரு. நத்தானியேல் எட்வர்ட்,** FMPB, திருநெல்வேலி
**திருமதி. ஆலிவ் ஜெனிபர்,** FMPB, திருநெல்வேலி
தொடர்பு: 044-26852200 / 9841936067/9500148303

## தூத்துக்குடி வட பிராந்தியம் நடத்தும் வாலிபர் முகாம்

நாள்: அக்டோபர் 2025, 19, 20, 21 தீபாவளி விடுமுறை நாட்கள்
நேரம்: ஞாயிறு மாலை 4 மணி முதல் செவ்வாய் மதியம் 2 மணி வரை
இடம்: கிங் ஆஃப் கிங்ஸ் ஸ்கூல், CBSE, VGP பன்னீர்புரம், தூத்துக்குடி
செய்தியாளர்கள்: **Rev. D. பால் சாலமோன்,** FMPB, சென்னை
**சகோ. காலேப் மார்டீன்** (பெங்களூர்) **சகோதரி. ஜெபா மார்டீன்** (பெங்களூர்)
**சகோ. ஆக்னல்** (பட்டுக்கோட்டை) மற்றும் FMPB **வாலிபர் பிரிவு**
வயது வரம்பு: 18 - 30 வயது வரை
தொடர்புக்கு: 9443694021 / 7708761119 / 8903434753 / 8681015601

## திருவள்ளூர் மண்டலம் நடத்தும் 37வது விசுவாச மகளிர் மாநாடு

நாள்: 20.10.2025 திங்கட்கிழமை காலை 9.30-4 மணி வரை
இடம்: வசந்தம் திருமண மஹால், சி.டி.எச். ரோடு, பட்டாபிராம்
செய்தியாளர்கள்: **Rev. விஜய் P. ஐசக்,** பொதுச் செயலர் - FMPB
**Rev. பிரபாகர சாரதி,** FMPB
ஒருங்கிணைப்பாளர்: **திருமதி. மணிசெல்வி சாரதி,** மகளிர் பிரிவு - FMPB
பணித்தள பகிர்வு: **திருமதி. மேனகா கோபிகிருஷ்ணன்,** FMPB மத்தியப்பிரதேசம்
தொடர்பு: 044-26852200 / 9003970412

## ஓசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி பணி மாவட்டத்தின் ஸ்கேன் குடும்பக் கூடுகை 2025

இடம்: FMPB யெகோவாயீரே பயிற்சி மையம், பெரியமலை (பெட்டமுகிலாளம்)
நாள்: 21.10.2025 செவ்வாய் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
செய்தியாளர்: **Rev. V.T. ஜான்சன்,** (CSI All Saints Church, Madurai)
பணித்தள பகிர்வு: **Rev. P. தியாகராஜன்,** (FMPB, மஹாராஷ்டிரா)
தொடர்பு: 9789638750 / 9443241077/ 9898539460

## கோலார் பிராந்திய தையல் பயிற்சி திட்டம்

கோலார் பிராந்திய தையல் பயிற்சி திட்டத்திற்கு தேவையான 10 தையல் இயந்திரங்களுக்கான நிதியை பெற்றுக்கொண்டதில் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் இத்திட்டத்திற்கான உங்களது பங்களிப்புகள் பிற பணித்தளங்களுக்கு உதவக்கூடும். இந்த முயற்சியின் மூலம் பயனடையும் குடும்பங்களுக்கு உங்கள் தொடர்ச்சியான ஜெபங்களையும், ஆதரவையும் மனமாற எதிர்பார்க்கிறோம். செப்டம்பர் மாத அறைகூவலில் 15ஆம் பக்கத்தில் ஒரு தையல் மிஷன் விலை ரூ.50,000/- என்பதை ரூ.5,000/- என்று திருத்தி வாசிக்கவும். நன்றி!

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர்

# குஜராத், ஜாவ்டா விடுதி சிறுவர்களுக்கான பயிற்சி



நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜாவ்டா, தூய தாமஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் 13 பேர், சென்னை அயனாவரத்திலுள்ள தூய ஜேம்ஸ் தேவாலயத்தில் 2025 மே 1ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை நடைபெற்ற சிறப்பு பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டனர். இந்த வகுப்புகளுக்கு தூய ஜேம்ஸ் தேவாலய ஆரம்பப்பள்ளி வளாகத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கிய தேவ ஊழியர்களான மறைந்த அருள்திரு. டாக்டர் லாரன்ஸ் ஜெபதாஸ், அருள்திரு. ரூபி லாரன்ஸ் மற்றும் செயலாளர் திரு. நெகேமியா ஆகியோருக்கு நன்றி கூறுகிறோம். அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களில் செல்வி. பி. ஹன்னா எலிசா (இயற்பியல்), திரு. ராஜபாண்டி (வேதியியல்), திரு. ஆர்.சௌந்தர பாண்டியன் & திருமதி. சந்திரா (உயிரியல்), திரு. என். சுந்தர் (கணிதம்), திரு. மோசஸ் சாமுவேல் (ஆங்கிலம்), செல்வி. ரமேனா கீர்த்தி (உந்துதல்) ஆகியோர் அடங்குவர். பிறந்த நாள் மற்றும் திருமண நாள் போன்ற சிறப்பு நாட்களில் உணவு வழங்கிய ஆலய உறுப்பினர்களின் அன்பை நாங்கள் பாராட்டுகிறோம். வார இறுதி நாட்களில் மாணவர்கள் தூய தாமஸ் மலை, சாந்தோம் தேவாலயம், மெரீனா கடற்கரை, குயின்ஸ்லாந்து போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த பயிற்சியின் மூலம் 6 மாணவியரும், 7 மாணவர்களும் பயனடைந்தனர். அவர்கள் 25.05.2025 அன்று ஆலய ஆராதனையில் பங்குபெற்றனர். இதில் திருமதி. மக்தலின் ஐசக், பள்ளியின் சவால்களைக் குறித்து பகிர்ந்துகொண்டார். மண்டல செயலாளர் அருள்திரு. ஐசக் ராஜா தேவ வார்த்தையை பகிர்ந்தளித்தார். மேலும் நமது மாணவர்கள் தங்கள் சாட்சிகளை பகிர்ந்துகொண்டதோடு, தங்களின் சிறப்பு கலாச்சார நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்தினர். அயனாவரம் முன்னேற்றப்பணி பங்காளர்களின் முயற்சியினால் இப்பயிற்சி சிறப்பாக நடைபெற்றது.

**டாக்டர் எடிசன் ரத்தினம்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – அயனாவரம்

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திருமதி. நேசம் எட்வின் (வயது 86) அவர்கள் கடந்த 06.05.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் எமில் அண்ணன் காலத்திலிருந்து சுமார் 58 ஆண்டுகளாக நாசரேத் வட்டாரத்தில் ஜெபக்குழுத் தலைவியாகவும், மிஷனெரிப் பணியை திருச்சபைகளுக்குள் எடுத்துச் சென்று மிகவும் சிறப்பாக, தீவிரமாக தேவனுக்கு பணி செய்தவர்கள். அதிகாலை எழுந்து தேசத்திற்காக, திருச்சபையின் எழுப்புதலுக்காக, மிஷனெரிப் பணிக்காக சீராக ஜெபிக்கும் பழக்கமுடையவர்கள். இப்போதும் நாசரேத் ஜெபக்குழு பணியை அவர்களுடைய மகன் திரு. E. ராஜா சிங் அவர்கள் செய்து வருகிறார்கள். திருமதி. நேசம் எட்வின் அவர்களை இழந்துத் தவிக்கின்ற குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**அருள்திரு. T.Y.P. ஆசீர்,** விரிவுப்பணி செயலர், தூத்துக்குடி தெற்கு



விழுப்புரம் மாவட்டத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னோடி தலைவராக இருந்து, ஆரம்ப நாட்கள் முதல் மிஷனெரி தரிசனத்தை பல சபைகளுக்கும், மக்களுக்கும் எடுத்து சென்ற திரு. பி.ஜே. ஆண்ட்ரூஸ் அண்ணன் அவர்கள் 04.08.2025 அன்று தேவ அழைப்பைப் பெற்று தேவனோடு நித்திய கால வாழ்க்கைக்குள் பிரவேசித்தார்கள். பல ஆண்டுகள் விழுப்புரம் மாவட்டத்திற்கு கௌரவ முன்னேற்ற பணியாளராக நமதியக்கத்தில் ஊழியம் செய்து, நிர்வாக ரீதியாக ஆலோசனைகள் தந்து உதவி செய்தவர்கள். அவர்களுடைய பிள்ளைகள், மருமகள்கள் பாண்டிச்சேரியிலும், விழுப்புரத்திலும் கௌரவ செயலர்களாக இப்பணியை சிறப்பாக செய்து வருகிறார்கள். இவர்களது இழப்பு மிஷனெரி ஊழியங்களுக்கும், திருச்சபைக்கும் பேரிழப்பாகும். அண்ணனை இழந்து தவிக்கும் துணைவியார் திருமதி. விமலா ஆண்ட்ரூஸ் மற்றும் குடும்பத்தின் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. செல்வின் ஜெசுதாஸ்,** விரிவுப்பணி செயலர் – பாண்டிச்சேரி



திரு. ரா. பாண்டியராஜ் அவர்கள் நமது மூத்த மிஷனெரி திரு. ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் மூலமாக நமது இயக்கத்தில் ஜெபக்குழுத் தலைவராக 1993ஆம் ஆண்டு இணைந்தார். மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 32 ஆண்டுகளாக மிஷனெரியைத் தாங்குபவராகவும், மூத்த ஜெபக்குழுத் தலைவராகவும் சிறப்பாக செயல்பட்டு வந்தார். நாகப்பட்டிணம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஜெபக்குழுத் தலைவர்களை உருவாக்கியும், ஜெபக்குழுக்களை ஊக்கப்படுத்தியும் நமது ஊழியத்திற்கு உறுதுணையாக இருந்தார். மேலும் சந்தோஷபுரம், சென்னையிலும் கடந்த மூன்று ஆண்டுகளாய் நமது இயக்கத்தின் ஊழியங்களுக்கு உதவிகரமாய் அதி தீவிரமாக செயல்பட்ட இவர் 04.08.2025 அன்று தனது 72வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய பிரிவால் வாடும் அவரது மனைவி திருமதி. பட்டுஷீலா, இரண்டு மகன்கள், மருமக்கள் மற்றும் பேரக்குழந்தைகள் மற்றும் நமது ஜெபக்குழு அங்கத்தினர்கள் அனைவரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திருமதி. எப்சிபா பிரதீப்குமார்,** முன்னேற்றப்பணி, மாயிலாடுதுறை



சென்னை கே.கே. நகர் பிராந்தியத்தின் மூத்த ஜெபக்குழுத் தலைவர் திரு. ஏ. தாசையன் அவர்கள் தேவ அழைப்பைப் பெற்று கடந்த 26.08.2025 அன்று தனது 88வது வயதில் தேவ ராஜ்யத்தை அடைந்தார்கள். ஆரம்ப காலத்தில் இருந்தே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஜெபக்குழுத் தலைவராக இணைந்து காணிக்கை சேகரித்து கொடுப்பதிலும், ஜெபக்கூட்டம் நடத்துவதிலும் மற்றும் கிராம ஊழியம் செய்து, ஆவிக்குரிய பல நூல்களை எழுதி ஆத்து மாக்களை ஆதாயம் செய்வதிலும் திறமை வாய்ந்தவர்கள். அவர்களை இழந்து வாடும் அவரது பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளின் ஆறுதலுக்காகவும், சமாதானத்திற்காகவும் ஜெபிப்போம்.

**திரு. டி. ஆஸ்டின்,** கௌரவ முன்னேற்றப் பணி செயலர், கே.கே. நகர்.



சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த திரு. டி.எஸ்.எம். மனோகர் அவர்கள் நம் இயக்கத்தின் முன்னேற்றப்பணியில் 1980 முதல் ஈடுபட்டவர். துவக்கத்தில் ஸ்கேன் உண்டியல்கள் மூலம் வியாபாரிகளைச் சந்தித்து, காணிக்கை சேகரித்து வந்தார். 1985இல் இப்பணி விரிவாக்கம் செய்யப்பட்டு இன்றுவரை தோய்ந்து போகாமல் வளர்ந்துகொண்டே வருகிறது. இதற்கு காரணம் அவரது குடும்பம் என்று சொன்னால் மிகையாகாது. வண்ணாரப்பேட்டை சி.எஸ்.ஐ. ஆலயத்தில் உபதேசியராக பல வருடங்கள் பணிசெய்தார். கிராம ஊழியங்களில் மிக ஈடுபாடு கொண்டவர். கடந்த மாதம் 08.09.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அண்ணனுடைய மனைவி, பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திரு. சி. பிச்சைமணி,** கௌரவ விரிவுப்பணி செயலர் – வட சென்னை.

## பகத் இயேசுவின் பக்தனானார்

*மஹாராஷ்டிரா மாநிலத்தின், பாகாபூர் தாலுக்காவிலுள்ள வன்னியபாடா கிராமத்தின் வசித்து வருபவர் பிக்யா. 18 வயதிலிருந்தே குடி மற்றும் தீயப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தார். எனவே குடியிலிருந்து அவர் விடுதலை பெற அவரது குடும்பத்தினர் புத்தாஜி மஹாராஜ் ஆசிரமத்தில் அவரை கொண்டுபோய் சேர்த்தனர். ஆறு வருடங்கள் அங்கிருந்த இவர் தனது வாழ்வை மஹாராஜ்க்கு அர்ப்பணித்து நஜீராக மாறினார். ஆனால் அவரில் எவ்வித மாற்றம் இல்லாததால் பாஹிராம் மாதாஜி ஆசிரமத்தில் மூன்று வருடங்களும், சத்தர்சிங் மஹாராஜ் ஆசிரமத்தில் ஐந்து வருடங்களும் தங்கியிருந்தும் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படாததால் தன் சொந்த ஊருக்கு திரும்பிய அவர் தன்னை ஒரு குருவாக பிரகடனப்படுத்திக்கொண்டார். இந்நிலையில் அவரது மனைவி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு சுகவீனமானார். அவளை சுகப்படுத்த எவ்வளவு முயற்சித்தும் சுகம் கிடைக்காததால் அவரது உறவினர் வீட்டில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். சபையார் அவளுக்காக ஜெபிக்கவே தேவன் அவளுக்கு விடுதலையும், சுகமும் அருளினார். தனது மனைவிக்கு கிடைத்த சுகத்தின் மூலம் அவரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகிறார். 14 வருடங்களாக ஆசிரமத்தில் கிடைக்காத சந்தோஷம், சமாதானம் ஆலயத்தில் இயேசுவின் மூலம் பெற்றுக்கொண்டார். தற்போது இவரது வீடு ஒரு ஆராதனை ஸ்தலமாக மாறியுள்ளது. நஜீராக இருந்த இவர் தேவனின் தீவிர விசுவாசியாக மாறியுள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!.*

# FMPB தலைவர்களுடன், இயக்கத் தலைவரின் சந்திப்பு



செப்டம்பர் 17, 2025 அன்று திருமதி மற்றும் திரு. பர்னபாஸ் இல்லத்தில் துபாய், அபுதாபி மற்றும் ஷார்ஜாவை சேர்ந்த FMPB முன்னேற்றப்பணித் தலைவர்களுடன் FMPB தலைவரின் சந்திப்பு.

## ஆலய பிரதிஷ்டை



கர்த்தருடைய பெரிதான கிருபையால் சென்னை ஆவடி பிராந்தியத்திலிருந்து 13 பேராக இணைந்து 11.08.2025 முதல் 17.08.2025 வரை சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள ஜஷிப்பூர் மாவட்டம் பத்தல்காவ் பிராந்தியத்திலுள்ள பல பணித்தளங்களைப் பார்வையிடவும், ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். மேலும் லுடேக் மற்றும் பத்தல்காவ் சிறுவர், சிறுமியர் விடுதியில் பிள்ளைகளை சந்தித்து ஆவிக்குரிய செய்திகளைக் கொடுத்து, பிள்ளைகளுடைய தேவைகளை சந்திக்க தேவன் உதவி செய்தார். பின்னர் பத்தல்காவ் பணித்தளத்திலுள்ள காந்திஹார் கிராமத்தில் சென்னை ஆவடி பகுதியைச் சேர்ந்த திரு.நேசகுமார் அவர்கள் குடும்பத்தினர் சார்பில் கட்டப்பட்ட கர்மேல் தேவாலயம் 14.08.2025 அன்று தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டை ஆராதனை ஏற்பாடுகளை சிறப்பாக ஒழுங்கு செய்த பிராந்திய செயலர் மற்றும் மிஷனெரிகளுக்கு நன்றி செலுத்துகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. ஜான் டிக்சன்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – ஆவடி

### *திருத்தி வாசிக்கவும்*

33ஆம் பக்கத்தில் ஆலயப் பிரதிஷ்டை 12.07.2025 என்பதற்கு பதிலாக 13.07.2025 என்று திருத்தி வாசிக்கவும்.

# 1 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. யுவனேஷ் T.

## ஜம்மு

### தார்:
**லுன்ஜாலால் ஹாக்கிப் &**
**மேரி நெங்னெய்கிம்**

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ரல்லா கிராமத்தில் பிமல் பிரகாஷ் குடும்பம் மற்றும் தேஷ்ராஜ் குடும்பத்தினர் வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டனர். கடுமையான மழை, வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரழிவுகளின் மத்தியிலும் ஊழியப் பிரயாணத்தில் தேவன் பாதுகாப்பை அருளினார். தார் பணித்தளத்தில் தேவன் தந்து வரும் திறந்த வாசலுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் தேஷ்ராஜ் விடுதலைபெற; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிமல் பிரகாஷ் சுகம்பெற; இப்பணித்தளத்தில் வசிக்கும் மஹாஜன், ஷர்மா, சாம்யார், மஹாசா, ராஜ்புத், மஜ்பி ஆகிய மக்களினங்கள் தேவனின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள; தேவன் அநேக புதிய தொடர்பாளர்களைத் தரவும், ஞாயிறு ஆராதனை, சத்சங் கூட்டங்கள், இரவுக் கூடுகைகள் தொடர்ந்து நடைபெறவும் ஜெபிப்போம்.

### ரியாசி:
**அய்யனார் டேவிட் &**
**மன்பிரீத் கௌர்**

**துதிக்க:** மாலத், அர்னாஸ், கேரல் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். தாலாவாரா கிராமத்தில் குஜ்ஜர் இன மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்துள்ளார். கடந்த வருடங்களில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஊழியம் செய்ய மிஷனெரி குடும்பத்திற்கு உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயற்கைப் பேரழிவினால் வீடுகளையும், தங்கள் ஆஸ்திகளையும் இழந்துத் தவிக்கும் விசுவாசிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் அனைத்து உதவிகளும் விரைவில் செய்துத்தரப்பட; ராஜ்புத், குஜ்ஜர் இன மக்கள் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளத் தடையாயிருக்கும் மூடப்பழக்கங்கள், ஆவிக்குரிய குருட்டாட்டம், சமுதாய பயங்கள் யாவும் நீங்கி அவர்கள் மத்தியில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட; ஞாயிறு ஆராதனை நடத்த தகுந்த இடத்தை தேவன் தந்தருள; மார்பக புற்றுநோயிலிருந்து மிஷனெரியின் தாயார் பரிபூரண சுகம்பெற; மிஷனெரியின் புதிய ஊழிய பொறுப்பில் தேவனின் ஒத்தாசைக்காக ஜெபிப்போம்.

# 2 அக்டோபர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட்சன் ராஜாசிங்
திரு. வீரேந்திர குமார்
திருமதி. சுனிதா வீரேந்திர குமார்
திரு. தேசாய் திலீப்பாய்

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்:

**தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** ஒன்பது புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இரண்டு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். தக்லேஸ் ஆலயத்தில் நடைபெற்ற சிறுவர் கூடுகையில் 18 பிள்ளைகள் உற்சாகத்துடன் பங்குபெற்றனர். விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் விநோத்தின் குடும்பம் 10 வருடங்களுக்குப் பின் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகிறார்கள். தன்னார்வ ஊழியரின் மனைவி அனுரக்ஷாவை பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். நிலச்சரிவினால் வீடு திரும்ப முடியாமல் பாதி வழியில் சிக்கிக்கொண்ட பாவ்தீப் பத்திரமாக வீடு வந்து சேர கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால் எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள தீபா விரைவில் சுகம்பெற; அவேரா மற்றும் காஷாபாத் ஆகிய இடங்களில் ஆலயம் கட்டுவதற்கான ஒப்புதல் விரைவில் கிடைக்க; பிரகாஷ், வர்ஷா, மீனா, திவ்யா, ரீட்டாவின் குடும்பத்தினர் மற்றும் நிஷாவின் கணவர் யாவரும் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட; விசுவாசிகளின் பிள்ளைகள் சமுதாயத்தில் நல்ல தலைவர்களாய் உருவாக வேண்டுமென்ற குறிக்கோளுடன் படிப்பில் கவனம் செலுத்த; மிஷனெரியின் மகன் ஜோயலின் கண் அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

### கர்சோக்:

**பவன் குமார் & பிரபாஷினி தேவி**

**துதிக்க:** பிறவியிலிருந்து இதயத் துடிப்பு சீராக இல்லாதிருந்த சஞ்சயின் மகன் தக்கேஷ் ஜெபத்தின் மூலம் சுகமடைந்தான். அசுத்தாவியின் தாக்குதலினால் அநேக நாட்களாக தூங்க முடியாமல் தவித்துவந்த சம்பா உபவாச ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். உள்ளங்கையில் கொப்பளங்களினால் வேதனைப்பட்டு வந்த அமீன் என்ற சகோதரியை தேவன் குணப்படுத்தினார். பிரீத்தியின் கண்களில் காணப்பட்ட வீக்கம் மற்றும் நீர்வடிதலை குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இருதய பெலவீனத்தினால் அவதியுறும் சகோதரி குஷூம் குணமடைய; உடல் முழுவதும் அரிப்பினால் கஷ்டப்படுகிற சொப்னாவை தேவன் சுகப்படுத்த; ஊழியத்தில் புதிதாக இணைந்திருக்கும் சந்திப் குமாரை தேவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பி, வல்லமையாய் பயன்படுத்த; கடன் பிரச்சனை சம்பந்தப்பட்ட நீதிமன்ற வழக்கில் சஞ்சய்க்கு நியாயம் கிடைக்க தேவனிடம் ஜெபிப்போம்.

# 3 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ராபின்சன் ஹஸ்தக்

**தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி**

**துதிக்க:** தானேதர் ஆலயத்தில் நடைபெற்ற சிறுவர் கூடுகையில் கலந்துகொண்ட சிறுவர்கள் வேத வசனங்களை வாஞ்சையோடு கற்றுக்கொண்டனர். வாகன விபத்தில் சிக்கி இடது கையில் முறிவு ஏற்பட்டிருந்த கிஷ்மிக்கு தேவன் பூரண சுகமருளினார். ஐந்து கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹார்மோன் குறைபாட்டினால் கர்ப்பம் தரிக்க இயலாமலிருக்கும் மதன கோபாலின் மருமகளுக்கு தேவன் அற்புதம் செய்ய; சமீப காலமாக பரவிக்கொண்டிருக்கும் தோல் வியாதி யிலிருந்து விசுவாசிகளை தேவன் பாதுகாக்க; அதிக கனமழையினால் நமது விசுவாசிகளின் நிலங்கள் சேதமடைந்துள்ளது. தேவன் நமது விசுவாசிகளுக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### அம்ரித்சர்:

**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** ககன்தீப் கௌர், பிரியா கௌர் மற்றும் லக்விந்தர் கௌர் ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். ராஜன்சி மற்றும் காசா கிராம ஆலயங்களில் நடைபெற்ற இரண்டு நாள் உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் கலந்துகொண்டு தங்கள் இன மக்களின் இரட்சிப்பிற்காக பாரத்தோடு ஜெபித்தனர். வேலையின்றி தவித்த சுர்ஜித் சிங் ஜெபத்தின் மூலம் நல்ல வேலையை பெற்றுக்கொள்ளும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீபத்தில் பெய்த கன மழையினால் பாதிக்கப்பட்டுள்ள நமது விசுவாசிகளின் குடும்பங்களுக்கு தகுந்த இழப்பீடுகள் கிடைக்க; பால்கலான், பக்கிகலான் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைக்க; பஞ்சாபில் அதிகமாக காணப்படுகிற போதைப்பழக்கம் நம் விசுவாசிகளின் பிள்ளைகளை அனுகாமலிருக்க ஜெபிப்போம்.

**புத்லாடா: பிரதாப் ரஹாங் & ரேஷ்மி**

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அலாம்பூர் மற்றும் பார்டா கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். விசுவாசியின் மகன் ஹர்ப்ரீத் சிங் இராணுவத்திலும், ஹர்ஸ்பிரீத் கௌர் மாநில காவல் துறையிலும் தேர்ந்தெடுக்கப்பட தேவன் உதவி செய்தார். பியான்ட் மற்றும் பார்டா கிராம ஆராதனையில் அநேகர் புதிதாக கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குலானா கிராமத்தில் தொடர்ந்து ஆலயத்திற்கு வரும் விசுவாசிகள் கிறிஸ்துவை அறிக்கையிட தயங்குகின்றனர். தேவன் அவர்களுக்கு தைரியத்தின் ஆவியைத் தந்தருள; விக்ரம் ஜீத், விக்கி, ஷிடல், காஜல் ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; புத்லாடா பணித்தளத்தின் 25ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் தடையின்றி சிறப்பாக நடைபெற; நடைபெறவுள்ள பெண்கள் கூடுகை மற்றம் சத்சங் கூடுகைகள் ஆசீர்வாதமாக நடக்க ஜெபிப்போம்.

# 4 அக்டோபர்

சனி

### சங்ரூர்:

**கிம்பால் திலீப்பாய் &**
**பிராரி ரீட்டாபேன்**

**துதிக்க:** கக்டா மற்றும் சுந்தர்பஸ்தி பகுதி களில் ஜெபத்தின் மூலம் பல தடைகளின் மத்தியிலும் பெரிய அளவில் சத்சங் கூடுகை நடத்த தேவன் உதவி செய்தார். ஆலயம் செல்வதை தடுத்துவந்த பூஜாவின் கணவர் மனந்திரும்பி பூஜா ஆலயம் செல்ல அனுமதித்துள்ளார். நேஹா & குல்தீப்சிங்கின் குடும்பப் பிரச்சனையை நீக்கி தேவன் சமாதானம் அருளினார். பிரேமா மற்றும் ரானோ கௌர் குடும்பத்தினர் சுவிசேஷத் திற்கு வாஞ்சைக் காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜுக்தேவ் பக்கவாதத்தி லிருந்து சுகம்பெற; சரீரத்தில் நீர்கோர்த்து வீக்கத்தினால் அவதியுறும் தூரி ஆலயத்தின் முக்கிய விசுவாசியான சுர்லேகா ராணியை தேவன் குணப் படுத்த; லாங்கோவால் பகுதியில் ஆராதனைக்குழு ஆரம்பிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; பிரிந்து வாழும் பிரேமா & எக்டா குடும்பம் மீண்டும் இணைந்து வாழ ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### பாஸ்பூர்:

**கிறிஸ்டியன் பிரகாஷ் &**
**கோகனி சுமித்ராபேன்**

**துதிக்க:** அநேகர் முதன்முறையாக நற்செய்தியைக் கேட்க தேவன் கிருபை செய்தார். இரண்டு கிராமங்களில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் இரண்டு பேர் தங்கள் வாழ்வை கர்த்தருக்கென அர்ப்பணித்துள்ளனர். குடித்துவிட்டு தன் மனைவியை அடித்து துன்புறுத்தி வந்த குமார்பால் ஜெபத்தின் மூலம் மனந்திரும்பியுள்ளார். நரம்பு பிரச்சனையிலிருந்து சுன்தாவும், வாய் புற்றுநோயிலிருந்து குர்தேவும், பக்கவாதத்திலிருந்து ரேனாவும், ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகின்றனர். மலேரியா மற்றும் டைபாய்டிலிருந்து அஞ்சலியையும், அநேக நாட்களாக அம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஆதித்யா, மஹா, சுத்னா ஆகியோரையும் ஜெபத்தின் மூலம் குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூட்டு அறுவை சிகிச்சை செய்யப்படவுள்ள குர்தேவ் கௌருக்கு தேவன் பூரண சுகமருள; விபத்தினால் முகத்திலும், மூக்கிலும் அதிக காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ள சுனில் என்ற வாலிபனுக்கு தேவன் அற்புத சுகமருள; அடிக்கடி நெஞ்சுவலியினால் அவதியுறும் குர்மித் சிங், மூல வியாதியினால் அவதியுறும் சுந்தரி பெஹன், குறைவான இரத்தத் தட்டுகளினால் பாதிக்கப்பட்டுள்ள 12 வயது லவ்குஷ் ஆகியோருக்கு தேவன் சுகமருள ஜெபிப்போம்.

# 5 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ராக்கி மார்டி

## ஹரியானா

### கிச்சா:
**பிபாபா பானி & பித்திகா நாயக்**

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் ராஜ்குமார் & அமன் தம்பதியினரின் குடும்பப் பிரச்சனை நீங்கி சமாதானத்துடன் வாழ தேவன் கிருபை செய்தார். மணிகாந்த் மற்றும் சுகானி குடும்பங்களில் தேவன் குழந்தை பாக்கியம் அருளி ஆசீர்வதித்துள்ளார். புராண் மற்றும் அவரது குடும்பத்தினர் விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். அறுவை சிகிச்சைக்குப் பின் லக்ஷ்மி நன்றாக நடக்கும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனைத்து விசுவாசிகளும் தவறாமல் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; சிறுநீரக பிரச்சனை மற்றும் காச நோயினால் பாதிக்கப் பட்டிருக்கிற லக்காவிந்தருக்கு தேவன் அற்புத சுகமருள; முதுகுத்தண்டுவட வலியினால் நடக்கயியலாமல் கஷ்டப்படும் மஞ்சித் கௌரை தேவன் குணப்படுத்த; பஹாடி, ராய்சீக், குமானி ஆகிய மக்களினங்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; குருத்துவார் மற்றும் மதவாதிகளின் மூலம் வரும் பிரச்சனைகள் மற்றும் அச்சுறுத்தலினால் ஆலயம் வருவதற்குப் பயப்படும் விசுவாசிகளுக்கு தேவன் பாதுகாப்பையும், தைரியத்தின் ஆவியையும் தந்து, விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க ஜெபிப்போம்.

### தோஷம்: அஜய் பர்டே & ஷைதுல்

**துதிக்க:** குறைந்த இரத்த அழுத்தம், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் அவதியுற்ற பவன் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். வயலில் பூச்சி மருந்து தெளித்துக்கொண்டிருந்தபோது அதன் தாக்கத்தினால் மயக்கநிலைக்குச் சென்ற பான்சிக்காக அவரது குடும்பத்தினர் ஊக்கமாக ஜெபிக்கவே தேவன் அவரை சுகமாக்கினார். சிந்துபாஜ் & மானிஷா குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்தார். கடுமையான வயிற்று வலியினால் கஷ்டப்பட்ட ஆஷாவுக்காக விசுவாசிகள் இணைந்து ஜெபித்தபோது பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலைத் தேடி அலையும் விசுவாசிகளுக்கு தேவன் ஏற்ற வேலை வாய்ப்புகளைத் தந்தருள; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சோம்பாலுக்கு தேவன் சுகமருள; விமல், லக்ஷ்மி, விஜய், தீபக், முகேஷ், பூணம், ஆஷா, லக்ஷ்மண், சுஷ்மா, காந்தா, வாக்கில், சப்னா ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தோஷம், பின்ஜோக்ரா, போஜ்ராஜ், பாலாவாஸ் ஆகிய கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

**6 அக்டோபர்**
**திங்கள்**

## ராஜஸ்தான்

### உதய்பூர்:

### ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். சுதேச ஊழியர் சுஷில் கசோடாவின் குடும்பம் நம் இயக்கத்தில் மிஷனெரியாக இணைந்துள்ளனர். இரண்டு இடங்களில் விசுவாசிகளின் முகாம் மற்றும் மூன்று இடங்களில் பெண்கள், சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான கூடுகை யாவும் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். காச நோயிலிருந்து சுஷில் கோத்ராவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். இரண்டு புதிய குடும்பங்கள் ஆலய ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்து கொள்கின்றனர். விசுவாசி ஹிமான்சிக்கு குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜஸ்தானில் நடைபெறவுள்ள சர்பஞ்ச் தேர்தலில் தமக்கு சித்தமான வர்களை தேவன் தேர்ந்தெடுக்க; டைபாய்டு, டெங்கு, மலேரியா, மூட்டு வலி, மனநோய் போன்றவற்றினால் அவதியுறும் விசுவாசிகளுக்கு தேவன் பூரண சுகத்தைத் தந்தருள; கருச்சிதைவு ஏற்பட்டுள்ள நீலா, லீலா, சோனியா ஆகியோரை தேவன் பெலப்படுத்தி மீண்டும் குழந்தை பாக்கியம் தந்தருள; அசுத்தாவியின் பிடியினால் அவதியுறும் ரமிளா, கமலா, ஹக்ரி, மோனிகா, லலிதா, பாரு, அம்ரிபாய் ஆகியோருக்கு தேவன் பூரண விடுதலை அருள; பலாசியா மற்றும் கோகுண்டா தாலுக்காக்களில் தேவன் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலைக் கட்டளையிட; எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவங்கள் மத்தியில் பீல் இன மக்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதி யாய் நிலைத்திருக்கவும், அவர்கள் மத்தி யில் மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிடவும் ஜெபிப்போம்.

## தேவனால் எல்லாம் கூடும்

*மஹாராஷ்டிரா மாநிலத்தின் ஷிவாலி கிராமத்தைச் சேர்ந்த லலிதா ஒன்பது மாதங் களாக மஞ்சள் காமாலை நோயினால் அவதிப்பட்டு வந்தாள். அவளது பெற்றோர் அவளை சுகப்படுத்தும்படி பகத்திடம் அழைத்துச் சென்றனர். குணமாகாததால் பக்கத்து கிராமத்திலுள்ள வேறொரு பகத்திடம் அழைத்துச் சென்றனர். 10,000 ரூபாய் செலவு செய்தும் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. எனவே இனி அவள் பிழைக்க வாய்ப்பில்லை என்று அவளது கணவர் அவளை விட்டு சென்றார். அவளது பெற்றோர் துலே மாவட்டத்தி லுள்ள மருத்துவமனையில் அனுமதித்து ரூ.60,000/- வரை செலவு செய்தனர். இரண்டு மாதங்கள் மருத்துவ சிகிச்சை அளித்தும் எவ்வித முன்னேற்றமும் இல்லாததால் மருத்துவர்கள் வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். ஷிவாலி கிராமத்தில் நடைபெற்று வந்த ஞாயிறு ஆராதனையில் அவளை கலந்துகொள்ளும்படி விசுவாசிகள் கேட்டுக்கொண்டனர். அதன்படி ஆராதனைக்கு சென்ற லலிதாவுக்காக சுதேச ஊழியர் எண்ணெய் பூசி ஜெபித்து சுவிசேஷம் அறிவித்தார். தனக்குள் ஒரு மாற்றத்தை உணர்ந்த லலிதா அடுத்த வார ஆராதனையிலும் கலந்துகொண்டு விசுவாசத்துடன் ஜெபித்தார். தேவன் அவளது வியாதியை நீக்கி பூரண சுகமளித்தார். எனவே லலிதா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சாட்சியாய் வாழ்ந்து வருகிறார். அல்லேலூயா!*

**7** **அக்டோபர்** செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. விஜய் பிரசன்னா ஐசக்
திருமதி. சரோஜினி நர்சாரி

## டெல்லி

### பட்பர்கன்ஜ்:

**ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** இப்பணித்தளத்தில் நடைபெற்ற ஒருநாள் உபவாச ஜெபக்கூடுகையில் விசுவாசிகள் அனைவரும் இணைந்து தேசத்திற்காக ஒருமனதோடு ஜெபித்தனர். ஹாபூரில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் அநேகர் முதன்முறையாக நற்செய்தி கேட்டனர். வாலிபர் மற்றும் இளம் வாலிபர்களுக்காக நடைபெற்ற கூடுகை மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது. நேஹா மற்றும் காஞ்சனுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். ராம்வதி, அவரது குழந்தை ஆமோஸ் மற்றும் தயானந்த் குடும்பத்தை வியாதியிலிருந்து குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகளின் பயிற்சி மற்றும் சுவிசேஷ ஊழியங்கள் தடையின்றி நடைபெற; திரிலோக்புரி, கல்யாண்புரி, சாஜ்வான் நகர் ஆகிய இடங்களில் சிறிய ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; அன்மோல், ஷாலு அருண், மோனிகா, ரிங்கி, தர்மலிங்கம் குடும்பத்தினர் தேவனின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள; மூன்று வருடங்களாக நரம்பு வலியினால் அவதியுறும் சித்ரா ராஜேஷ்க்கு தேவன் அற்புத சுகமருள; சபைமூப்பர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளரவும், தேவனுடைய ஊழியத்தை உத்தமமாய் நிறைவேற்றவும் ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

### ஜாலவ்ன்:

**கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி**

**துதிக்க:** கடியா கிராமத்தில் நடைபெற்ற முழுஇரவு ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டு உற்சாகத்துடன் ஜெபித்தனர். ரஜினியின் உதிரப்போக்கை தேவன் குணப்படுத்தினார். ஆஷிகி என்பவரை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்கினார். ஹர்கோத்தி மற்றும் கோகுல்புரா கிராமங்களில் விசுவாசிகளின் முகாம் சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ஹெம்லதா மற்றும் தினேஷ் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க; இதயப் பிரச்சனையிலிருந்து ராம்பஹதூர், கல்லீரல் பாதிப்பிலிருந்து குட்டி என்பவர், புற்றுநோயிலிருந்து பிரீத்தி & குல்தீப் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; குனியாபுரா, துசேபுரா, ஜகம்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள ஜெபிப்போம்.

## 8 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அர்விந்த் குஜுர்

### சிக்கந்ரா:
**பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்**

**துதிக்க:** புதிய தொடர்பாளரான ஷிவானி தசைப்பிடிப்பிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். ராம்வீர், ராம்பால், ஜித்தேந்திரா ஆகியோரின் குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். மூன்று கிராமங்களில் பெண்கள் கூடுகையும், நான்கு கிராமங்களில் வேதாகம வகுப்பும் தடையின்றி நடத்த தேவன் கிருபை செய்தார். ஊர்மிளா சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும், குஷும் சுகவீனத்திலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பால்ஹராமௌ ஆலய நிலப்பிரச்சனை நீங்க; எதிர்ப்பாளர்களிடமிருந்தும், அரசியல் வாதிகளிடமிருந்தும் விசுவாசிகள் பாதுகாக்கப்பட; விசுவாசிகள் மற்றும் வாலிபர்கள் தேவனுக்கு உகந்த சாட்சிகளாய் வாழ; அவிரியா துணை மையத்தைச் சுற்றி வாழும் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; சரோஜ் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளவும், ராம்நாத் மற்றும் பிரேம்வதி வியாதிகள் நீங்கி சுகம்பெறவும் ஜெபிப்போம்.

### பொக்ராயன்:
**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** கடந்த மாதம் ஞாயிறு ஆராதனைகள் மற்றும் உபவாச ஜெபங்கள் தடையின்றி நடைபெற கர்த்தர் உதவி செய்தார். இரண்டு வருடங்களுக்குப் பின்பு லாலாமசி என்பவர் மீண்டும் ஊழியத்தில் இணைந்துள்ளார். இப்பணித்தளத்தில் ஊழியம் செய்த அமித் மற்றும் அவரது மனைவி மிஷனெரியாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். நமது விசுவாசியின் மகனுக்கு நாசரேத்தி லுள்ள பொறியியல் கல்லூரியில் படிக்க இடம் கிடைத்துள்ளது. முசாநகரிலுள்ள பகல் நேர பராமரிப்பு மையம் நல்ல முறையில் நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன்னார்வ ஊழியர்களான ராஜ்குமார் மற்றும் லாலாமசியை தேவன் வல்லமையாய் பயன்படுத்த; பணித்தள அனுபவ பயிற்சிக்காக வந்திருக்கும் பியாபால் பாக் & ஷ்ரோபோனி குடும்பத்தை தேவன் ஊழியத்தில் பக்குவப்படுத்த; பிறவியிலிருந்தே பேசமுடியாமலிருக்கும் நமது சபை மூப்பர் ராம்லக்கனின் மனைவிக்கும், சபை மூப்பர் ராஜ்குமாரின் மகள் காயத்ரிக்கும் பேசும் திறனை தேவன் தந்தருள; மச்சா ஆலயத்தின் சுற்றுச்சுவர் மற்றும் பொக்ராயன் பயிற்சி மையத்தின் கட்டிடப்பணிகள் தடையின்றி நடைபெற; காச நோயினால் பெலவீனப்பட்டுள்ள பாக்கியவதிக்கு தேவன் பெலனருள; மழையினால் வீடு முழுவதுமாய் சேதமடைந்துள்ள நமது விசுவாசி நிரஜ்க்கு அரசாங்கத்தின் மூலம் கொடுக்கப்படும் வீடு தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

**9 அக்டோபர்**
**வியாழன்**

### காட்டாம்பூர்:
**ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** சஜன், சுனிதா, அனிஷா, புஷ்பா, ராம்சக்தி ஆகியோரின் குடும்பங்கள் ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். சுனிதா மற்றும் சோனியாவின் குடும்பப் பிரச்சனைகளை தேவன் நீக்கி சமாதானம் அருளினார். புற்றுநோயிலிருந்து சீதாவுக்கு தேவன் சுகமருளினார். எதிர்ப்புகளின் மத்தியில் ஊழியர்களையும், விசுவாசிகளையும் பாதுகாத்து வந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அங்கிதா, ரோஷ்னி, கல்பனா, பூஜா, கங்கா ஆகியோர் முழுமனதுடன் தேவனை விசுவாசிக்க; ஜஹனாபாத் மற்றும் பாவன் ஆலயங்கள் விரைவில் திறக்கப்பட்டு ஆராதனைகள் நடைபெற; ஷிவானி, அனிஷா, சந்தியா, நேஹா, தியான்சிங், மல்கான் ஆகியோரின் சுகவீனம் நீங்கி சுகம்பெற; ஊழியப் பணியில் இளம் தலைமுறையினர் உற்சாகத்துடன் ஈடுபட; எதிர்ப்பாளர்களின் சூழ்ச்சிகளிலிருந்து விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### உதய்நகர்:
**டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா**

**துதிக்க:** சிறையிலிருந்த நமது விசுவாசிகள் ஜெகராம் பாபா, மஞ்சு மற்றும் கிரண் ஆகியோர் ஜாமீன் கிடைத்து விடுதலைப் பெற தேவன் கிருபை பாராட்டினார். தடைகளின் மத்தியிலும் புதன் கிழமை உபவாச ஜெபம் மற்றும் ஞாயிறு ஆராதனைகளை ஆன்லைன் மூலம் தொடர்ந்து நடத்திடவும், அதில் விசுவாசிகள் உற்சாகத்தோடு பங்குபெற்று வருவதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளான ஜெகராம் பாபா, மஞ்சு மற்றும் கிரண் ஆகியோர் மீது போடப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகள் விரைவில் முடிக்கப்பட, அவர்கள் சார்பில் வழக்காடும் மூன்று வழக்கறிஞர்களுக்கும் தேவன் ஞானத்தை அருள; மிகுந்த மனசோர்பில் இருக்கும் தீபக் மற்றும் தினேஷை தேவன் பெலப்படுத்த; சுதேச ஊழியர் மிர்துவுக்கு வேண்டிய பாதுகாப்பை தேவன் அருள; விசுவாசிகள் கேட்கும் கடினமான கேள்விகளுக்கு நமது மிஷனெரிகள் பொறுமையுடனும், ஞானத்துடனும் பதிலளிக்கவும், உபத்திரவங்கள் பெருகிவரும் இந்நாட்களில் மிஷனெரிகளுக்கும், விசுவாசிகளுக்கும் தேவையான மன தைரியத்தையும், பாதுகாப்பையும், சரீர சுகத்தையும் தேவன் நிறைவாய் தந்து அவர்களை பெலப்படுத்த ஜெபிப்போம்.

## 10 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சித்ரா பொன்னுசாமி
திரு. ஹரிபாபு குந்த்ரா
திரு. சாந்து மராண்டி

### சிரியா:
**மகேந்திரன் & புஷ்பம்**

**துதிக்க:** முண்டியா கிராமத்தைச் சேர்ந்த சப்னாவுக்கும், பொச்சம்பா கிராமத்தைச் சேர்ந்த மீராவுக்கும் தேவன் சுகப்பிரசவத்தை அருளினார். சாயிரிபாயின் விவசாயத்திற்கு போது மான தண்ணீர் கிணற்றில் இல்லாததால் ஒரு டம்ளர் நீரை விசுவாசத்துடன் ஜெபித்து கிணற்றுக்குள் ஊற்றினார். அற்புதங்களின் தேவன் கிணற்றில் போதுமான தண்ணீர் பெருகும்படிச் செய்தார். அடிக்கடி வரும் தலைச் சுற்றலினால் சுயநினைவை இழந்து வந்த ஜகாடி கிராமத்தைச் சேர்ந்த பிங்கி ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றார். அசுத்தாவியின் பிடியிலிருந்து பரிமளாவுக்கு தேவன் விடுதலை அருளினார். விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடைந்த மது மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளார். நரம்பு பிரச்சனையிலிருந்து அமர்சிங்க்கு சுக மருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு வருடங்களாக வலிப்பு நோயினால் அவதியுறும் சந்திரசிங்க்கு தேவன் விடுதலை அருள; தோல் வியாதி யிலிருந்து பார்க்கி என்ற சகோதரியை தேவன் குணப்படுத்த; ஜகாடி கிராமத்தில் எதிர்ப்பினிமித்தம் நான்கு வருடங்களாக தடைப்பட்டுள்ள ஆராதனை மீண்டும் துவங்கப்பட; முண்டியா கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந்திரும்பி தேவனை விசுவாசிக்க; சரீரத்தில் கட்டியினால் அவதியுறும் யாதவ்க்கு தேவன் சுகமருள; பருவகால தொற்று நோய்களினால் அவதியுறும் விசுவாசிகளை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### டப்ரா:
**சத்திகந்த் பரிச்சா &**
**சகரிகா பிரதான்**

**துதிக்க:** எதிர்ப்பின் மத்தியிலும் ஞாயிறு ஆராதனை தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்து வருகிறார். விசுவாசிகளின் இரண்டு பிள்ளைகளுக்கு ஜான்சி விடுதியில் சேர்ந்து படிக்க இடம் கிடைக்க தேவன் கிருபை செய்தார். எதிர்ப்பாளர்களிடமிருந்து ஜீப் குழு அங்கத்தினர்களை தேவன் பாதுகாத்தார். இரண்டு இடங்களில் சபை மூப்பர் பயிற்சி நடத்திட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டப்ரா பணித்தளத்தில் எதிர்ப்புகள் தீவிரித்து வருகின்றன. இங்குள்ள கிறிஸ்தவப் பள்ளிகளில் மதமாற்றம் செய்யப்படுவதாகக் கூறி தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் போதகர்களை அடிப்பது போன்ற வன்முறைகள் பெருகி வருவதோடு ஞாயிறு ஆராதனைகள் மற்றும் நற்செய்திப் பணிகள் தொடர்ந்து செய்யமுடியாத சூழ்நிலை உருவாகி வருகின்றது. தேவன் தாமே சூழ்நிலைகளை சாதகமாக்கித் தரவும், இங்கு ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

# 11 அக்டோபர்

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேரி புஷ்பம் டேனியல்
திரு. கஜன் சம்பிரமாரி

## குணா:

### சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** வயலில் வேலை செய்து கொண்டிருந்த ரிக்காமியை பாம்பு கடித்ததினால் அதிக இரத்தம் வெளியேறிய போதிலும் விசுவாசிகள் ஒன்றுகூடி ஜெபித்தபோது தேவன் அவரது ஜீவனைப் பாதுகாத்தார். சங்கரபுரா கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க தேவன் அனுக்கிரகம் பாராட்டினார். கண்களில் நீர் வடிந்து பார்வை மங்கிய நிலையில் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் தவறாமல் பங்குபெற்று ஜெபித்து வந்த நோவல் சிங்கிற்கு தெளிவான கண்பார்வையைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மத தீவிரவாதிகள் கிராமங்கள்தோறும் தலைவர்களை ஏற்படுத்தி ஊழியத்திற்கு இடையூறு செய்து வருவது தடுக்கப்பட; ராதா பாயின் காசநோயை தேவன் குணப்படுத்த; வயிறு மற்றும் கால்களில் வீக்கம் ஏற்பட்டு துன்புறும் கிர்ரேஷ் பரேலாவையும், கால் எலும்பு முறிவினால் நடக்க முடியாமல் கஷ்டப்படுகிற அனில் பரேலாவையும் தேவன் சுகப்படுத்த; இக்கோதியா கிராம ஆராதனையை தடுத்து நிறுத்தி ஊழியர்களை வெளியேற்றிய லக்ஷ்மணன், ஜின்லால், பூரா ஆகியோர் தேவனால் சந்திக்கப்பட; தொடர்ந்து ஆராதனை நடத்த பரேலா கிராமத் தலைவர் அனுமதி கொடுக்க ஜெபிப்போம்.

## தூல்கோட் & நேப்பா நகர்:

### கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** 20 வருடங்களாக பிசாசின் பிடியில் சிக்கித் தவித்து நடக்க இயலாமலிருந்த பாயிலி என்ற சகோதரிக்கு ஊழியர்களின் ஊக்கமான ஜெபத்தினால் தேவன் விடுதலையை அருளினார். பசாலி கிராமத்தில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் 40 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். தேசத்தின் எழுப்புதலுக்காக பாலி கிராமத்தில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டு பாரத்தோடு ஜெபிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் மாதத்தில் நடைபெறவுள்ள வாலிபர் முகாம், மூப்பர் பயிற்சி, பெண்கள் கூடுகை, சிறுவர்களுக்கான வேதபாட வகுப்புகள் யாவும் தடையின்றி நடைபெற; கிறிஸ்துவின் அன்பை ருசித்தவர்கள் இறுதிவரை தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; நேப்பாநகர் பணித்தள ஊழியங்கள் விரிவடைய ஜெபிப்போம்.

# 12 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சோன்பு சிங்சன் G.

## அஸ்ஸாம்

**கோஹ்பூர்: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா**

**துதிக்க:** திலக்பாரா கிராம சபை மூப்பரின் மகள் பிரிசில்லாவுக்கு நர்சிங் படிப்பதற்கு இடம் கிடைக்க தேவன் கிருபை செய்துள்ளார். மூன்று கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டதின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை குறித்து அறிந்துகொள்ளும் பாக்கியம் பெற்றனர். நான்கு இடங்களில் நடத்தப்பட்ட சுவிசேஷ இரவுக் கூட்டங்களில் கிராமத்தினர் அநேகர் கலந்துகொண்டு சத்தியத்தை அறிந்துகொள்ள உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகவீனமாக இருக்கும் சுதேச ஊழியர் மகேஷ் பட்டாரியும், அவரது மனைவியும் பூரண சுகம்பெற்று ஊழியத்தை தொடர்ந்து செய்ய; ஆத்தும ஆதாயப் பயிற்சியில் கலந்துகொண்ட சபை மூப்பர்கள் தங்கள் கிராமங்களில் அநேகரை இரட்சிப்பிற்கு நேராய் வழிநடத்த; இயேசு திரைப்படம் திரையிட திட்டமிட்டுள்ள கிராமங்களில் தடையின்றி திரையிடப்படவும், அதில் திரளானோர் கலந்துகொண்டு தேவனின் அன்பை அறிந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

**லக்கிம்பூர்:**

**ஆரோன்சிங் நர்சாரி & ரீனா**

**துதிக்க:** இரண்டு பேர் புதிதாக தேவனுடைய மந்தையில் இணைந்துள்ளனர். 17 கிராமங்களில் நற்செய்தியினை அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். இரவுக் கூட்டங்கள் மூலம் விசுவாசிகளை உற்சாகப்படுத்த தேவன் உதவி செய்தார். கோனாய்குழி குடும்பத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். ஊழிய பாதையில் தேவன் இம்மட்டும் பாராட்டின எல்லா கிருபைகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள ஆலய பிரதிஷ்டை, படக்காட்சி ஊழியம், விசுவாசிகளின் கூடுகை யாவும் தடையின்றி சிறப்பாக நடைபெற; சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்டுள்ள கோனாய்குழியை தேவன் குணப்படுத்த; விசுவாசத்தில் பின்மாற்றம் அடைந்துள்ள பிபுல் சுங்க்ராங் தேவனன்டை திரும்ப; அஸ்ஸாமின் ஐந்து மாவட்டங்களில் வாழும் மிஸ்ஸிங் இன மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; புதிய தன்னார்வ ஊழியருக்கும், விசுவாசிகளுக்கும் தேவன் ஆத்தும பாரத்தைத் தந்தருள ஜெபிப்போம்.

## நினைவுகூறும் தேவன்

*மத்தியப்பிரதேசம், கர்சோன் பணித்தளத்தின் பட்டியா கிராமத்தில் வசித்து வரும் ரமேஷ் & யசோதா குடும்பம் திருமணமாகி 12 ஆண்டுகளாக குழந்தையின்றி தவித்து வந்தனர். அநேக மருத்துவர்களிடம் சென்று சிகிச்சைப் பெற்றும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. இவர்கள் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு அவரை விசுவாசிக்க துவங்கினார்கள். இதனால் உறவினர்கள் மற்றும் ஊராரின் ஏளனத்திற்கும், பழிச்சொல்லுக்கும் ஆளாயினர். ஆயினும் சோர்ந்து போகாமல் விசுவாசத்துடன் தொடர்ந்து ஜெபித்த வந்த அவர்களின் வாழ்க்கையில் தேவன் அற்புத கிரியை நடப்பித்தார். ராகாலை நினைவுகூர்ந்த தேவன் யசோதாவையும் நினைவுகூர்ந்து கர்ப்பம் தரிக்க செய்தார். தேவன் சகலத்தையும் செய்ய வல்லவர் என்பதற்கு யசோதாவின் வாழ்க்கை சாட்சியாக உள்ளது. அல்லேலூயா!*

## 13 அக்டோபர்
திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அனுஷ் பீட்டர் ஜெபராஜ்
திருமதி. தெபோராள் விஜயராணி எட்வர்ட்

## ஜார்க்கண்ட்

### தீன்பஹறார்:

**நெகேமியா & அனாமிகா பெகு**

**துதிக்க:** விசுவாசி மேரி லக்ராவுக்கு கர்நாடகா மத்திய பல்கலைக்கழகத்தில் உயர் படிப்பு படிக்க இடம் கிடைத்துள்ளது. சுதேச ஊழியரின் தங்கை ரூபினாவுக்கு தேவன் பெண் குழந்தையை தந்து ஆசீர்வதித்துள்ளார். அநேக வருடங்கள் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த விசுவாசி சருவா முண்டாவின் நில வழக்கு முடிவுபெற தேவன் உதவி செய்ததால் ஆலயம் கட்ட தங்கள் நிலத்தின் ஒரு பகுதியை நன்கொடையாகத் தர முடிவு செய்துள்ளனர். அதிகாலை பெண்கள் ஜெபம் தொடர்ந்து நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிலோ ஒராவனின் கர்ப்பப்பை அறுவை சிகிச்சை வெற்றிகரமாய் நடக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும்; சுகவீனமாய் இருக்கும் சாமு ஒராவனின் வியாதியை தேவன் குணப்படுத்த; பித்தப்பை பிரச்சனையிலிருந்து சன்சார்யா லக்ராவையும், ஒற்றைத் தலைவலியிலிருந்து ஜோதி திர்கேவையும் தேவன் குணப்படுத்த; விசுவாசி கிருஷ்ணா சிங்கின் மகன் சோட்டு சிங் படிப்பில் ஆர்வம் செலுத்த; அதிக இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டுள்ள மீனா குமாரிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; புதிய தொடர்பாளரான சஞ்ஜீப், பாசா தேவனை முழுமனதுடன் விசுவாசித்து ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### மால்தோ வாலிபர் ஊழியம்:

**காட்வின் கிருபாகரன் & பிரபா கமலி**

**துதிக்க:** வாலிபர் மத்தியில் நடக்கும் ஊழியத்திற்கு புதிதாக ஆறு உடன் ஊழியர்களை தேவன் தந்துள்ளார். பத்து கிராமங்களில் விழிப்புணர்வு படகாட்சி ஊழியம் செய்திட தேவன் உதவி செய்தார். ஐந்து கிராமங்களில் பின்தொடர்பணி செய்யவும், மூன்று கிராமங்களில் புதிய ஜெபக்குழுக்களை துவங்கிடவும் தேவன் உதவி செய்தார். தன்னார்வ ஊழியர் ஜக்காய் மால்டோவின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். புலம்பெயர்ந்து சென்று வேறு மாநிலத்தில் வேலை செய்து வந்த ரஞ்சித் மால்டோ சுகவீனப்பட்டபோது கிராமத்திலுள்ள அவரது குடும்பத்தினரின் ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றார். விவசாயத் திற்கு போதுமான மழையை பொழியச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பம்டா, இயேசுவே தெய்வமென்று தைரியமாய் அறிக்கையிட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் கோகாகுடியா கிராமத்திலுள்ள மந்திரவாதி முழுமனதுடன் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஒன்பது இடங்களில் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; வரும் நாட்களில் நடைபெறவுள்ள சிறுவர், இளம் வாலிபர் மற்றும் வாலிபர் மேளாக்களின் ஆயத்தப்பணிகள் நேர்த்தியாய் நடைபெற; விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மிஷனெரிக்கு தேவன் விரைவில் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## 14 அக்டோபர்
செவ்வாய்

### பதர்காமா:
**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** ஐந்து பேர் மறுமலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். மடர்கஞ்ச் மற்றும் சில்காரா கிராமங்களில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச கூட்டம் கலந்துகொண்டோருக்கு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. சுஸ்மா வயிறு வீக்கத்திலிருந்தும், அஞ்சலி முதுகு வலி, கை எலும்பு முறிவிலிருந்தும், ரோஹித் ரவிதாஸ் கடுமையான டைபாய்டிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து பிரேம் லதாவுக்கு தேவன் விடுதலை அருளினார். பால்பட்டா ஆராதனையில் புதிதாக கலந்துகொள்ளும் 14 பேருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுஸ்மா தேவி மற்றும் லக்ஷ்மி தேவிக்கு தேவன் சுகப்பிரசவத்தை தந்தருள; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு தன் மனைவியை துன்புறுத்திவரும் சங்கர் ரவிதாஸ் மனந்திரும்ப; பத்து வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் உஜாலா தேவியை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; மிஷனெரியின் தந்தையை நீரிழிவு மற்றும் நெஞ்சுவலியிலிருந்து தேவன் குணப்படுத்த; இதயத்தில் ஓட்டை ஏற்பட்டுள்ள குழந்தை பிஷான் தாஸ், விரை வீக்கத்தினால் அவதிப்படும் மோதிலால், அபிஷேக் & சுரேந்திரா ரவிதாஸ், இரத்தசோகையினால் பாதிக்கப்பட்டுள்ள மனிஷா ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### பர்ஹர்வா:
**மல்லா வித்யாசாகர் & தீபிகா ராணி பானி**

**துதிக்க:** மால் சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பங்கள் தேவனை விசுவாசித்து அவரின் மந்தையில் இணைந்துள்ளனர். ஜிக்டியா என்ற புதிய ஆலயத்தில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபக்கூடுகையில் சுமார் 45 பேர் கலந்துகொண்டு பாரத்தோடு ஜெபித்தனர். பாம்பு கடியிலிருந்து மால்தி மற்றும் மனிஷாவை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். வியாதிகள், தோல்விகள், இழப்புகள் மத்தியிலும் கடந்த மாத ஊழியத்திற்கு உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் 17 கிராமங்களிலும் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தருள; தன் கணவனை இழந்துள்ள சாந்தி தேவிக்கும், தன் மகளை இழந்துள்ள பார்வதி தேவிக்கும் தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் கட்டளையிட; நிலப் பிரச்சனையை சந்தித்து வரும் மெயின் குமார் மற்றும் கிரிஷான் மால்க்கு தேவன் உதவி செய்ய; சஜல்ராய் தேவனை ஏற்றுக்கொள்ள தடையாயிருக்கும் அவரது கணவர் மனந்திரும்ப; சின்ட்டு கல்லீரல் பிரச்சனையிலிருந்து சுகம்பெற; குட்டுராய் மற்றும் நாயன் குமார் மனந்திரும்பி தேவனை விசுவாசிக்க ஜெபிப்போம்.

# 15 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாகி சதீஷ்

**நகர் உந்தாரி: பிபின் பிஹாரி பிரதான் & ஐரானா பரிச்சா**

**துதிக்க:** ஆல்கர் மற்றும் துள்சிதமார் கிராமங்களில் ஆலயம் கட்ட ஒப்புதல் கிடைக்க தேவன் உதவி செய்தார். மூன்று நாள் உபவாச கூடுகையில் அனைத்து விசுவாசிகளும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். ஜெபத்தின் மூலம் மூல வியாதியிலிருந்த ஆரியன் காசி சுகம்பெற்றார். பெண்கள் கூட்டம், சபை மூப்பர் பயிற்சி, இரவுக் கூட்டங்கள் தடையின்றி நடைபெற தேவன் கிருபை செய்தார். அஞ்சலி காசியை குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துள்சிதமார் கிராமத்தில் நடைபெறவுள்ள சிறுவர் கூடுகையில் அனைத்து விசுவாசிகளின் பிள்ளைகள் உற்சாகத்துடன் கலந்துகொள்ள; கரிடா கிராமத்தில் புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; விபத்தினால் இரண்டு வருடங்களாக படுக்கையிலிருக்கும் நமது விசுவாசி லல்லு காசிக்கு தேவன் இரக்கம் பாராட்டி பூரண சுகமருள; புதிய தன்னார்வ ஊழியரான ரீனா தேவி மற்றும் ஜீவன் காசியை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

**லஸ்கர்: ராஞ்சன் காஸ்லா & ரிஸ்மாராணி அபிகல் காரா**

**துதிக்க:** டெங்கு காய்ச்சலிலிருந்து அனிர்மாய் மூர்மு என்ற குழந்தையை தேவன் சுகப்படுத்தினார். சரஸ்வதி சோரன் மற்றும் அகஸ்டினா டுடுவுக்கு வியாதியிலிருந்து தேவன் சுகமருளினார். வீட்டிற்குள் நுழைந்த பாம்பு ஊழியர்களை தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். காய்ச்சலிலிருந்த ஊழியரின் மகள் ராய்சால் ராணியை குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியராக ஊழியம் செய்ய அர்ப்பணித்திருக்கும் பிஷ்வாஜித் மூர்முவை வரும் நாட்களில் தேவன் வல்லமையாக பயன்படுத்த; லஸ்கர் பணித்தளத்தில் ஊழிய விரிவாக்கத் திற்காக எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சந்தோஷ் மூர்மு, ரிமோல் கிஸ்கு மற்றும் ஜித்தேன் சோரன் ஆகியோரின் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### அவசர ஜெபம் வேண்டி

*சமீப நாட்களில் வட இந்தியப் பணித்தளங்களில் கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் ஊழியங்களுக்கு கடுமையான எதிர்ப்புகள் அரங்கேறி வருகிறது. குறிப்பாக உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், ஹரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் நாளுக்கு நாள் எதிர்ப்புகள் தீவிரித்து வருகிறதை நாம் காண்கிறோம். தெற்கு ராஜஸ்தான் துங்கர்பூர் மாவட்டத்தில் தங்கியுள்ள வெளி மாநிலத்தவர் குறித்த விவரங்கள் அறிய நகராட்சியிலிருந்து படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. நமது இயக்கத்தின் ஊழியர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்து ஞாயிறு ஆராதனைகளை கண்காணிக்க கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார்கள். கர்த்தர் தாமே நம் ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் தேவாலயங்களைப் பாதுகாக்கவும், விசுவாசிகளை தேவன் பெலப்படுத்தவும், சவால்களுக்கு மத்தியிலும் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவும் கண்ணீரோடு, பாரத்தோடு தொடர்ந்து ஜெபிப்போம்.*

## 16 அக்டோபர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. விஜயராணி ரூபன் ரவி
திரு. சுச்சாவோ S.

## சத்தீஸ்கார்

### சீத்தாபூர்:
**முத்துக்குமார் & நேத்ராவதி**

**துதிக்க:** 10 ஆண்டுகளுக்குப் பிறகு தெந்துப்பாரா திருச்சபையைச் சேர்ந்த சபைமூப்பர் முன்னா கேர்கேட்டாவுக்கு ஜெபத்தின் மூலம் இரண்டு ஆண் குழந்தைகளைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். விசுவாசி அஜயின் மகன் விபய் லக்டாவுக்கு ஜெபத்தின் மூலம் வயிற்று வலியிலிருந்து தேவன் சுகமருளினார். மான்ஷித், திலீப், பப்லு மற்றும் அம்ரித் குடும்பங்கள் தன்னார்வ ஊழியர்களாய் பணிசெய்ய முன்வந்துள்ளனர். பஜ்ராபரி சபையில் அரசியல் தலைவராக இருந்த நரேஷ் மசி தற்போது ஊழியத்தில் இணைய வாஞ்சை காட்டுகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுக்மணி, நிர்மலா, அஞ்சலி, பஸ்மதி, தாரா, அர்ச்சனா, சுனிதா, பிமலா, ரீட்டா, ஊர்பசி, புஷ்பா, புல் சிதா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; சுர்ஜன் எக்கா, மஹாவீர் குஜுர், சுனில், மனோஜ், லல்லு, சுக்சாய் ஆகியோரை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; நரம்புப் பிரச்சனையிலிருந்து மிலியானிக்கு தேவன் சுகமருள; டேடுகா, சர்பு, போக்சரி, ஒடேம்கேலா, அஸ்காரா, ஜஜாகா சபைகள் விரைவில் பழுதுபார்க்கப்பட; ஆலயம் கட்ட தங்கள் நிலங்களை நன்கொடையாகக் கொடுத்துள்ள விசுவாசிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், சத்துருவின் சூழ்ச்சிகளிலிருந்து தேவன் அவர்களைப் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

### ரகுநாத்பூர் விடுதி:
**தாங் சின் லியான் & உங் தியான்சிங்**

**துதிக்க:** கடந்த மாத ஊழியத்தில் பாதுகாப்பு மற்றும் பிரயாண கிருபைகளை தேவன் அருளினார். சென்னை ஜெபக்குழுவினர் விடுதிப் பிள்ளைகளுக்கு வாட்டர் ஃபில்டர் வாங்கித் தந்துள்ளனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அர்ப்பணமுள்ள சமையல்காரர் கிடைக்க கிருபை செய்தார். சுகவீனமாயிருந்த விடுதிப் பிள்ளைகளுக்கு பூரண சுகம ருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதிக்கு அர்ப்பணமுள்ள வார்டனை தேவன் தந்தருள; புதிதாக இணைந்துள்ள பிள்ளைகள் விடுதி சூழ்நிலைகளை அனுசரித்துச் செல்ல; கல்லூரியில் படிக்கும் அவினாஷ் மற்றும் பிரவீன் குஜுர் படிப்பில் சிறந்து விளங்க; விடுதியில் அநேகப் பிள்ளைகள் தங்கி படிப்பதற்காக புதிய கட்டிடம் கட்ட ஏற்ற இடம் விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

## 17 அக்டோபர்
வெள்ளி

# ஒடிசா

### ஜகன்நாத்பூர்:

**பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** வெளிப்புற சுவிசேஷ ஊழியத்தில் வாலிபர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். சபை மூப்பர் பயிற்சி, முழு இரவு ஜெபம், இரண்டு நாள் உபவாச கூட்டங்கள் யாவும் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். நமது விசுவாசி உமேஷ் பிங்குவா முழு நேர ஊழியத்தில் மிஷனெரியாக இணைந்துள்ளார். இருசக்கர வாகனத்துடன் பெரிய பள்ளத்தில் விழுந்துவிட்ட நமது சுதேச ஊழியர் மோதிலால் தாமசாயை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். மருத்துவர்களால் கைவிடப்பட்ட விசுவாசி கரம்சிங்குக்காக விசுவாசிகள் கூடி கண்ணீரோடு ஜெபித்தபோது அவருக்கு அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகள் பிஜய் திரியா, சுக்ராம் போபோங்கா, டேவிட் போபோங்கா, சன்னி போபோங்கா, கானு லகுரி மற்றும் மூன்று விசுவாச குடும்பத்தினர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகள் விரைவில் முடிக்கப்பட; எதிர்ப்பாளர்களின் சதித்திட்டங்கள் முறியடிக்கப்பட; நக்சலைட்டுகள் வாழும் சோட்டா நகரா காடுகளில் வசிக்கும் சந்தால், ஹோ, கோபே, வோஹர் மற்றும் ஒடியா இன மக்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து வரும் நமது ஊழியர்களுக்கு தேவன் பாதுகாப்பையும், பிரயாண கிருபைகளையும் தந்தருள; அடிக்கடி வலிப்பு நோயினால் அவதியுறும் சுக்லால் லஹுரிக்கும், ஐந்து ஆண்டுகளாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குருவாரி லஹுரிக்கும் தேவன் பூரண சுகமருள; சுகவீனப்பட்டுள்ள சுதேச ஊழியரின் மனைவி சுமித்ரா ஹெம்ரோமுக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

### தென்கனல்:

**அசோக் நாயக் & சுரபி நாயக்**

**துதிக்க:** ஏழு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 22 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். ஆறு புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். அல்சர் பிரச்சனையிலிருந்து டோரிபர்டாவுக்கும், மனநோயிலிருந்து சுந்துரே புர்த்திக்கும் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெவ்வேறு ஆலயங்களில் நடைபெறவுள்ள விசுவாசிகளின் கூடுகை மிகுந்த பலனைத் தர; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரி, சுதேச ஊழியர் மற்றும் தன்னார்வ ஊழியர்களின் குடும்பங்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும், போதுமான சரீர சுகபெலனை தேவன் தந்தருளவும் ஜெபிப்போம்.

# 18 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுமிதா தாஸ் மொஹன்தியர்
திரு. ஸ்ரீதர் மொபிடெனி

## ஜஷிப்பூர்: பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** கொண்டாகர் கிராமத்தில் புதிய ஆராதனைக்குழுவும், பாசகுட்டு கிராமத்தில் ஞாயிறு ஆராதனையும் ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். ஜெபத்தின் மூலம் மீனாக்கி ஹன்ஸ்தாவுக்கு அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். சுருதி புர்த்தி காதில் ஏற்பட்ட தொற்றிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். கீழே விழுந்ததினால் காலில் வீக்கம் ஏற்பட்டு வேதனையுற்று வந்த முசுலிபல்முச்சுவுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது தேவன் பூரண சுக மருளினார். காட்டு யானையிடமிருந்து புதுராம் பிங்குவாவையும், பாம்பு தீண்டாதபடி ஜமுனா கர்வாவையும் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்லீரல் பிரச்சனையிலிருந்து இந்திரஜித் ஹன்ஸ்தாவையும், காச நோயிலிருந்து சரிமா & நர்சிங்போட்ரா வையும், பக்கவாதத்திலிருந்து பௌரா வையும், வலது கால் புற்றுநோயிலிருந்து நாபாசிர்காவையும் தேவன் குணப்படுத்த; குடும்பத்தில் பிரச்சனைகளை உண்டு பண்ணி மனைவியை துன்புறுத்தும் துக்குபோத்ரா மனந்திரும்ப; 10 வருடங் களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்தி ருக்கும் மஜிககராய் குடும்பத்திற்கு தேவன் இரக்கம் பாராட்ட; இரண்டு கால்களினால் நிற்க பெலனில்லாமலும், ஆறு மாதங் களாக பார்வையின்றியும் தவிக்கும் மூன்று வயது அப்ராம் ஹோவுக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

# குஜராத்

## ஜாலோத்: குமார் பால் & அமுதா

**துதிக்க:** சபை மூப்பர் பயிற்சிக் கூடுகை, தேசிய உபவாச ஜெபம் ஆகியவை தடையின்றி நடைபெற்றது. முவாளா கிராமத்தில் வசிக்கும் பிரதீப் பாய் & அருணா பென் குடும்பமாக டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர். கர்த்தரின் கிருபையாலும், ஜெபத்தாலும், சிகிச்சையினாலும் இவர்கள் விரைவில் சுகம் பெற்றனர். பிசாசின் பிடியினால் பீடிக்கப்பட்டு குடும்பத்தில் சமாதானத்தை சீர்குலைத்து வந்த மனீஷ்பாய்க்காக ஒருநாள் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. தேவனுடைய கிருபையால் அவர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையையும், சமாதானத்தையும் பெற்றுக்கொண்டதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோயினால் வேதனையை அனுபவித்து வரும் போஜேலாவிலுள்ள மஞ்சுளா பெனுக்கும், வாகேலாவிலுள்ள ஆசா பெனுக்கும் தேவன் அற்புத சுகத்தைத் தந்தருள; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட பூனாபாய், கல்பேஷ்பாய், சிக்மல்பாய் ஆகியோருக்கு தேவன் இரக்கம் பாராட்ட; அசுத்தாவியினால் பீடிக்கப்பட்டு கெட்ட சொப்பனம் மற்றும் சரீர பாதிப்புகளினால் அவதிப்படும் பால்வா கிராமத்தைச் சேர்ந்த புதிய விசுவாசி தேவ்ஜிபாய் மற்றும் அவரது மனைவி சஜி பெனுக்கு தேவன் விடுதலை அருள; லக்கன்பூர் கிராமத்தில் ஆலயக் கட்டு மானப்பணி விரைவில் தொடங்கப்படவும், விசுவாசிகள் ஒருங்கிணைந்து செயல் படவும் ஜெபிப்போம்.

# 19 அக்டோபர்
ஞாயிறு

## நிஜர் & செலம்பா:
### யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** உபவாச ஜெபம், இரவு கூட்டங்கள், சபை மூப்பர் முகாம், பெண்கள் கூட்டம் யாவும் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். விசுவாசிகளுக்கு போதுமான மழையும், நல்ல சரீர சுகமும் தேவன் தந்தருளினார். நானினல் மற்றும் ஜாம்னி ஆராதனைக் குழுக்களில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியோர் ஜெபத்தின் மூலம் மீண்டும் ஆராதனையில் கலந்துகொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; ஆறு மாதங்களாக மனநோயினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருக்கும் ரேஷ்மா பாய்க்கு தேவன் சுகமருள; வேலை நிமித்தம் பிற மாநிலங்களுக்குப் புலம்பெயர்ந்துள்ள விசுவாசிகள் தேவனுக்குப் பயந்து சாட்சிகளாய் வாழ; உபத்திரவத்தினிமித்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள லக்ஷ்மிகேடா ஆலய ஆராதனை மீண்டும் துவங்கப்பட; திட்டமிட்டுள்ள அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## சூரத்:
### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த ராஜ்குமாரி பென் தன் இயலாமையிலும் ஆலயத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தவர்களுடன் இணைந்து தானும் சுத்தம் செய்ய உதவியதால் தேவன் காய்ச்சலிலிருந்து அவருக்கு பரிபூரண சுகத்தை அருளினார். வியாபாரத்தில் தொய்வு ஏற்பட்டபோதிலும் ராதா பெனின் இரண்டு மகன்களுக்கும் நல்ல வருமானத்தை தேவன் கட்டளையிட்டார். மூன்று இடங்களில் தேசிய உபவாச ஜெபம் நடத்த கர்த்தர் உதவி செய்தார். ஜமுனா நகரில் கட்டப்பட்ட ஆலயம் தேவ நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டது. போலீஸ் காலனி மற்றும் ஊன் பகுதியில் ஆலய ஆராதனை நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுஜித் பாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; விசுவாசத்தினிமித்தம் அண்டை வீட்டாரின் எதிர்ப்பை சந்திக்கும் ஹெமுபெனுக்காக, எதிர்ப்பை தெரிவிப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; 15 வயது மகனை இழந்துள்ள குஷால் பாயின் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதல் அருள; திட்டமிட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும், ஊழியர்களின் சரீர சுகம், மற்றும் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

## 20 அக்டோபர்
திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. மார்த்தா சோரேன்
திருமதி. விஜிதா கிருபாகரன்

### அஹ்வா:
**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.**

**துதிக்க:** ஆறு இடங்களில் வாலிபர் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். 32 கிராமங்களில் பின்தொடர் பணியும், 7 இடங்களில் சதேச ஊழியர்களுக்கான கூடுகையும் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். திருமணமாகி 12 ஆண்டுகளுக்குப் பின் ஜெபத்தின் மூலம் பிரமிளா & ஜெயராம் தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். விஷப் பாம்பு கடியிலிருந்து அனுபெனை தேவன் பாதுகாத்தார். இருசக்கர வாகனத்தில் சென்ற கமலேஷ் பாய் தவறுதலாக பள்ளத்தில் விழுந்தபோது சிறு காயங்களுடன் ஆபத்தின்றி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கீழே விழுந்து நடக்க முடியாமல் இருக்கும் பிரீத்தி பெனுக்கு தேவன் சுகமருளி, மீண்டும் அவளது செவியிலர் படிப்பைத் தொடர; அசுத்தாவியின் பிடியிலிருந்து காலு பென் விடுதலை பெற; சோனி மற்றும் வினேஷ் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ; புதிய தொடர்பாளரான அசோக் பாயை நரம்பு பிரச்சனையிலிருந்தும், ரேஷ்மா, ராஜு, காயத்ரி ஆகியோரை பக்கவாதத்திலிருந்தும் தேவன் குணப்படுத்த; வேலை தேடி ம.பி. மற்றும் ராஜஸ்தானுக்குச் செல்லும் நமது விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் உறுதியாய் இருக்க; புற்றுநோயின் நான்காவது கட்டத்திலிருக்கும் காந்திலால் பாய்க்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

### போடோலி & தபோய்:
**ஏசுபாபு & உஷா**

**துதிக்க:** மூன்று கிராமங்களில் இரவுக்கூடுகையும், பொப்படியா கிராமத்தில் பெண்கள் கூடுகையும் நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இரண்டு பிராந்தியங்களில் பணிசெய்யும் சுதேச ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்க கர்த்தர் உதவி செய்தார். மூன்று நாள் தேசிய உபவாச ஜெபக்கூடுகையில் மிஷனெரிகளும் சுதேச ஊழியர்களும் இணைந்து தேசத்திற்காக ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். தூவாவி கிராமத்தில் மனநிலை பாதிக்கப்பட்டு அலைந்துத் திரிந்த தார்ஜா பெனுக்காக ஊழியர்கள் ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலை அருளினார். தற்போது அவர் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளில் பெரும்பாலானோர் விவசாயிகளாய் இருப்பதினால் வயலில் வேலை செய்யும் போது விஷ பாம்புகளின் மூலம் வரும் ஆபத்துகளிலிருந்து தேவன் அவர்களைப் பாதுகாக்க; விசுவாசிகளின் நிலங்களில் நல்ல விளைச்சலை தேவன் தந்தருள; சிக்கில்செல் என்ற இரத்தசோகையினால் பாதிக்கப்பட்டு அடிக்கடி சுகவீனமடையும் சுதேச ஊழியர் ஹரிஷ் பாய்க்கு தேவன் பூரண சுகமருள; மந்திரவாத கட்டுகளினால் பாதிக்கப்பட்டுள்ள சர்தார் பாய்க்கு தேவன் விடுதலை அருள ஜெபிப்போம்.

## 21 அக்டோபர்
செவ்வாய்

### கவாண்ட்:
**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** உல்வா கிராமத்தில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் 100 பேருக்கு அதிகமானோரும், மகுடாபரி கிராமத்தில் நடைபெற்ற சுதேச ஊழியர் பயிற்சியில் 30 பேரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். ஜமானியா ஆலயத்தில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் கலந்துகொண்டோர் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தனர். 20 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். சங்கர்பாய், கோவிந்த் பாய், தமடியா பாய், சுரேஷ் பாய், சுமோ பென், நிவா பென், உஷி பென், கானஜி பென் ஆகியோரை பாம்பு கடியிலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உலுவா கிராமத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆரம்ப கல்வி மையம் சிறந்த பலனைத் தர, இதற்கான கட்டுமானப் பணிக்கு விசுவாசிகள் உற்சாகமாய் பொருளுதவி செய்ய; அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபத்தோடு காத்திருக்கும் ஷிக்காலி பென் குடும்பத்திற்கு தேவன் புத்திரசந்தானம் தந்தருள; ஒருமாதமாக டைபாய்டு காய்ச்சலினால் கஷ்டப்படும் கவிதா பெனுக்கு தேவன் பூரண சுகமருள; அடிக்கடி சுகவீனப்படும் அயுப் & யாக்குப் என்ற இரட்டை குழந்தைகளுக்கு தேவன் பரிபூரண சுகத்தைத் தந்தருள ஜெபிப்போம்.

### உம்மர்காம்:
**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** இப்பணித்தளத்தில் தேவன் போதுமான மழையைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். விசுவாசி ஹஸ்னா பெனின் மகனது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டோர் இயேசுவின் அன்பைக் குறித்து அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். நான்கு நாட்களாக இரத்த வாந்தியினால் அவதியுற்று வந்த புதிய விசுவாசி நைனா பென் ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந்தார். மண்டு கிராமத்து விசுவாசியான திவ்யா பெனை பாம்பு கடித்தபோது, சபையார் அனைவரும் கூடி ஜெபித்ததின் மூலம் ஆபத்தின்றி பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்ட்வாய் கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி ரமேஷ் உடல் முழுவதும் வீக்கம் கண்டு அவதியுற்று வருகிறார். தேவன் அவரை குணப்படுத்த; வாப்பி ஆராதனையில் கலந்துகொள்ளும் புதிய விசுவாசியான முக்தி பென் மற்றும் சமித்ரா பென் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய; நடைபெறவுள்ள சபை மூப்பர் பயிற்சி மிகவும் பயனுள்ளதாய் அமைய ஜெபிப்போம்.

# 22 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெபராணி அசரியா ராஜ்குமார்
திருமதி. மரிதாய் லியோனா பிரத்யூஷ்

## வசாவி வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:

**தெபோரா விஜயராணி**

**துதிக்க:** வசாவி ஆம்புரி மொழியில் 1 நாளாகமம் 10-23 அதிகாரங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 2 இராஜாக்கள் புத்தகம் சரிபார்க்கப்பட்டுள்ளது. சாத்புரா மற்றும் ஆரவல்லி பிராந்திய சுதேச ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்க தேவன் உதவி செய்தார். விசுவாசி ரோஸ்னிக்கு சிறுநீரகக் கல் பிரச்சனை ஜெபத்தின் மூலம் சுகமானது. வயிற்று புண்ணினால் ஒரு மாதமாக அவதிப்பட்டு வந்த மிஷனெரிக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2 நாளாகமங்களின் மொழி பெயர்ப்புப் பணிக்காக; 1 & 2 சாமுவேல் புத்தகங்களை சரிப்பார்க்கும் மொழி உதவியாளர் தேவ்கி பாய்க்கு தேவன் ஞானமருள; வசாவா திருச்சபைகளின் எழுப்புதலுக்காக; கம்போடியா கிராம சபையிலுள்ள பிரச்சனைகள் நீங்க; நமது விடுதி மற்றும் தலைமைத்துவ மையத்திற்கு அர்ப்பணிப்புள்ள வார்டன் மற்றும் சமையல்காரர் கிடைக்க; அதிக பெலவீனத்தோடிருக்கும் மிஷனெரி சகோதரியின் 87 வயது தாயாருக்கு தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## கீலிபானி, தராம்பூர், கொர்காம், கொர்காம் விடுதி:

**ஜி. குமரன் & ஜெலின் ஜெயா**

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவின் அடியவரானார்கள். இரண்டு இடங்களில் நடைபெற்ற பெண்கள் சிறப்புக் கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். திருமணமாகி 7 ஆண்டுகளுக்குப்பின் சுமித்ராவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருளினார். இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவித்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகம் பழுதடைந்து உடல் வீக்கத்தினால் அவதியுறும் லக்ஷ்மண் பாய் மற்றும் இரத்தசோகையினால் பாதிக்கப்பட்டு மிகவும் பெலவீனமாக இருக்கும் ராம்ஜி பாய்க்கு தேவன் பூரண சுகமருள; சௌரா, பாண்டவகௌடா மற்றும் குந்தியா கிராம விசுவாசிகள் கிரமமாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; கால் வீங்கி கஷ்டப்படும் விக்கின்பாய் குணமடைய; நடக்கவிருக்கிற பெண்கள் மற்றும் மூப்பர் கூடுகை பயனுள்ளதாய் அமைய ஜெபிப்போம்.

## தவறை உணர்த்தும் ஆவியானவர்

*குஜராத், சூரத் பணித்தளத்தில் வசிக்கும் நமது விசுவாசி பூணம் பென், அறுவை சிகிச்சை செய்யப்பட்ட தனது மைத்துனரின் மகள் ரோசனிக்கு உதவி செய்யும்படி மருத்துவ மனையில் அவருடன் தங்கியிருந்தார். ரோசனியின் மூக்கிலும், கழிவு வெளியேற வயிற்றிலும் போடப்பட்டிருந்த டியூப்களைக் கண்டு மனதிற்குள் கேலிசெய்தார். வீட்டிற்கு வந்தப்பின் பூணம் தேவியின் உடல் மிகவும் பாரமாக இருப்பதாக உணர்ந்தார். அப்போது தான் ரோசினியை கேலி செய்ததை நினைவுகூர்ந்து, தன் தவறை தேவனிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டு ஜெபித்தார். அதன்பின் அவரது உடல் மிக இலகுவாய் இருப்பதாக உணர்ந்தார். அல்லேலூயா!*

## 23 அக்டோபர்
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஜெயந்தி கிரேஸ் ஜெபக்குமார்

# தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா:
**மார்குஸ் மால்தோ & சாரா, சந்திரிகாபேன்**

**துதிக்க:** பருவகால தொற்று நோய் களிலிருந்து விடுதிப் பிள்ளைகளை தேவன் பாதுகாத்தார். சுதந்திர தின விழாவில் பஞ்சாயத்து உறுப்பினர் லக்சிபாய் கலந்துகொண்டு பிள்ளை களை உற்சாகப்படுத்தினார். விடுதிப் பிள்ளைகளுக்கு மூன்று நாள் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பட்டது. கடந்த மாதம் விடுதியின் அனைத்து தேவைகளையும் சந்தித்த தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** சுகவீனமாயிருக்கும் விடுதிப் பிள்ளைகளான ஆனந்த் பாய், ஆதித்யா பாய், ஆயுஷ்போயா, ஆயுஷ் பாய், ஆலீஷ் பாய், விரேன் பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; படிப்பில் மந்தமாய் இருக்கும் பிள்ளைகளுக்கு தேவன் ஞானமும், படிப்பில் வாஞ்சை யையும், ஞாபகசக்தியும் அருள ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### பெயிண்ட்:
**அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி**

**துதிக்க:** சொந்த வீடில்லாமல் கஷ்டப்பட்டு வந்த கிருஷ்ணா என்ற விசுவாசி ஜெபித்ததின் பலனாக தேவன் அவருக்கு அரசாங்கத்தின் மூலம் வீடு கட்ட நிலம் கிடைக்க உதவி செய்தார். கடுமையான தலைவலியினால் பாதிக்கப்பட்டு மூக்கிலிருந்து இரத்தம் வெளியேறிக்கொண்டிருந்த ராதே பாய்க்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது தேவன் சுகமருளினார். நான்கு இடங்களில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் கூடி தேசத்தில் பெருகி வரும் உபத்திரவங்களுக்காக கண்ணீரோடு ஜெபிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள சுவர்ணா மற்றும் பாராபடா ஆராதனைகள் தடையின்றி நடைபெற; மூன்று வயதாகியும் நடக்க இயலாமல் பெலவீனமாயிருக்கும் பிரசித் என்ற சிறுவனின் கால்களை கர்த்தர் பெலப்படுத்த; அசுத்தாவியின் பிடியில் சிக்கித் தவிக்கும் சஞ்சனா, கல்பனா, மீரா ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பெயிண்ட் சிறுவர் விடுதியின் கட்டடப் பணிக்கு அரசாங்க அனுமதி கிடைக்க; சிறுவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; ஊழியத்தில் காணப்படும் எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

## 24 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா ஜெபக்குமாரி பர்னபாஸ்
திருமதி. சீத்தாமணி கிஸ்கு

### தடுகோன்: எபிநேசர் சாமுவேல் & ஜோஸ்னா ஜெயராணி

**துதிக்க:** சப்ரி என்ற இடத்தில் புதிய ஆராதனைக்குழு ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் வியாதிகளிலிருந்தும், அசுத்தாவியின் பிடியிலிருந்தும் அநேக விசுவாசிகள் சுகமும், விடுதலையும் பெற்றனர். வயலில் வேலை செய்துக்கொண்டிருந்த கீதா பாயை விஷப் பாம்பு கடித்து விடாதபடி தேவன் பாதுகாத்தார். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த மூன்று பேர் மீண்டும் ஆராதனையில் கலந்துகொள்ள தேவன் உதவி செய்தார். கர்கோன், டுடல், செல்பாரா, ஜுகுலி பகுதி களில் நடைபெறும் ஆராதனையில் புதிதாக அநேகர் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வயிறு வீக்கத்தினால் அவதியுறும் உம்டி கிராமத்தைச் சேர்ந்த பிரக்னியா பாயை தேவன் குணப்படுத்த; விசுவாசியின் பச்சிளம் குழந்தை தியாவிற்கு தலை ஒருபக்க மாக வீங்கியுள்ளது. தேவன் தொட்டு குணப்படுத்த; கேதா, குவர்கெட், செல்பாரா, சிஸ்கேடி, டுடல் கிராமங்களில் தேவனை விசுவாசிப்போர் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; அடிக்கடி சுயநினைவை இழக்கும் ஆய்ஷ்னாவுக்கு தேவன் அற்புத சுகமருள; ஜுகுனி, கேதா, தெல்கேடி ஆகிய கிராமங்களில் விசுவாசிகளுக்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

### தலோடா:
### பரணிதரன் & செல்வராணி

**துதிக்க:** அம்பாபானி கிராமத்தில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்ட சதாத் தேஜிலா வால்வி என்பவருக்கு சிறுநீரகப் பிரச்சனையினால் ஏற்பட்ட உடல் வீக்கத்திலிருந்து தேவன் சுகமருளினார். சத்ரிபாடா கிராமத்தில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்ட 16 வயது மீனாக்ஷிக்கு பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். நடக்க இயலாம லிருந்த கணேஷ் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது நன்றாக நடக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். கேவ்டி கிராமத்தில் ஆராதனை நடத்த கூடாதபடி இருந்து வந்த தடைகளை நீக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு நோயினால் அவதியுறும் தாமினி வசாவேக்கு தேவன் சுகமருள; சாய்கிபாயை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலை செய்ய; 16 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் துர்கா பாய்க்கும், ஐந்து வருடங்களாக காத்தி ருக்கும் செவந்தி பாய்க்கும் தேவன் குழந்தை பாக்கியம் அருள; புதிதாக ஆராதனையில் கலந்துகொள்ளும் ஜின்கிதா மனநோயிலிருந்து சுகம்பெற; சிறுநீரக செயலிழப்பிலிருந்து சதாத் தேஜிலாவுக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## 25 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பிரேமா ராஜதுரை

### கோட்:
**விக்டர் பால்ராஜ் & ஷீலா**

**துதிக்க:** விஷாப்பூர் கிராமத்தில் எட்டு ஆத்துமாக்களை தேவன் தந்து புதிய ஆராதனைக்குழு ஒன்றினை துவங்க உதவி செய்தார். ஆறு மாதங்களுக்குப்பின் சித்தேகானேர் ஆலயக் கட்டுமானப்பணியைத் துவங்க தேவன் கிருபை செய்தார். விதைகள் விதைத்தப்பின் மழையின்றி வறட்சி நிலவிய சூழ்நிலையில் விசுவாசிகள் இணைந்து ஒருமனப்பட்டு ஜெபித்தபோது போதுமான மழையை தேவன் தந்து ஆசீர்வதித்துள்ளார். விபத்தில் சிக்கி அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த விசுவாசியின் சகோதரன் அசோக் மாதவிக்காக ஊழியர்கள் ஜெபித்தபோது, அற்புத சுகமருளி அவர் தானாக சுவாசிக்கவும், பேசவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில மாதங்களாக வயிற்று வலியினால் அவதிப்பட்டு வரும் நானேஷ் உசான்டிக்கு தேவன் அற்புத சுகமருள; இரத்த சோகையினால் ஒரு கை செயலிழந்து அவதியுறும் நந்தா நரோட்டிக்கு தேவன் சுகமருள; கெட்ட கனவு மற்றும் அசுத்தாவியின் பயத்தினால் அவதியுறும் மகேஷ் உசான்டி மற்றும் மார்க்கண்டே ஹஜரே ஆகியோர் விடுதலை பெற; மனநோயிலிருந்து சுனிதா ஹஜாரே மற்றும் ஜமுனாபாயை தேவன் குணப்படுத்த; புதிதாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

### மோல்கி:
**ரூபன் டுடு &**
**ருக்மணி ஹெம்ரோம்**

**துதிக்க:** மூன்று மாதங்களாக நிற்கவும், நடக்கவும் முடியாமலிருந்த மக்கர்குண்ட் கிராமத்தைச் சேர்ந்த சிங்கா என்பருக்காக சுதேச ஊழியர் ஜெபித்தபோது தேவன் சுகமருளினார். ஒருமாதமாக கர்ப்பப்பை பிரச்சனையினால் அவதிப்பட்டு வந்த லீலா ஜெபத்தின் மூலம் குணமானார். விசுவாசத்தில் பின்வாங்கிபோன முர்ஜி மற்றும் பூலா கிராமத்தைச் சேர்ந்த சிங்காவுக்காக சபையார் ஜெபித்தபோது அவர்கள் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிக்கில்செல் அனிமியாவி லிருந்து கீதாபாயையும், சிறுநீரகத் தொற்றிலிருந்து ரோமிலா பாயையும், மூட்டு வலியிலிருந்து தம்னியா பாயையும், கண் பிரச்சனையிலிருந்து லீலா பாயையும் தேவன் சுகப்படுத்த; உமிலா பாய், உடியா, கௌரி ஆகியோருக்கு தேவன் புத்திர சுவிகாரம் தந்தருள; வலதுகையின் பெருவிரலில் நகசுத்தி ஏற்பட்டு வேதனை அனுபவித்துவரும் யாதவ் என்ற சிறுவனை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

**26 அக்டோபர்**
ஞாயிறு

## கர்நாடகா

### முண்ட்காட்:
**கோன்கா கிரி பாபு &**
**லூர்து மேரி**

**துதிக்க:** விசுவாசி தாரப்பாவை பாம்பு கடித்துவிடாதபடி தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இந்திரா நகரில் நடைபெற்ற வேதபாட வகுப்பில் அநேகர் கலந்துகொண்டனர். அசுத்தாவியின் பிடியினால் சுகவீனப்பட்டிருந்த ஸ்வப்னா ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். அநேக ஆண்டுகளாக குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த ஹனுமப்பாவுக்கு ஜெபத்துடன் கொடுக்கப்பட்ட தேவ ஆலோசனைகளின் மூலம் அவர் குடியிலிருந்து விடுதலைப் பெற்றார். கீழே விழுந்ததால் கை எலும்பில் முறிவு ஏற்பட்ட மக்கேகிரி என்ற வயதான தாயாருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்வோர் தேவனின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள; சபை மூப்பர்கள் ஆத்தும ஆதாயப் பணியில் உற்சாகத்துடன் ஈடுபட; நடைபெறவுள்ள பெண்கள் கூடுகை மிகுந்த பலனைத் தர; மழைக்காலத்தில் வரும் தொற்றுநோய்களிலிருந்து விசுவாசிகளை தேவன் விலக்கி பாதுகாக்க; மிஷனெரி கிரிபாபுவை நீரிழிவு நோயிலிருந்து தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

### மாலூர்:
**சாமுவேல் பெபர்தா**

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்த யாமலம்மாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். நீண்ட நாட்கள் ஏறெடுத்த ஜெபத்திற்குப் பலனாக மிஷனெரி சாமுவேலுக்கு நவம்பர் 25ஆம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இப்பணித்தள பொறுப்பை புதிதாக ஏற்றுள்ள மிஷனெரிக்காகவும், கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெறவும் உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியைக் கேட்டவர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; விசுவாசத்தில் பின்மாற்றம் அடைந்துள்ளோர் மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் வேரூன்றி வளர; கடன் பிரச்சனையில் சிக்கியுள்ள விசுவாசிகளுக்கு தேவன் விடுதலை அருளவும், வீட்டார் மற்றும் கிராமத்தினர் மூலமாக புதிய விசுவாசிகள் சந்திக்கும் எதிர்ப்புகள் மறைய; மாலூர் பணித்தளத்தில் புதிதாக கட்டப்படவுள்ள ஆலயத்தின் கட்டுமானப்பணி விரைவில் துவங்கப்படவும், அதற்கான தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபிப்போம்.

## 27 அக்டோபர்
திங்கள்

### நிட்குண்டி:
**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** இரண்டு வருடங்களாக பிசாசின் பிடியில் சிக்கித்தவித்த சாந்தனாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். ஆறு மாதங்களாக வலது காலில் வேதனை அனுபவித்து வந்த மீனாக்ஷிக்கும், இருமலினால் கஷ்டப்பட்டு வந்த ஹுஷேனுக்கும் சுக மருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பமாயிருக்கும் மீனாக் ஷிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; ஆறு வருடங்களாக புற்றுநோயினால் அவதிப்பட்டு வரும் சுசிலா பாய்க்கு தேவன் அற்புத சுகமருள; கல்லீரல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் ஆபத்தான நிலையிலிருக்கும் எல்குரேஷ், ஆறு மாதங்கள் வலிப்பு நோயினால் அவதியுறும் 9ஆம் வகுப்பு படிக்கும் சமர்த் ஆகியோருக்கு தேவன் இரங்கி பூரண சுகமருள; குடிப்பழக்கத் திற்கு அடிமைப்பட்டு கடன் பிரச்சனை யில் சிக்கித்தவிக்கும் மகன்தேஷ்க்கு தேவன் விடுதலையும், இரட்சிப்பும் அருள ஜெபிப்போம்.

### ஷிக்காவ்:
**நரேந்திரா குமார் & காஜல்**

**துதிக்க:** எட்டு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். இரண்டு வருடங்களாக காதில் அதிக இரைச்சலினால் அவதிப்பட்டு தூங்க முடியாமல் மனதளவில் பாதிக்கப்பட்ட பார்வதிக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் தேவன் அவருக்கு பூரண சுகத்தை அருளிச்செய்தார். வயிற்று கட்டியிலிருந்து அர்ப்பித்தாவுக்கு தேவன் பூரண சுகமருளினார். கர்ப்பப்பை பிரச்சனைக்கு நான்கு முறை அறுவை சிகிச்சை செய்தும் சுக மாகாத நிலையில் ஆலயத்திற்கு வந்து ஜெபித்த ஷோபாவுக்கு, அதற்குப்பின் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை மூலம் தேவன் பூரண சுகம் அருளினார். எழுப்புதல் முகாமில் பங்குபெற்ற அநேகர் தங்கள் வியாதிகளிலிருந்து சுகம் பெற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்துடன் ஆலயத் திற்கு வந்து ஜெபிக்கும் சுமா, புஷ்பா, கவிதா, பவித்ரா, லக்ஷ்மி ஆகியோருக்கு தேவன் புத்திர சந்தானம் அருள; தங்கள் வாழ்வை தேவனுடைய ஊழியத் திற்கென்று அர்ப்பணித்துள்ள விநாயக், சோனி, சுவர்ணா, மகேஷ், புஷ்பா, பல்லவி, கணேஷ், அக்ஷாய் ஆகியோரின் ஆவிக்குரியத் தடைகளை தேவன் நீக்கி அவர்களை வல்லமை யாய் பயன்படுத்த; பசவராஜ், ஆனந்த், சுரேஷ், ரூபா, ரேணுகா, அனுஷா, பவித்ரா, சுஜதா, லக்ஷ்மி, தாரா ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் செயல்படும் மதவாத இயக்கங்கள் தேவனால் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

# 28 அக்டோபர்
செவ்வாய்

**ஷிரஹட்டி:**
**ஆஷா பிராப்தா பால் &**
**தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** குடலிறக்கத்தால் நடக்க முடியாமல் அவதிப்பட்டு வந்த ஆனந்துக்கு, அறுவை சிகிச்சை மூலம் தேவன் பூரண சுகமருளினார். அநேக நாட்களாக சரீரத்திலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டு வந்த பூஜாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலையை அருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த மாதம் வீட்டைவிட்டுச் சென்றுள்ள விசுவாசி பிரேமாவின் கணவர் மனந்திரும்பி மீண்டும் வீடுதிரும்ப; இரண்டு வாரங்களாக அசுத்தாவியின் பிடியினால் அவதிப் படும் கிரிஜாம்மாவுக்கு தேவன் விடுதலை அருள ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

**தாமலச்செருவு:**
**ஜாண் டேவிட்ராஜ் (ஓய்வு) &**
**ஞானசேகரி,**

**துதிக்க:** வீராசாமி என்பவருக்கு டயாலிசிஸ் செய்யும்போது அதிக இரத்தம் வெளியேறி சுயநினைவை இழந்தார். அவரது மனைவி விசுவாசத் துடன் ஜெபிக்கவே சிறிது நேரத்தில் நினைவு திரும்ப தேவன் உதவி செய்தார். அதிக வயிற்று வலியினால் கஷ்டப்பட்ட சுப்பிரமணிக்கு எண்ணெய் பூசி ஜெபித்த போது ஆண்டவர் அற்புத சுகமருளினதால் ஆலயத்தில் சாட்சி பகிர்ந்தார். வீட்டுக் கதவின் மேல் இருந்த பாம்பை கவனியாமல் அதன்மேல் கைவைத்த ரெபேக்காம்மாவை பாம்பு தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். பிரிந்து வாழ்ந்த சுகாசினி & குருவய்யா குடும்பத்திற்காக ஜெபித்தபோது தேவன் அக்குடும்பம் இணைந்து வாழ உதவி செய்தார். பாபிரெட்டிகாரிபள்ளியில் புதிய ஆராதனைக் குழு துவங்க தேவன் உதவி செய்தார். குடிப்பழக்கத்திலிருந்து பாலசுப்பிரமணியை விடுதலையாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனைக்கு வருவதை தடைசெய்து, அடித்து துன்புறுத்துவதோடு விக்கிரகங்களை வழிபட நிர்ப்பந்திக்கும் நமது விசுவாசி எஸ்தர் லாவண்யாவின் கணவர் ஜானகி ராம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; வீட்டாரால் எதிர்ப்பை சந்தித்து வரும் விசுவாசி சாவித்ரி, லக்ஷ்மி தேவி, சின்ன பாப்பம்மா ஆகியோரின் குடும்பத்தினர் தேவனின் அன்பினால் தொடப்பட; கணவனை இழந்து தவிக்கும் ஜோதியம் மாவின் ஆறுதலுக்காக; பக்கவாதத் தினால் பாதிக்கப்பட்டுள்ள ராஜேந்திர னுக்கு தேவன் பூரண சுகமருள; கொத்தப் பேட்டையில் ஆராதனை நடத்த ஏற்ற இடம் கிடைக்க; ரெபேக்கா, பிரிஸ்கில்லா, கீதா, மரியா, கிரேனா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

## 29 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹட்நெயில்ஹிங் தல்சாகம்

# தமிழ்நாடு

### தலைமைத்துவ பயிற்சி மையம் – பெரியமலை: பாபுராஜ் & மேபல்

**துதிக்க:** சீதாபுரம் கிராமத்தில் இயேசு திரைப்படம் திரையிட தேவன் கிருபை செய்தார். ஐந்து கிராமங்களில் சிறுவர் கூட்டங்கள் நடத்த கர்த்தர் உதவி செய்தார். கூடுவான்சேரி மற்றும் பெங்களூர் ஜெபக்குழுவினர்கள் நமது முதல் பணித்தளத்தை பார்வையிட்டுச் சென்றனர். குடிக்கு அடிமைப்பட்டிருந்த தவமணிக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மாதப்பன் ஜெபத்தின் மூலம் காய்ச்சலிலிருந்து சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் கேட்ட செல்லன், குமரன், கலா, மாதப்பன், செல்வம், தவமணி ஆகியோர் இயேசுவே மெய்யான தெய்மென்று விசுவாசிக்க; ஒரு வருடமாக காதுகேளாமையினால் கஷ்டப்படும் செல்லனுக்கு செவித்திறனை தேவன் தந்தருள; விசுவாசிகளின் மத்தியில் தேவன் ஒருமனதின் ஆவியைக் கட்டளையிட; பெட்டமுகிலாளம் ஆலயத்தில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிடவும், புதிய ஆத்துமாக்களை தேவன் தந்தருளவும் ஜெபிப்போம்.

### செங்கம்: கே.எஸ். ஜாஷ்வா

**துதிக்க:** மூன்று பிராந்தியங்களில் பணிசெய்யும் சுதேச ஊழியர்களுக்காக நடைபெற்ற ஒருநாள் குடும்பக் கூடுகையில் 66 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். கூடுதுரைபட்டி, மொரப்பூர் ஆலயத்தில் ஆத்தும ஆதாயப்பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. நமது விசுவாசிகள் தங்கள் சாட்சியின் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி பிராந்தியங்களில் நடைபெறவுள்ள சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி மிகுந்த பலனைத்தர; சாத்தனூர், மன்டகலத்தூர், மாடாம்பூண்டி, சுண்டக்கா பட்டி, பந்தாரஹல்லி, இன்டூர், குருவரெட்டியார், எக்கன்டாஹல்லி ஆகிய கிராமங்களில் நடைபெறவுள்ள சபை மூப்பர் பயிற்சியில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொண்டு பயன்பெற ஜெபிப்போம்.

### *ஜெபம் ஜெயம் தரும்*

*குஜராத் மாநிலம், ஜலோட் பணித் தளத்தின் மாதுவா கிராமத்தில் வசிக்கும் சஹானு பெனுடைய காலின் பெரு விரல் மற்றும் சிறு விரலில் புண் ஏற்பட்டு நடக்கமுடியாமல் கஷ்டப்பட்டு வந்தாள். அவளுடைய குடும்பத்தார் அவளை மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்று அதிக பணம் செலவழித்தும் சிறிதளவேனும் சுகம் கிடைக்கவில்லை. விசுவாசிகளான அவர்களது உறவினர் ஒருவர் அவளை ஜெபக் கூடுகைக்கு அழைத்து வந்தார். ஊழியர் மற்றும் விசுவாசிகள் இணைந்து அவளுக்காக தொடர்ந்து ஜெபித்து வந்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அவருக்கு பூரண சுகமருளி நன்றாக நடக்கும்படி கிருபை செய்தார். அல்லேலூயா!*

# 30 அக்டோபர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. எஸ்தர் ஜான் டேவிட்சன்

## வெட்டவலம்:
**பிரைட் ஜெயக்குமார் & பியூலா**

**துதிக்க:** ஓலைப்பாடி ஆலயத்தில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்திலும், சிறுவர் நிகழ்ச்சியிலும் அநேகர் கலந்துகொண்டனர். ஆவூர், கலைய சொரத்தூர் கிராமங்களில் முதன்முறையாக சிறுவர் கூட்டங்கள் நடைபெற்றன. சாத்தனூர் ஆலயத்தில் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முத்துவின் மனைவி மற்றும் மகன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; வெளிப்புற சுவிசேஷ ஊழியத்திற்கு எல்.சி.டி. ப்ரொஜெக்டர், பி.ஏ. சிஸ்டம் போன்ற தேவைகளை தேவன் சந்திக்க; நடைபெறவிருக்கும் பெண்கள் கூடுகையில் அநேகர் கலந்துகொள்ள; அன்னுகுமலை, பண்ணையூர், சின்னஓலைபாடி கிராமங்களில் தடையின்றி சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

## இளம்பிள்ளை: செல்வகுமார் R.
**வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்**

**துதிக்க:** மஞ்சள் காமாலையினால் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வந்த சிறுவனுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பூரண சுகம ருளினார்; விசுவாசத்தில் பின்தங்கியிருந்த சரண்யா குடும்பம் மீண்டும் ஆலயம் வர தேவன் உதவி செய்தார். மேரி மற்றும் சுஜாதாவுக்கு கல்லூரியில் படிக்க இடம் கிடைக்க தேவன் உதவி செய்தார். விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாகிவரும் வெங்கடேஷ்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெருமாள், குமார், தன்ராஜ், கிருஷ்ணன் ஆகியோர் குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற; திருச்சபையின் இளம் வாலிபர் மற்றும் வாலிபர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ தேவன் கிருபை தந்தருள; அழகம்மா, மாரியம்மா, மகேஷ்வரி, ஜோதி, நீலா, வீரராகவன், பெருமாள், விக்னேஷ் ஆகியோர் இயேசுவை அறிக்கையிட இருக்கும் தடைகள் நீங்க; காணாமல் போன அழகம்மாவின் மகன் பத்திரமாய் திரும்பிவர; விசுவாசிகளின் குடும்பங்களில் உள்ள கடன் பிரச்சனை, சமாதான குறைவுகள் நீங்கவும், இரட்சிக்கப்படாத நபர் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## யெகோவா யீரே

*குஜராத் மாநிலம் சூரத் பணித்தளத்தில் வசித்து வரும் நமது விசுவாசி வினோத் பாய், நடைபெறவுள்ள ஆலயப் பிரதிஷ்டை விழாவிற்காக ஏழு லிட்டர் சமையல் எண்ணெய் வாங்கிக் கொடுப்பதாக பொருத்தனை செய்திருந்தார். ஆனால் அவற்றை வாங்க அவரிடம் போதுமான பணம் இல்லை. அவரும், அவரது மனைவியும் தங்கள் பொருத்தனையை நிறைவேற்ற தேவன் தங்களுக்கு உதவிடவேண்டு மென்று ஜெபித்தனர். அவர்கள் ஆச்சரியப் படும் விதமாக ஒருநாள் அவரது வீட்டிற்கு வந்த ஒருவர் அவரிடம் ரூ.2000/- கொடுத்துவிட்டு விழாவின் தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளும்படி கூறினார். அதன் மூலம் அவர்கள் ஆலய பிரதிஷ் டையின் விருந்துக்கு 7 லிட்டர் எண்ணெய் வாங்கிக்கொடுத்து தங்கள் பொருத்தனையை நிறைவேற்றினார்கள். தேவைகளை சந்தித்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

# 31 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுச்சானோ யந்தன் த்சாங்சே

## அஞ்செட்டி:
### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** விசுவாசியின் மகன் மூவேந்திரனை பயங்கரமான மின்சார விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். நமது விசுவாசி ரம்யாவை ஏழு ஆண்டுகளுக்குப் பின் ஜெபத்தின் மூலம் புத்திர சுவிகாரத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். காளை மாடு முட்டியதால் கால் எலும்பு பாதிக்கப் பட்டிருந்த மங்காவுக்கு ஜெபத்தின் மூலம் பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் பிள்ளைகளான பிரபு, பிரவின், அஷ்வின் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; சிறுநீரகப் பிரச்சனையினால் அவதியுறும் கீதா & அஜித், வயிற்றுப் புண்ணினால் அவதியுறும் ரேணுகா & கமலம், நடக்க முடியாமல் கஷ்டப்படும் சகிலா, நாசகி, அன்னாள் ஆகியோரை தேவன் குணப்படுத்த; ஏஞ்சலின், சாந்தி, ஜெயந்தி, கவிதா, ஸ்ரீதர், பவானி, செந்தில் ஆகியோரின் குடும்பங்களிலுள்ள கடன் பிரச்சனை நீங்கவும், குடும்பத்தில் தேவன் சமாதானம் அருளவும் ஜெபிப்போம்.

### சந்திரபட்டி: அர்ச்சனா மோகன்

**துதிக்க:** பாலைதோட்டம் கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் உதவி செய்தார். சந்திரபட்டி கிராமத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டனர். குழு ஊழியம், இரவு ஜெபம், சிறுவர் ஊழியம் நடத்திட கர்த்தர் உதவி செய்தார். மிஷனெரி அர்ச்சனாவின் அல்சர் பிரச்சனை ஜெபத்தின் மூலம் சுக மானதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்திரபட்டி கிராமத்தின் ஆலய பத்திரம் விரைவில் கிடைக்க; சக்திவேல் & சுருத்தி குடும்பத்தில் குழந்தையின்மை யினால் ஏற்படும் குடும்பப் பிரச்சனை களை நீக்கி, தேவன் குழந்தை பாக்கியம் அருள; தானியேலுக்கு நல்ல வேலை கிடைத்து குடும்பத்தின் கடன் பிரச்சனை நீங்க; போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள அரவிந்த் அதிலிருந்து விடுதலை பெறவும், குடும்பத்தில் தேவன் சமாதானம் அருளவும் ஜெபிப்போம்.

## கெஞ்சும் ஜெபம் வேண்டி

*ஒடிசா மாநிலம், ஜகன்நாத்பூர் பணித்தளத்தில் சபை மூப்பராயிருக்கும் விவேக் சுண்டி சந்தைக்குச் சென்று திரும்பும் வழியில், அவரை கொலை செய்வதற்காக மறைந் திருந்த சமூக விரோதிகள் அவரை கடுமை யான ஆயுதங்களால் தாக்கினர். தேவனு டைய அளவற்ற கிருபையால், வலியுடன் அங்கிருந்து தப்பித்து வீடு வந்து சேர்ந்த அவர் சுயநினைவிழந்தார். அவரது குடும்பத்தார் உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டுச்சென்று சிகிச்சை அளித்தனர். தற்போது அவர் சுகத்துடன் உள்ளார். அவரது ஜீவனைக் காத்த தேவனைத் துதிப்போம். நமது பணித்தளங்களில் இதுபோன்று ஆபத்துகளை சந்தித்து வரும் நமது விசுவாசிகள், ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகளின் பாதுகாப்பிற்காக அனுதினமும் ஊக்கத்தோடு ஜெபிப்போம்.*

GO INTO ALL THE WORLD AND PREACH THE GOSPEL TO ALL CREATION

**friends missionary prayer band**

Go or Send

To tend the olive shoots- the second generation believers

# WANTED Teachers

## WE ARE HIRING

**PASSIONATE AND QUALIFIED TEACHERS**

**School at Jharkhand (Pandeni)**

Mathematics / Hindi / History / PET

**School at Gujarat (Jhawda)**

Physics / Chemistry


### WHY JOIN US?

- It is an opportunity to serve our Lord Jesus Christ through your profession for a few years in your lifetime
- This is an investment for The Lord's Kingdom's sake in the life of young believers.
- An opportunity to transform communties by giving good education to them.

### WHO CAN APPLY

- A candidate who is born again and with a Missionary heart who are willing to stay on campus
- A candidate with good knowledge of the subject
- A candidate with a good communication skill in English

Join our team as we are involved in shaping the future of the children from the marginalised society!



**Salary for Teachers**

Any UG degree with BEd. - Rs.25000/-

Any PG degree with BEd - Rs. 27000/-

Send your Resume to the HRD

**hrd@fmpb.org**

*For further details please contact:* **FMPB,** 29, High School Road, Ambattur, Chennai 53. ☎ 044-26570404 / 26573353

**412**
**மிஷனரி ஆல்பம்**



# அருட்திரு. பி. வினு & திருமதி. சுகிமலர்

தமிழ் நாட்டின் கடைக்கோடியான கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரிஞ்சகோணம் என்ற ஊரில் மறைந்த திரு. பரமானந்தம் & திருமதி. சுசிலா தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக 28.02.1988 அன்று அருட்திரு. பி. வினு பிறந்தார். சிறுவயதில் தாயாரின் கண்டிப்பின்பேரில் ஆலயத்திற்குச் சென்ற இவர் எட்டாம் வகுப்பு படிக்கும்போது நாலுமாவடியில் நடைபெற்ற ஆவிக்குரிய கூட்டத்தில் கலந்துகொண்டார். அக்கூட்டத்தில் ஏசாயா 10:27இன் மூலம் தேவன் அவருடன் இடைபட்டதால் தன் பாவத்தை அறிக்கை செய்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அதன்பின் ஆவிக்குரிய வாழ்வில் உற்சாகம் பெற்று பிறரையும் உற்சாகப்படுத்தி வந்தார். ஒருநாள் வடஇந்திய ஊழியத்தைக் குறித்த நிகழ்ச்சி ஒன்றினைக் கண்ட இவர், தேவன் தன்னையும் ஊழியத்திற்கு அழைப்பதாக உணர்ந்தார். பள்ளிப் படிப்பிற்குப் பின் சுவிசேஷ ரத ஊழியத்தில் இணைந்தார். அதன் மூலம் இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சென்று வந்ததால் வட இந்தியாவில் ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரத்தைப் பெற்றார். எனவே 01.07.2006இல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். ஊழிய பயிற்சிக்குப் பின் குஜராத்தின் லுசாடியா பணித்தளத்தில் டுங்ரா கரேசியா மக்கள் மத்தியில் தனது ஊழியத்தை ஆரம்பித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் ஆண்டித்தோப்பு கிராமத்தில் வசித்து வந்த திரு. சொர்ணப்பன் & திருமதி. சொர்ணபாய் என்பவர்களுக்கு மூத்த மகளாக சகோதரி சுகிமலர் 26.07.1988இல் பிறந்தார். 2006இல் சேலம், டேனிஷ்பேட்டையில் நடைபெற்ற மாநில முகாமில் கலந்துகொண்ட போது தேவனின் அழைப்புப் பெற்று முழுநேர ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தார். பள்ளிப் படிப்பிற்குப் பின் 2010இல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக இணைந்தார். ஊழியப் பயிற்சிக்குப்பின் ஜார்கண்ட் மாநிலத்தில் கங்குபாடா சிறுமியர் இல்லத்தில் தனது ஊழியத்தை ஆரம்பித்தார். 19.10.2011 அன்று அருள்திரு. பி. வினு & சகோதரி சுகிமலர் திருமணத்தில் இணைக்கப்பட்டனர். அதன்பின் குடும்பமாக டுங்ரா பீல், வசாவி, வார்லி, குக்னா ஆகிய மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தனர். தற்போது சஹாயத்ரி பிராந்தியத்தின் செயலராக பொறுப்பேற்று ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்தமகன் ரிச்சர்ட்சன் (29.08.2012) 8ஆம் வகுப்பும், இளைய மகன் ஜெப்ரிசன் (22.03.2017) 3ஆம் வகுப்பும் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இவ்வூழியரின் குடும்பம் மற்றும் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

Regd. Newspaper for India No.17759/69

போ (அ) அனுப்பு

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# கர்நாடக மாநில முகாம் 2025

**இடம்**

**இந்தியா கேம்பஸ் குரூசேட் ஃபார் கிரைஸ்ட்**
என்னூர் ரோடு, லிங்கராஜபுரம், பெங்களூர் - 560 084.

**தேதி**

**அக்டோபர் 11-12**
சனி - காலை 8.00 முதல்
ஞாயிறு - மாலை 7.30 வரை

**கருப்பொருள்** இவர்களிலும் அதிகமாய் (யோவான் 21:15)

## சிறப்புச் செய்தியாளர்கள்

- அருட்திரு. Dr. வின்சென்ட் வினோத் குமார், பேராயர், KCD (துவக்கவுரை)
- Dr. ஜூலியன் சுந்தர்சிங்
- அருட்திரு. I.K. ஆபிரகாம்
- அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
- சகோ. பிரைட்டன் அன்பு, (வாலிபர்களுக்கு)

### முகாமின் தரிசனமும் செயல்முறையும்

- இறுதிக்கட்டளை புத்துயிர் பெறவேண்டும்.
- இயேசுவின் சீஷர்களுக்குள் சுவிசேஷப்பணியின் வாஞ்சை அதிகரிக்க வேண்டும்.
- சாட்சியாயிருப்பதற்கும் சுவிசேஷப்பணியில் ஈடுபாடு கொள்வதற்குமான அர்ப்பணிப்பு புதுப்பிக்கப்பட வேண்டும்.

### இலக்கை அடையும் வழிமுறைகள்

- மிஷனரியாகச் செல்லவும், ஜெபிக்கவும், தாங்கவும் அகத் தூண்டுதல் பெற்ற புதிய பங்காளர்களை கண்டுபிடித்தல்
- ஒவ்வொரு உறுப்பினரையும் ஒவ்வொரு குடும்பத்தையும் சுவிசேஷப் பணிக்காக ஜெபிக்கவைப்பது.
- புதிய ஜெபக்குழுக்களை உருவாக்கி இளந்தலைவர்களை ஆயத்தப் படுத்துதல்.




## FMPB - KARNATAKA SNEHALAYA

# 173, 4th Cross, Chikkanappa Layout, Byrathi, Kothanur, Bengaluru - 560 077.
☎: **Rev. Elangovan** - 9902288750, **Rev. Justin** - 7889050020, **Bro. Ananda Kumar** - 9686436937, **Rev. Raja (Hubballi)** - 9036671342, **Rev. Daniel Vijayaraj (KGF)** - 9886327316, E-mail: elangovan@fmpb.org

**ஜெபியுங்கள், பங்குபெறுங்கள் & ஆசீர் பெறுங்கள்**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***